உ

சிவமயம்

புடைநூலும்

(சிவப்பிரகாசம்)

பன்னிரு சூத்திரங்களும்



உமாபதி சிவம்

ஆசிரியர்:
முனைவர் ர.வையாபுரி எம்.எ.,பிச்டி.,

வெளியீடு: சைவசித்தாந்த சபை ஈரோடு.

இரா. மீனாட்சி
சிந்தும் அடியார்
வழிபாட்டுக்கு
ஈரோடு.

உ

சிவமயம்

புடை நூலும்

(சிவப்பிரகாசம்)

பன்னிரு சூத்திரங்களும்

ஆசிரியர்;

பேராசிரியர்

முனைவர் **ர. வையாபுரி.** எம்.ஏ., பிஎச்டி.,

கோவை

வெளியீடு :

சைவசித்தாந்த சபை

ஈரோடு

உ

சிவமயம்

புடை நூலும்

(சிவப்பிரகாசம்)

பன்னிரு சூத்திரங்களும்

ஆசிரியர்;

பேராசிரியர்

முனைவர் **ர. வையாபுரி.** எம்.ஏ., பிஎச்டி.,

கோவை

வெளியீடு :

சைவசித்தாந்த சபை

ஈரோடு

நூல் குறிப்பு

நூலின் பெயர்	:	புடைநூலும் பன்னிரு சூத்திரங்களும்.
உரையாசிரியர்	:	முனைவர் ர.வையாபுரி. எம்.ஏ.,பிச்டி.,
நூல் வகை	:	நூல் அமைப்பு பற்றிய ஆய்வு
நூல் உரிமை	:	சைவசித்தாந்த சபை -ஈரோடு.
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு : டிசம்பர் 30, 2007.
நூல் அளவு	:	21 செ.மீ X 14 செ.மி.
பக்கங்கள்	:	156 + 24.
எழுத்து	:	ஸ்ரீ 12 புள்ளிகள்
தாள்	:	21. 3 கி. கி. சிர்பூர் லாப்டி கிரீட்டிங் பேப்பர்
படிகள்	:	1000
வெளியீட்டு எண்	:	7
வெளியீடு	:	சைவ சித்தாந்த சபை 9-பி,முத்துசாமி சந்து , இரண்டாவது தளம், கைக்கோளன் தோட்டம், ஈரோடு -638 001 அலை பேசி : 94432 51731
ஒளி அச்சுக்கோர்வை - நூல் வடிவமைப்பு	:	சித்தாந்தச் செல்வர் சு.மாணிக்கவாசகம்
அச்சிட்டோர்	:	சிவா கிராபிக்ஸ. 99, நெசவாளர் குடியிருப்பு, திருமுருகன்பூண்டி [அ.நி] திருப்பூர் -641 652 அலை பேசி: 98940 50402

விலை : ரூபா. 60

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23- ஆவது
குரு மகா சன்னிதானம்
சீர் வளர் சீர்
சிவப்பிரகாச தேசிய
பரமாச்சாரிய சுவாமிகள்
அவர்கள்

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்.
தொலை பேசி எண் :
04364 - 232021

நாள் : 15 - 12 - 07

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க.

அருள் வாழ்த்துரை

"நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே."

- அப்பர் தேவாரம்.

சைவசித்தாந்தப் பேராசிரியர் முனைஞ்வர் சிவத்திருவாளர் ர. வையாபுரி அவர்கள் **"புடைநூலும் பன்னிரு சூத்திரங்களும்"** *என்ற நூலினை இயற்றியிருத்தல் கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.*

புடைநூலாகிய சிவப்பிரகாசம் பன்னிரு சூத்திரப் பகுப்புடையதாகச் செய்யப்பட்டுள்ளதா என்பதனை நூலாசிரியர் நுணுகி ஆய்ந்துள்ள விதம் பாராட்டத்தக்கது.

முதல் நூல் வழி நூல்களின் கருத்துக்களோடு சிறிதும் மாறுபடாமல் அதேசமயம் சூத்டீணீரப் பகுப்பு, இயல்பகுப்பு, அதிகரணப்பகுப்பு ஆகியன இல்லாமல் அருளப் பெற்றது புடைநூலாகிய சிவப்பிரகாசம் என்ற கருத்தினை நூல் ஆசிரியர் நன்கு நிறுவியுள்ளார். இதன் பொருட்டு முதல்நூல் வழிநூல் புடைநூல் குறித்தும் இவற்றோடு தொடர்புடைய செய்திகள் குறித்தும் பல இலக்கண மேற்கோள் விளக்கங்களுடன் நூல் ஆசிரியர் விளக்கியுள்ள முறை மிகச்சிறப்பானது.

இந்நூலினை அன்பர்கள் நன்முறையில் கற்றுத் தெளிவார்களேயானால். சித்தாந்த மரபு, இலக்கணமரபு குறித்துத் தெளிவு பெறலாம் என்பது உறுதி.

சிவத்திரு ர. வையாபுரி அவர்களின் சிவத்தொண்டுகள் மேன்மேலும் தழைத்துச் சிறந்திட வேண்டு மென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

திருவாவடுதுறை ஆதீனம்
* *
திருவாவடுதுறை

பெறுநர் :
சிவ. பி. வெங்கடாசலம் அவர்கள்,
அமைப்பாளர், சைவசித்தாந்த சபை,
9–பி, முத்துசாமி சந்து ,
கைக்கோளன் தோட்டம்,
ஈரோடு – 638 001 செல் : 94432 51731

உ

சிவமயம்

முன்னுரை

புடைநூலும் பன்னிருசூத்திரங்களும் என்னும் இந்நூல்

1. நூல்வகைகளுள் புடைநூல் என்றொருவகை உண்டா?
2. அதற்குக் கூறும் இலக்கணம் வரையறையானதா?
3. மெய்கண்ட நூல்களுள் சிவப்பிரகாசம் புடைநூலா?
4. அது சிவஞானபோதம், சிவஞானசித்தியார் போன்று சித்தாந்த சைவத்தத்துவஞானத்தைப் பன்னிரு சூத்திரமாகப் பாகுபாடு செய்து உணர்த்துகின்றதா?
5. பலகலையும் என்னும் பாடலின் வடிவம் யாது ? பொருள் யாது?

என்பவற்றை ஆராய்கின்றது.

இஃது ஒருவகையில் புதுமையான ஆராய்ச்சியே. நூலில் சொல்லப்படும் பொருளும் அதனைச் சொல்லும் முறையுமே நமக்கு வேண்டுவன.

எனினும்,

அகத்தியம், தொல்காப்பியம், நன்னூல் என்பவை தோன்றிய வரலாற்றையும் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் தோன்றிய வரலாற்றையும் ஒருங்கிணைத்து நோக்குகின்றபொழுது சிவஞானசித்தியார் வழிநூல் இலக்கணம் உடையதா? சிவப்பிரகாசம் புடைநூல் இலக்கணம் உடையதா? என்னும் வினாக்கள் நான் சைவசித்தாந்தம் பயிலத் தொடங்கிய காலத்திலிருந்தே என்மனத்தை அரித்துக் கொண்டிருந்தன.

சான்றோர்கள் மரபாகக் கூறிவரும் கருத்தில் ஆராய்ச்சி செய்ய மனம் துணியவில்லை. மனத்தில் புதைந்து கிடந்த மேற்கூறப்பட்ட வினாக்கள் அண்மைக்காலத்தில் மீண்டும் தலைதூக்கின. அதற்குக் காரணம் வருமாறு;-

1. இரண்டாண்டுகளுக்குமுன் என்மாணாக்கர் புலவர் திரு இலக்குமபதிராஜ். M.A., என்பவர்க்கு உமாபதிசிவம் அருளிய நூல்களை-கோயில் புராணம் உட்பட - பாடம் சொல்லநேர்ந்தது

2. அண்மையில் என்மாணாக்கர் புலவர் திரு கு.சோ.முருகன் M.A.,Med., என்பவர் உமாபதிசிவம் சிவப்பிரகாசம் செய்ததோடு மேலும் ஏழுநூல்கள் செய்தது ஏன்? என்ற வினாவை எழுப்பினார். இதுபற்றி அவருடன் சற்றேறக்குறைய ஒருமணிநேரம் பேச நேர்ந்தது.
3. அண்மையில் அன்பர் திரு சு.மாணிக்கவாசகம் என்பவருடன் சுவாமிநாத தேசிகர் தசகாரியம் பற்றிப் பலநாள், பலகோணத்தில் உரையாட நேர்ந்தது. அந்த உரையாடலில் பலகலையும் என்னும்பாடலும் இடம்பெற்றது.

எல்லாவற்றுக்கும் மேலாகக் காஞ்சிபுரம் சுவாமிகள் சிவப்பிரகாசம் என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையில் சிவப்பிரகாசம் சிவஞானபோதம் கூறும் பன்னிரு சூத்திரப் பொருளைக்கூறுகிறது ஆனால் சிவஞானபோதம் போல் பன்னிரு சூத்திரங்களாகப் பகுத்துக் கூறவில்லை எனவும் பலகலை என்னும் பாடலும் பன்னிருசூத்திரக்கருத்து எந்தெந்தத் திருவிருத்தத்தில் தொடங்குகின்றது என்பதனையே கூறுகிறது எனவும் எழுதியுள்ள கருத்து எனக்கு மிகவும் துணையாகநின்றது. சுவாமிகளின் உரையை நான் பல ஆண்டுகளாகப் படித்தும் சிந்தித்தும் பழகிவருகிறேன்.

காஞ்சிபுரம் சுவாமிகளை மனத்தில் இருத்தியே நான் இச்சிறிய ஆராய்ச்சி நூலினை எழுதியுள்ளேன். ஆராய்ச்சி சரியான திசையில் செல்கிறதா? முடிவுகள் ஏற்கத்தக்கனவாக உள்ளனவா? என்பவற்றை மெய்கண்ட நூல்களையும் தமிழிலக்கண நூல்களையும் கற்றவர்களின் கருத்துக்கு விட்டுவிடுகிறேன்.

பல ஆண்டுகளாக மனத்தில் கிடந்த எண்ணத்துக்கு நூல் வடிவம் கொடுத்துவிட்டேன் என்ற அளவில் நான் அமைதி அடைகின்றேன்.

வழக்கம்போல் **ஈரோடு சைவசித்தாந்த சபையினர்** இந்நூலை வெளியிடுவதற்கு ஏற்றுக் கொண்டனர். இவர்கள் என்னையும் ஒருசைவசித்தாந்தியாக ஏற்றுக்கொண்டு ஈரோடு நகரில் மெய்கண்ட நூல்களையும் திருமுறைகளையும் பாடமாக நடத்தும் பணியினை என்மேல் சுமத்தியுள்ளனர். இச்சபையினர் அனைவருக்கும் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொள்கிறேன்..

குறிப்பாக இச்சபைக்கு வழிகாட்டியாக இருந்து நெறிப்படுத்தி நடத்திவருகின்ற சைவத்திரு **கயிலைமணி V.M.பாலுசாமி ஐயா** அவர்களுக்கு நன்றியும் வணக்கமும் உரியன.

இவர் காட்டும் வழியில் நின்று அன்பர்கள் பலருடைய ஆதரவுகளையும் பெற்று இச்சபையினை மெய்வருத்தம் முதலியனபாராமல் சைவசித்தாந்த வளர்ச்சியையே கருத்தில் கொண்டு இச்சபையில்பணியாற்றி வருகின்ற அமைப்பாளர் சைவத்திரு **சிவ பெ. வெங்கடாசலம்** அவர்களுக்கு என்நன்றியும் வணக்கமும் உரியன. இவர்களுக்கு உறுதுணையாக நின்று ஆதரவளிப்பவர்களுக்கும் உடனிருந்து பணியாற்றுபவர்களுக்கும் என்நன்றியும் வணக்கமும் உரியன.

இந்நூல்களுக்கு ஆசியுரை வழங்கியருளும் திருவாவடுதுறை ஆதீனம் 23 ஆவது குருமகா சந்நிதானம் **சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கு** வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை நுணுகி ஆய்ந்து நல்லதொரு ஆய்வுரை வழங்கிய முனைவர் **கோ. ந.முத்துக்குமாரசுவாமி** M.A.,BL PhD.,அவர்களுக்கு எனது நன்றியும் வணக்கங்களும் உரியன.

இந்நூலினை எழுதிமுடிப்பதற்கு உறுதுணையாக இருந்து வேண்டும் செய்திகளை நினைவூட்டியும், இதனைக் கணினி அச்சில் பதித்தும் நூல்வடிவம் அமைத்தும் உதவிய சைவத்திரு **சு.மாணிக்கவாசகம்** அவர்களுக்கு எமது இனிய வாழ்த்துக்கள்.

மெய்கண்ட சந்தானம் வாழ்க.
நமச்சிவாய மூர்த்திகள் குருமரபு வாழ்க.
சித்தாந்த சைவம் ஓங்குக.

கோவை -26
10-1-2007

அன்பன்,
ர.வையாபுரி.

உ
சிவமயம்

சிவக்குடில் அன்பன்
ஞான கான சரஸ்வதி
முனைவர் **கோ. ந. முத்துக்குமாரசுவாமி** எம்.எ., பில்., பி.ச்டி.,
முன்னாள் முதல்வர், சாந்தலிங்கர் அறிவியல் தமிழ் கல்லூரி, பேரூர்.

மகிழ்வுரை
(அறிமுக ஆய்வுரை)

கமாபதி கமலன் தேடிக் காணரும் பொருளைக் கண்டு
சுமாவிருந் தடிய ருய்யச் சிவப்பிர காசஞ் சொன்ன
எமார்வமெய்க் குரவன் தில்லை யிறைவனுக் கன்பன்
உமாபதி சிவனற் பாத முளத்தினி லிருத்தி வாழ்வாம்.

கவியரசு கு. நடேசக்கவுண்டர்.

புடைநூல்

புடைநூல் என இந்நூலில் குறிக்கப்படுவது மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றான, உமாபதி சிவம் அவர்களால் அருளப் பெற்ற தவப்பிரகாசர்கள் போற்றும் சிவப்பிரகாசம் ஆகும். மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் முதனூல் என்றும் அவர்மாணாக்கராகிய அருள்நந்திசிவம் அருளிய சிவஞானசித்தியார் வழிநூலென்றும் அவருடைய சந்தானத்தில் வந்த உமாபதிசிவனார் அருளிய சிவப்பிரகாசம் சார்பு-புடைநூல் என்றும் அழைக்கும் மரபும் இந்நூல்கள் பற்றிய ஆதீன சம்பிரதாயங்களும் சைவ உலகில் வழங்கி வருகின்றன. இச்சம்பிரதாயம் பற்றிய ஆய்வும், சிவப்பிரகாசம் நூலமைப்பு பற்றிய ஆய்வும் இந்நூலில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

சம்பிரதாயமும் மரபும்:

காலப்பழமை உடைய சமுதாயத்தில் சம்பிரதாயத் திற்கும் மரபுக்கும் மரியாதையும் மதிப்பும் அளிக்கப்படும். மொழி, இலக்கியம், கலை, பண்பாடு இன்னோரன்னவற்றில் காலப் பழமைக்கும் நிகழ்வுப் புதுமைக்கும் ஊடகமாக இருந்து

தொடர்ச்சியை அளித்து வருவதுசம்பிரதாயம் அல்லது மரபேயாகும். **மரபுநிலை திரியா மாட்சியவாகி** என்னும் தொல்காப்பியத் தொடருக்கு; வரலாற்று முறைமை திரியாத மாட்சியவாகி - என்று ஆன்றோர் பொருளுரைத்தனர். சம்பிரதாயம் அல்லது மரபு திரியின் - பிறிது பிறிதாய் - தொடர்பு அற்றுப் பொருள் அழிந்துபோம் என அஞ்சினர்.

இந்நூலாசிரியரும் மாபாடிய வகுப்புக்களில் சம்பிர தாயத்தை மதிக்க வேண்டும் என்றும் சம்பிரதாயம் வேறு ஆராய்ச்சி வேறு என்றும் பலகாலும் கூறுவார்.சிவஞானபோதம், மொழிபெயர்ப்புநூல் என்பது, சம்பிரதாயம். இஃது மொழிபெயர்ப்பு அன்று, முதனூலே என்பது ஆராய்ச்சி.

சம்பிரதாயத்துக்கு அடிப்படை:

இச்சம்பிரதாயத்தை வலியுறுத்தினோர் சைவசித்தாந்தத் தத்துவத்துறையின் ஞானச்சுடராய் விளங்கினோரே.

சான்றாக எம் குருநாதர், காஞ்சிபுரம் தொண்டை மண்டலவாதீனம் 229 ஆவது குருமகா சந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் கூறியருளியது ஈண்டு நினைவு கூறத்தக்கது.

சிவஞானபோதத்தை முதனூலெனச் சாதிக்கும் அறிஞர், இத்திருவிருத்தத்துள் (உலகுடையநாயனார் கழிநெடில் -10) முந்து மாகமத்தை யருட்டுறை யண்ணல் மொழிபெயர்த் துறைத்த நூல்முதலா முதல்வழி சார்பாம் மூன்று நூல் - என்னும் பகுதியை நோக்குக. இஃது உலகுடை நாயனார் திருவாக்கென்பதையும் உளங்கொளக் கடவர்.

> இப்பொழுது வடமொழிக்கண் உள்ள சிவஞானபோத சுலோகங்கள் தமிழ்ச்சிவஞான போதத்திற்கு முதலாவன என்று கொள்வதில் தடையிருக்கலாம். யாமறியேம். மெய்கண்டார் திருவாய் மொழி, ...
> மொழிபெயர்ப்பென்பது என்றும் பொய்யா மொழியே. .... தமிழிற் செய்யும் பன்னிரு சூத்திரங் கொண்ட இந்நூலில் அளவற்ற வடசொல் உண்மைக்கு யாது

காரணங் கூறலாகும். மொழிபெயர்ப்பல்லதாயின் தமிழ்த்தாய்க்குப் புதிதாக வர நிற்கும் சீர்த்தியாதுளது? மொழிபெயர்ப்பாயிருப்பின் இழிவுதானென்னோ? .... சைவர்க்குத் தமிழ்மொழி வடமொழி என்ற வேறுபாடு குறித்துப் பொழுது போக்குதல் வீணன்றோ?

(சிவப்பிரகாசம், முன்னுரை)

குருநாதர் அருளிய இச்சம்பிரதாயமொழி மெய்கண்ட சந்தான நூல்களைக் கல்லாமல் மொழிவெறுப்பால் வாயாடிப் பொழுதைக் கொன்னே கழிப்பாரைக் கருதிக் கூறியதென்பது தெளிவு.

இச்சம்பிரதாயம் அடிப்படையின்றித் தோன்றியது மன்று. சுத்தவடிவியல்பாகவுடைய சோதி சொல்லிய ஆகமம்-எம்மொழியிலிருந்தது? எம்மனோரால் அறியக் கூடியதன்று. அச்சோதி நந்திதனக்கியம்ப, அவர் கோதிலருட் சனற்குமாரர்க்குக் கூற -குவலயத்தின் அவ்வழி எம்குருநாதன் கொண்டு தீதகல எமக்களித்த ஞானநூல் - சிவஞானபோதம். அகச்சந்தானத்தில் அந்த ஞானநூல் எம்மொழியில் வழங்கியது ? அம்மொழியிலிருந்து பெற்றுத் தமிழில் அளித்தமையால், மொழிபெயர்ப்பு என்ற சம்பிரதாயம் தோன்றியது என அமைதியும் கூறலாம்.

மெய்கண்ட சாத்திரங்களை முறைப்படி நல்லாசிரியரை அடுத்துக் கேட்பவர்களுக்கு, உலகுடையநாயனார் கூறிப்பின்னோரால் வலியுறுத்தப் பெறும் சம்பிரதாய மொழிகளின் மேல், இயல்பாகவே, நியாயமான வினாக்களும் ஐயங்களும் தொடர்ந்து ஆராய்ச்சியும் எழும்.

நூலாசிரியர்:

இத்தகைய ஐயமும் ஆராய்ச்சியும் உடைய சித்தாந்த மாணாக்கனுக்குத் தெளிவறிவூட்டத் தோன்றியது, இவ்வரிய நூல். நூலாசிரியர் பெரும் பேராசிரியர், முனைவர் இர. வையாபுரியார் அவர்கள், கரவாத கல்வியுளார். அறிவுப் பசி தணிக்கும் அறவர். சித்தாந்தப் போதகாசிரியராக மட்டுமன்றி நூலாசிரியராகவும் திகழ்கின்றார். சித்தாந்த நுண்பொருள்கள் எளிய முறையில் எழுதப்பட்டுச் சிறு சிறு நூல்களாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்னும் கருத்துடையவர். சித்தாந்தம் போதிப்பவர் நெருங்காத

ஓரிடத்தை இந்நூற் பொருளாகக் கொண்டு விரிவாக ஆய்ந்துள்ளார். இவ்வாய்வில் இவர் மேற்கொண்ட சம்பிரதாயத்தின் நோக்கத்தை மதிக்கும் இயல்பும் மரபுவழி உண்மையைக் கண்டு போற்றும் நேர்மையும் நம்மனோர் கைக்கொளத் தக்க அறிவொழுக்கமாம்.

நூல்:

இந்நூல் இரு பகுதிகளாக அமைந்துள்ளது எனலாம். ஒன்று, உலகுடைய நாயனார் எடுத்துக் காட்டிய சம்பிரதாயம் எப்பொழுது தோன்றியது, ஏன் தோன்றியது அதனுடைய பாதிப்பு எத்தகையது எனும் ஆய்வு. இரண்டாவதாக, சிவப்பிரகாசம், சிவஞானபோதத்தின் பன்னிரு சூத்திர அடிப்படையில் அமைந்துள்ளதா எனும் ஆய்வு.

சிவஞானபோதம் நூல் சம்பிரதாயக் கொள்கை பற்றிய ஆய்வுக்கு ஆசிரியர் அமைத்துக் கொண்ட தளம், நூல் வகை எனும் முதல் இயல். இவ்வியலில், நன்னூல் வகை பற்றி இயற்றமிழ் இலக்கண நூல்களான தொல்காப்பியம், நன்னூல் ஆகியனவும் அவற்றிற்கு இளம் பூரணர், பேராசிரியர் முதலிய உரையாசிரியர்கள் கூறியவாகிய கருத்துக்களும், இறைவன் தமிழில் செய்த முதனூல் எனப் பேசப்படும் இறையனார் களவியலுரை கூறும் நூல் இலக்கணக் கருத்துக்களும் அலசப்பட்டு ஆய்வுக்குக் கருவிகளாக, முடிவுகளுக்குச் சான்றாதா ரங்களாக வரையறுத்துக் கொள்ளப்பட்டன. இம்முறை ஆய்வாளர்களுக்கு நல்ல வழிகாட்டலாகும்.

மூன்றாமியலில், மெய்கண்ட நூல்களில் முதல், வழி, சார்பு ஆராய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலகுடைய நாயனார் கழிநெடில் வாயிலாக, சிவஞானபோதம் முதனூல், சிவஞானசித்தியார் வழிநூல், சிவப்பிரகாசம் சார்புநூல் எனக்கூறும் மரபு திருவாவடுதுறையாதீனம் தோன்றிய காலத்திலேயே உருவாகிவிட்டமை எடுத்துக் காட்டப்பட்டது.

சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு வழிநூல்

இந்நூலாசிரியர், இலக்கணநூல்கள் கூறும் முதனூல் இலக்கணம் சிவஞானபோதம் பற்றி மரபுவழி வழங்கிவரும் செய்தி, தமிழ்ச் சிவஞானபோதம் நூலின் இறுதியிலும் முகப்பிலும்

அமைந்துள்ள பாயிரங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள், பாண்டிப் பெருமாளுரை, திருவாவடுதுறையாதீனத்து குருமகா சந்நிதானங்கள் அம்பலவாண தேசிகரும் தட்சிணாமூர்த்தி தேசிகரும் தாங்கள் அருளிய தசகாரியம் நூல்களில் கூறிய கருத்துக்கள் ஆகியவற்றை அலசிய பின் சிவஞானபோதம் நூல்வகை குறித்துப் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்.

> இவற்றை யெல்லாம் நோக்குகின்றபொழுது சிவஞானபோதம் வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவனாற் செய்யப்பட்டது முதனூல். அம்முதல்வன் தமிழில் நூல் செய்திலன். மெய்கண்டசிவம் அதனைத் தமிழில் மொழி பெயர்த்து செய்தார் என்பன பெறப்படுகின்றன.
>
> எனவே மெய்கண்ட சிவம் அருளிய தமிழ்ச் சிவஞானபோதம் வழிநூல். வழிநூலின் வகைநான்கனுள் மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் என்னும் வகையைச் சார்ந்தது என்றே கொள்ளுதல் வேண்டும். குவலயத்தில் அவ்வழி யெம் குருநாதன் கொண்டு என்னும் அருள்நந்தி வாக்கும் துணை செய்கிறது.

இவ்வாறு, நூலாசிரியர், சம்பிரதாயமாகக் கூறப் புகுகின்றார்.

> *தமிழ்ச்சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு அன்று. தமிழில் தோன்றிய முதனூலே என்ற இக்காலத் தாராய்ச்சியாளர் கருத்து எனக்கு உடம்பாடு*
>
> -சிவஞானமுனிவர் மாபாடியத்தில் சிவஞானபோதம் வடமொழிச் சூத்திரங்களுக்கும் தமிழ்சிவஞான போதத்திற்கும் வேறுபாடுகள் இருப்பதை எடுத்துக் காட்டுகின்றார், அரிதின் முயன்று அமைதி எழுதுகின்றார், இது ஏதோ ஒரு மரபுக்குக் கட்டுப்பட்டு மொழிபெயர்ப்பு என்னும் கொள்கையைச் சாதிக்க முயல்கிறார் என்பதையே காட்டுகின்றது-

என்று இந்நூலாசிரியர் கூறுவதினின்றும் இவர் சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு நூல் என்பதற்கு உடன்படவில்லை எனத் தெளியலாம். (இன்று வடமொழி சிவஞானபோத சூத்திரங்கள் என்பனவற்றின் மொழிபெயர்ப்பன்று தமிழ்ச்சிவஞானபோதம் என்பதே காஞ்சி சுவாமிகளின் கருத்தும் என முன் காட்டப்பட்டது)

அகச்சந்தானத்தில் எம்மொழியில் சிவஞானம் அருளப்பட்டதோ யாமறியோம். சுத்தவடிவியல்பாகவுடைய சோதி சொல்லிய ஆகமம், சிவஞானபோதமாகிய இறைவனூல். இறைவன் வளர்கயிலைக்கு க் காவல் பூண்ட நந்திக்கருள, நந்தி சனற்குமாரர்க்கருள இப்படிக் குவலயத்துக்கு வந்தது இவ்வாகமம். அவ்வழி எம் குருநாதன் கொண்டு தீதகல எமக்களித்த ஞானநூல்- எனக் குறிக்கப்படுவது, சிவஞானபோதம். உறுதியாக அது நாம் பேசும் வைகரிவாக்காக இருக்க முடியாது என நம்பலாம். அது வடமொழி எனப் பெரியோரால் கூறப்பட்டது.

எனவே, அவ்வகச் சந்தானத்துக்கு வடமொழிச் சிவஞானபோதம் முதல்நூலாகலாம் என அமைதி கூறிவிட்டுப் புறச் சந்தானத்தில் தோன்றிய நூல்களுக் கெல்லாம் தமிழ்ச் சிவஞானபோதமே முதல் நூல் என ஆசிரியர் கூறுங் கருத்துக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. **மெய்கண்டான் நூல் சென்னியிற் கொண்டு** - என்னும் அருள் நந்தியாரின் வாக்கையும் தம் கருத்து வலுவூட்டுவதாகக் கொண்டார், ஆசிரியர். (பக்கம் 32, 33)

முதனூலாயின் பிறன்கோட் கூறலாகிய வாய்பாட்டில் கூறுதலில்லை, ஆனால் தமிழ்ச்சிவஞானபோதம் **என்மனார் புலவர், இசைக்குமன் உலகே** எனப் பிறன்கோட் கூறல் வாய்பாட்டிலிருத்தலையும் அதற்குச் சிவஞானமுனிவர் பிறன்கோட் கூறல் வாய்பாட்டிலேயே பொருள் கூறியிருப்பதையும் சுட்டிக் காட்டிய ஆசிரியர், இப்படி யிருந்தாலும் முதனூலாதற்குத் தடையில்லை என்பதற்குப் பிற்காலத்துத் தமிழில் பெருமானடிகள் செய்த முதனூலாகிய இறையனார் களவியலிலும் **என்மனார்** எனும் வாய்பாடு முதற் சூத்திரத்தில் உள்ளதை எடுத்துக் காட்டி, அதற்கு அந்நூலின் உரையாசிரியர் கூறியுள்ள அமைதியையும் தன் கருத்துக்குச் சாதகமாகச் சுட்டியுள்ளமை கருத்தில் கொளத்தக்கதாம்.(பக்கம் 34, 35)

சிவஞானசித்தியார் வழிநூல்:

அடுத்து சிவஞானசித்தியாரை, இலக்கண நூல்கள் கூறும் பொருளில் வழிநூல் எனல் ஏற்புடைத்தாகுமா என ஆசிரியர் ஆராய்கின்றார்.

வழிநூல், என்பது முதனூலின் வழியாகவன்றித் தானாகத் தோன்றாது எனப் பொதுவாகத் தொல்காப்பியம் கூற, நன்னூல் **முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப் பின்னோன் வேண்டும் விகற்பங்கூறுவது வழிநூல்** என இலக்கணம் கூறிற்று.

நன்னூல் கூறும் வழிநூலிலக்கணம் சிவஞான சித்தியாருக்குச் சற்றும் பொருந்தாமையை ஆசிரியர் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார். விகற்பம் எப் பொழுது எக்காரணத்தால், எவ்விடங்களில் நிகழ்தல் கூடும், அக்காரணங்கள் சிவஞானபோதம் சிவஞானசித்தியாரிடையே இன்மையும் அதற்குக் காரணங்களையும் எடுத்துக் காட்டிய ஆசிரியர், நன்னூல் கூறிய வழிநூலிலக்கணத்தின்படி சிவஞானசித்தியாரை வழிநூல் எனல் பொருந்தாது எனக் காட்டிய விளக்கம் சுவையாகவும் வலிமையாகவும் உள்ளது. (பக்கம் 36, 37)

ஆயின், சிவஞானசித்தியாரை வழிநூலென மரபாகக் கூறிவருவது எங்ஙனம் பொருந்து மென ஆசிரியர் விளக்குகின்றார். தொல்காப்பியம் வழிநூல் நால்வகைத்து என்று அவையாவன தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்ததர்ப்பட யாத்தல் என்பன; அவற்றுள், சிவஞானசித்தியார், விரித்தல் என்னும் வகையால் வழிநூலாயிற்று என விளக்குகின்றார்.

சிவஞானபோதம் சூத்திர யாப்பிலும் வார்த்திகப் பொழிப்பாகவும் சுருக்கமாகக் கூறியதை விரித்து உரைப்பது சிவஞானசித்தியார் என்பதையும், சித்தியார் சிவஞானபோத நூலினையும் நூலமைப்பினையும் சூத்திரப் பொருளினையும் ஒருங்கு ஒத்து முதனூலின் வழியே சென்று வழிநூலாயிற்று என வழிநூல் இலக்கணத்தொடு பொருத்திக் காட்டியுள்ளார். (பக்கம் 38- 40)

இறுதியாக, சிவஞானசித்தியார் சிவஞானபோதம் என்னும் நூலுக்குச் செய்யுள் நடையில் அமைந்த பேருரை என்பதே உண்மை எனல் வேண்டும். அது செய்யுள் நடையில் அமைந்து விட்டதால் அதனை வழிநூல் என்கிறோம் என உறுதிபடக் கூறிய ஆசிரியர், சித்தியார் விரித்துரைத்த இடங்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்டினார்.(பக்கம் 40, 41)

சிவப்பிரகாசம் சார்பு நூலா ?

தொல்காப்பியர் சார்பு நூலெனும் ஒருவகையினைக் கூறாதிருக்கவும் நன்னூலார் அத்தகையதொரு வகையினையும் அதன் இலக்கணத்தையும் கூறுகிறார்.

இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கி
திரிபுவே றுடையது புடைநூலாகும்.

நன்னூலார் ஆசிரிய வசனமாகக் கூறிய இச்சூத்திரமும் இதற்கெழுந்த உரைகளும் புடைநூலிலக்கணத்தைத் தெளிவாக வரையறுத்தக் கூறவில்லை. இங்கு இந்நூலாசிரியர், வழிநூலுக்குக் கூறப்பட்ட **வேண்டும் விகற்பங்கூறுதலு** க்கும், புடை நூலுக்குக் கூறப்பட்ட **திரிபுவேறுடைமை**க்கும் இடையே வேறுபாடு யாது எனும் பொருத்தமான வினாவினை எழுப்புகின்றார். (பக்கம் 22)

உரையாசிரியர்கள் இத்தொடர்களுக்குக் கண்டுள்ள உரைகளில் இவற்றினிடையே அதிக வேறுபாடு காணப்படாமையாலும், வேண்டும் விகற்பங்கூறும் வழிநூலாயினும், வேறுதிரிபு கூறும் சார்புநூலாயினும் மரபுநிலை திரியாதனவாய் இருக்கவேண்டும் என விதித்தமையாலும், மரபு மாறுபடாதன வெல்லாம் வழிநூலன்றோ என இந்நூலாசிரியர் வினவுவது பெரிதும் ஏற்புடைத் தன்றோ! (பக்கம் 24)

சார்பு நூல் குறித்து, இறையனார் அகப்பொருள் உரையில் எழுதப்பட்டுள்ள உரை ஓரளவு விளக்கம் தருகின்றதென ஏற்றுக் கொண்ட ஆசிரியர், அவ்வுரை, அவ்வுரைக்கு மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்ட இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித், திரிபுவேறுடையது புடைநூலாகும் எனும் சூத்திரத்துக்குப் பொருந்தாமையும் சுட்டி, இப்பொருள் தரும் வேறொரு சூத்திரம் இருந்திருக்க வேண்டும் அது கிடைக்கப் பெற வில்லை எனக் கூறுவது அரிய ஆராய்ச்சி (பக்கம் 25)

முதனூலில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள பொருளைத் தெளிவாக எளிதாக விளங்க வைப்பதற்கு அமைப்பு முறையைச் சிறிது மாற்றியமைத்துக் கொண்ட உத்திவகையால் வழிநூலின்றும் வேறுபட்டுச் சார்பு நூலாயிற்று என ஆசிரியர் தரும் விளக்கம் மிகத் தெளிவாக உள்ளது. (பக்கம் - 25) இவ்விலக்கணம் வழிநூலுக்கும் பொருந்துவதே.

இந்த விளக்கத்தோடு சிவப்பிரகாசம் எவ்வகையைச் சார்ந்தது எனும் ஆராய்ச்சியை ஆசிரியர் மேற்கொண்டார்.

தொல்காப்பியத்தின்றும் நன்னூல் திரிபு வேறுபட்டுள்ளது போன்று சிவஞானபோதத்தின்றும் சித்தியாரும் சித்தியாரை நோக்கச் சிவப்பிரகாசமும் இன்னின்ன இடங்களில் பொருள் திரிபு பட்டுள்ளன எனக் காட்டுதல் கூடுமோ (பக்கம்- 42), எனவும், **ஒருசிறை தொடங்கி திரிபு வேறு உடையது** என்றமையால், தொடக்கத்தில் ஒத்துப் பின் வேறுபட்டால் அது முன்பின் மலைவுடையது எனத் தள்ளப்படுமன்றோ (பககம் - 43) எனவும் ஆசிரியர் வினவுகிறார். இவ்வினா நன்னூல் கூறும் சார்புநூலிலக்கணம் சிவப்பிரகாசத்திற்குச் சற்றும் பொருந்தாமையைக் காட்டும்.

குருமுதல்வர் சிவஞானபோதம் செப்பினர், பின் அவர்புதல்வர் சிவஞானசித்தி விரித்தனர் - எனச் செப்பி அவர்வழி உமாபதிசிவம் சிவப்பிரகாசத்தை அருளியதால், மூன்றாவதாக எழுந்த நூல் எனும் காரணத்தால் சிவப்பிரகாசம் சார்புநூல் எனக் கருதப்படலாயிற்று என அமைதி கூறினர்.

இந்நூலின் நான்காவது இயல் வடமொழி தத்துவ நூல்களில் இறைவன் அருளிய வேதாகமங்கள் முதல்நூல்; அவற்றின் பொருளை விளக்கும் புராணங்கள் வழி நூல்; இஇவற்றின் அருத்தங்களைப் புரிந்து கொள்ள உதவும் அங்ஙங்களாகிய கருவி நூல்களே புடை நூல்கள். இத்தகைய முதல், வழி, சார்பு நூல் பாகுபாடு மெய்கண்ட நூல்களுக்குப் பொருந்தாது என்று காட்டப்பட்டது.

இந்நூலின் நான்காவது இயல் புடைநூலாசிரியர் உமாபதி

சிவனாரின் வரலாறு, நூல்கள் ஆகியன பற்றிய தாகும்.இவ்வியல் உமாபதிசிவனார் சைவசித்தாந்தத் தத்துவத்திற்கு ஆற்றிய அரும்பணியை விரிவாக ஆய்வாருக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது என்று கூறினால் அது மிகை மொழியன்று.

உமாபதிதன் வண்மையருட் குண்டோ கைம்மாறு:

உமாபதி சிவத்தை ஆட்கொள்ளும் வகையில் மறைஞான சம்பந்தர் கூறியதாக மரபுவழிக் கூறப்படும் பட்ட கட்டையிற் பகற்குருடு போகிறது என்ற வாசகம் உலகத்தவர் அறிவுக்கு எப்பொருள் பயக்கும், ஞானப்பக்குவமுடைய உமாபதி சிவத்துக்கு எப்பொருள் பயந்தது எனக் கூறும் பகுதி பேரின்பமளிக்கின்றது (பக்கம் 51 - 54)

உமாபதிசிவம் நூலருளிச் செயும் திறம், இவர் அருளிய எட்டு நூல்களின் பொருளியை, அருளெனப்படுவது தீக்கை என்பது போல உமாபதி சிவத்தின் சொல்லாட்சித்திறன் விளக்கல், வழிநூலில் சுருக்கமாகக் கூறியதை விரித்துக் கூறும் பகுதிகள், வழிநூலின் வழி பொருள்கூறாமல் வைப்பு முறை மாற்றியமைத்துக் கொண்ட இடங்கள், மாற்றியமைத்துக் கொண்டமையால் விளையும் பயன், வழி நூலில் விரித்துரைக்கப்படாத மூலப்பிரகிருதியில் தோன்றும் புத்தி முதலிய தத்துவங்கள் குணவடிவாக போகசாதனமாக ஆன்மாவைப் பந்திக்கும் முறைமை, தசகாரியத்தை மூன்றாக அடக்கிக் கொண்டமை, திருவைந்தெழுத்தின் இயல்பனைத் தையும் விரித்தோதிய திறம், ஐந்தெழுத்தோதலால் ஆன்மாவுக்கு விளங்கும் இன்ப அனுபவம் மற்றும் இவை போன்ற பகுதிகளைச் சுட்டிக்காட்டினார். எந்தவிதத்திலாவது சித்தாந்த சைவ நெறியை மக்களுக்கு எடுத்துச் சென்று உணர்த்தவேண்டும் எனும் கருணையுள்ளமோடு உமபதிசிவம் சிவநெறிக்கு செய்த தொண்டினைப் போல எவரும் செய்திலர் என்ற உண்மையை இந்நூலாசிரியர் உளநெகிழ்ச்சியோடு உணர்த்துகின்றார்.

இதனைத் தொடர்ந்து சிவப்பிரகாசம் சார்புநூலாதலுக்கு உரிய காரணங்களை எடுத்துக்காட்டினார். அத்தகைய காரணங்களால் சிவப்பிரகாசமேயன்றி, உமாபதிசிவம் அருளிய எட்டு நூல்களும் சார்பு நூல்களே எனத் தெளிவாக்கினார்.

பன்னிரு சூத்திரப்பகுப்பு:

இந்நூலின் ஐந்தாவது இயல், புடை நூலில் பன்னிரு சூத்திரப்பகுப்பு. இத்தலைப்பின் அடிப்படையில் அமைந்ததே இந்நூலின் பெயரும். முன் குறிப்பிட்டவாறு இரண்டாம் பகுதி இவ்வியலிலிருந்து அமைகின்றது. நூலின் முந்திய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுமுடிவுகள் இப்பகுதியில் மேற்கொளப்படும் ஆய்வுக்குத் தளங்களாயின எனலாம்.

முதலில் முதனூலாகிய சிவஞானபோதத்தின் நூலமைப்பு வழிநூலிலும் புடைநூலிலும் மேற்கொள்ளப் பட்டுள்ளது எனும் கொள்கை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்சிசிவஞானபோதம் வடமொழி மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட வழிநூலென்ற கருத்தை முதன்முதலில் தம் நூலில் இடம்பெறச் செய்து, ஒரு சம்பிரதாயத்தை அறிமுகப்படுத்தியது போல, மதுரைச்சிவப்பிரகாசர், சிவஞானபோத நூலமைப்பு வழிநூலாகிய சித்தியாரில் அமைந்துள்ளமை கண்டு புடைநூலிலும் அவ்வமைப்பு இருக்கவேண்டும் என்று கருதினார். அதனைச் சிவப்பிரகாசத்திலும் காணும் மரபைத் தோற்றுவித்தார். சிவப்பிரகாசம் நூறு திருவிருத்தங்களுக்கும் சிவஞானபோத அமைப்பில் சூத்திரப்பாகுபாடு கண்டு எழுதினார்.

இவ்வகையில், மதுரைச் சிவப்பிரகாசர்,

> முன்னுள்ள சிவஞானபோதத்தின் அத்தமுஞ் சிவஞானசித்தியின் அத்தமுஞ் இந்தச் சிவப்பிரகாச வழிநூலின் அத்தமுங் கூடினதே யானால் அந்நூல்களைப் போலச் சூத்திரம் பன்னிரண்டும் இந்நூலின் நின்ற முறைமை யெங்கனே –

எனச் சிந்தித்தார்; சிவஞானபோதத்தின் பன்னிரு சூத்திரங்களை சிவப்பிரகாசத்தில் அடைக்கத் தொடங்கினார்.

அவருடைய எண்ணம் எத்தகையதாயினும் பிழைபட்டுப் போயிற்று. காரணம், புடைநூல், முதனூற் பொருளை, படிப்பவருக்கு உபகாரமாக இருக்கும் பொருட்டு, அமைப்பு முறையை வேறபடுத்திச் செய்யப்படு (பக்கம் -24) மாதலால்.

இந்தக்குறையைக் கண்ட பெரியோர், சிலர் சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களின் அமைப்பையொட்டியே உமாபதி சிவம் எழுதினார் என்பர். சிலர் அற்றன்று என்பர். எவ்வாறாயினும் சிவனாரின் ஒருவரிச் சட்டத்திலே தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை யென்பது தெளிவு என்ற அளவில் நின்றனர்.

இந்நூலாசிரியரே, சிவப்பிரகாசத்தில் சூத்திர அடைவு காணுதல் பிழைபடும் இடங்களைத் தெளிவாகச் சுட்டி விளக்கினார்.

செய்யுள் முதற்குறிப்புக் கூறும் பாடல் என்று அறியாமல், வலிந்து ஏதோ பொருள்கூறிப் பிழைபடும் உரையாசிரியர்களின் செயலை, அவ்வளவில் அவன் மகிழ்க என்றொதுங்கும் ஆன்றோர் வழியில், ஏதோ! பெரியவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்று அமைதி பெறலாம் எனக் கூறி ஒதுக்கியது முறுவலை வருவிக்கின்றது (பக்கம் - 98) பெரியோர் செய்யயும் பிழை அவரை நம்புபவரை அறியாமையில் வீழ்த்தும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார் (பக்கம் -99)

ஆறாவது இயலாகச் சிவப்பிரகாசத் திருவிருத்தங்களின் கருத்துத் தொகுப்பும் ஏழாவது இயலாகச் சுவாமிநாத தேசிகர் தசகாரியம் 22 ஆம்பாடலுக்கு எழுதப்பட்ட உரைபற்றிய ஐயங்களையும் வினாக்களையும் வினவிச் சரியான பொருளையும் சுட்டிக்காட்டியுள்ளார். எட்டாவது இயலாக இந்நூலில் சிந்திக்கப்பட்ட செய்திகளின் தொகுப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை சிவப்பிரகாசத்தைப் பயில்வோருக்குப் பெரும் பயனளிப்பன.

* முதனூல், வழிநூல், சார்புநூல் பற்றிய கருத்துக் குழப்பங்களை இந்நூல் அறக்களைகின்றது.
* இந்தியத் தத்துவ தரிசனங்களில் மெய்கண்ட சந்தானத்தின் தனித் தன்மையை நிறுவுகிறது.
* இங்ஙனம் சித்தாந்தசாத்திரம் பயில் வோருக்குப் புதியபார்வையை அளிக்கிறது.

பேராசிரியரின் சிறந்த இந்நூலுக்கு ஆய்வுரை எழுதும் பெருமையை அளித்த அன்பர்களுக்கும் திருவருளுக்கும் நன்றியுடையேன். பேராசிரியர் அவர்களின் இவ்வாய்வு நூலை வெளியிடும் பேறு பெற்ற **ஈரோடு சைவசித்தாந்த சபையினர்க்கு** எம்முடைய வாழ்த்துக்கள்.

உ

நமச்சிவாய வாழ்க

பதிப்புரை

திருச்சிற்றம்பலம்

"ஆதியன் ஆதிரையன் அயன் மால் அறிதற்கு அரிய
சோதியன் சொல் பொருளாய்ச் சுருங்கா மறை நான்கினையும்
ஓதியன் உம்பர் தங் கோன் உலகத்தினுள் எவ்வுயிர்க்கும்
நாதியன் நம் பெருமான் நண்ணும் ஊர் நனி பள்ளி அதே."

-"நம்பிரான் சுந்தர மூர்த்தி நாயனார்"

திருச்சிற்றம்பலம்

சிவனடியே சிந்திக்கும் திருவுடையீர், வணக்கம்.

கொத்தார் மலர்க்குழலாள் ஒரு கூறாய், அடியவர் பால் மெய்த்தாயினும் இனியனாகிய **அருள்தரும் வாரணாம்பிகை உடனமர் அருள்மிகு திருத்தொண்டீசுவரர் திருவருளாலும்,** *குருவே சிவம் எனக் கூறினன் நந்தி என்னும் கூற்றுக்கு இலக்கணமாய், சைவத் தமிழ் நெறிக் காவலராய், சிவலோக நெறியறியச்சிந்தை தந்த திருக்கயிலாய பரம்பரைத்* **திருவாவடுதுறை ஆதீன 23வது குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின்** *குருவருளாலும், உயர்திரு இயக்குநர் ஐயா அவர்களுடைய சீரிய இயக்கத்திலும் கடந்த 15 ஆண்டுகளாக ஈரோட்டில் திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது.*

இம் மைய வகுப்பின் பெரும் ஞானாசிரியராய் எழுந்தருளி மெய்கண்ட சாத்திரங்களைப் பாடஞ் சொல்லி சிவானந்தப் பேரொளியை மலரச் செய்தவர் எங்களுடைய அன்பிற்கும் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரிய **பேராசிரியர் முனைவர் சிவத்திரு. ர. வையாபுரி ஐயா,** *அவர்கள் ஆவார்கள்.*

இத்தகைய பெரும் பேராசிரியரின் வழிகாட்டுதலினாலும், பல சான்றோர்களின் ஆதரவாலும் ஈரோட்டில் உருவாகிய சைவ சித்தாந்த சபை கடந்த நான்கு ஆண்டுகளாக பல்வேறு வகையான சைவத் தொண்டாற்றி வருகிறது. குருவருளும், திருவருளும் முன்நின்று அருள பல சைவ சித்தாந்த நன்னெறி நூல்களை வெளியிடத்தொடங்கிய இச்சபையின் ஏழாம் வெளியீடு இந்நூல்.

நம்பிரான் உமாபதி சிவத்தினால் அருளப்பட்ட சித்தாந்த அட்டகத்தில் தலையாய நூல் சிவப்பிரகாசம். சிவப்பிரகாச நூலின் அமைப்பின் நுட்பத்தினை ஆய்வு செய்தலைக் கருப் பொருளாகக் கொண்டிருக்கும் இந்நூல் நம் பேராசிரியர் அவர்களின் ஞானநோக்கோடு கூடிய நுண்மாண் நுழைபுலத்திற்குச் சான்றாகும். பேராசிரியர் அவர்கள் நூல் அமைப்பின் நுட்பத்தினை விளக்கி இருக்கும் பாங்கினை நோக்கும் போது நமக்கு ஒரு கருத்து நினைவிற்கு வருகிறது. அஃது திருத் தொண்டத் தொகை என்பது முதல் நூலாகவும், திருத் தொண்டர் திருவந்தாதி வழி நூலாகவும், பெரிய புராணம் விரி நூலாகவும் திகழ்வதைப் போல, சிவஞானபோதம் முதல் நூலாகவும், சிவஞானசித்தியார் வழி நூலாகவும், சிவப்பிரகாசம் புடை நூலாகவும் திகழ்கிறது என்ற உண்மையைத் தனித் தனித் தலைப்புகளிலே விளக்கமாக நமக்கு எடுத்துரைக்கின்றார். மேலும் சிவப்பிரகாசத் திருவிருத்தங்களின் கருத்தை ஒரு தொகுப்பாக அவர் தொகுத்தளித்திருப்பது நூலை பயில் வோர்க்கு பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

நூலாசிரியர் செய்யும் ஒவ்வொரு நூலிலும் புதுமையும் தெளிவும் நுட்பமும் ஞானமும் விளங்கி வருவது நாமெல்லாம் முன்செய்த தவத்தின் ஈட்டமேயாகும். இத்தகைய ஞான நூல்களைத் தொடர்ந்து சைவநல்லுலகிற்கு வழங்கிவரும் பேராசிரியர் முனைவர் ர. வையாபுரி ஐயா அவர்களுக்கு நாம் எவ்விதத்திலும் கைம்மாறு செய்ய முடியாது என்பதினாலே நமது பேராசிரியரது திருவடிகளை பன்முறை துதித்து அமைகிறோம்.

இதுபோல இன்னும் பல ஞான நூல்களை பேராசிரியர் எழுதித் தரவேண்டும் என்று குருவருளையும் திருவருளையும் சிந்தித்து நிற்கின்றோம்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியருளியுள்ள திருவாவடுதுறை ஆதீனம் 23 வது குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கும், ஆய்வுரை வாங்கியருளியுள்ள சிவக்குடில் அன்பர் ஞானகானசரஸ்வதி முனைவர் கோ. ந. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.எல்., பி.எச்டி., அவர்களுக்கும் மனம், மொழி, மெய்களாலாகிய நன்றிகளை உரித்தாகிக் கொள்கிறோம்.

இச்சபை சீரிய முறையில் இயங்குவதற்கும், ஞானாசிரியரின் இவ்வரிய நூலை இச்சபைபெறுவதற்கும் முதற்காரணமாய் விளங்கும் **சிவத்தமிழ் திருத்தொண்டர், கயிலைமணி வ.மு. பாலுசாமி தாத்தா** அவர்களுடைய திருவடித் தாமரைகளை மனம், மொழி, மெய்களால் வணங்கி மகிழ்கிறோம். மேலும் இந்நூலை ஞானாசிரியரிடமிருந்து பெற்று, கணினியில் அச்சுக் கோர்த்து நல்ல கட்டமைப்புடன் உருவாக்கித் தந்த **திருமுருகன்பூண்டி சிவா கிராப்பிக்ஸ் உரிமையாளர் சித்தாந்தச் செல்வர் சைவத்திரு சு. மாணிக்கவாசகம்** அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம். மேலும் இச்சபையின் வளர்ச்சியிலும் பணிகளிலும் பல்காலும் தொடர்ந்து பணியாற்றிவரும் அத்துணை அன்பர்களுடையதிருவடிகளையும் வணங்கி, வாழ்த்தி அமைகிறோம்.

இன்னணம்,

சிவ. பெ. வெங்கடாஜலம்,
சைவ சித்தாந்த சபை,
செல்: 94432 51731.

9-பி, முத்துசாமி சந்து,
கைக்கோளன் தோட்டம்,
அமைப்பாளர்,
ஈரோடு-638 001.
30.12.2007,

உ

சிவமயம்

பொருளடக்கம்:

அ. அருள் வாழ்த்துரை:

குருமகா சந்நிதானம் திருவாவடுதுறை ஆதீனம்

ஆ. நூலாசிரியர் முன்னுரை :

இ. நூல் அறிமுக ஆய்வுரை:

-முனைவர் கோ.ந.முத்துக்குமாரசுவாமி அவர்கள்.

ஈ. பதிப்புரை:

1.நூல் வகை.

2.மூவகை நூல்களுக்கும் இலக்கணம்.

1.முதல் நூல்:

2.வழி நூல்:

3.புடை நூல் (அ) சார்பு நூல்:

3.மெய்கண்ட நூல்களில் முதல், வழி, புடை.

1.முதல்நூல் சிவஞானபோதம்:

2.வழிநூல் சிவஞானசித்தியார்:

3.புடைநூல் சிவப்பிரகாசம்:

4.தத்துவஞான நூல்களில் முதல், வழி, புடை.

1.முதல்நூல் வேதமும் சிவாகமங்களும்:

2.வழிநூல் புராணம் முதலியன:

3.புடைநூல் வேதாங்கமும் ஆகமாங்கமும்:

5. புடை நூலாசிரியர் உமாபதிசிவம்.

1. பட்ட கட்டையும் பகல் குருடும்:

2. உமாபதிசிவம் நூல் அருளிச்செய்யும் திறம்:

3. சிவப்பிரகாசம்:

4. சங்கற்ப நிராகரணம்:

5. சதரத்தின சங்கிரகம்:

6. தேவார அருள் முறைத் திரட்டு:

7. அருள்... தீக்கை:

8. சுருக்கமும் விரிவும்:

9. சிவப்பிரகாசம் சார்பு நூல் காரணங்கள்:

10. எட்டு நூல்களும் சார்பு நூல்களே:

6. புடைநூலில் பன்னிரு சூத்திரப்பகுப்பு.

1. மதுரைச் சிவப்பிரகாசர் கூறிய சூத்திரப்பாகுபாடு:

2. இலக்கணம் ஸ்ரீ சிதம்பரநாதமுனிவர் கூறிய சூத்திரப் பாகுபாடு:

3. கச்சியப்ப முனிவர் கருத்து:

4. காவை அம்பலவாண தேசிவர் கூறிய பொருட்பாகுபாடு:

5. காழிச் சிற்றம்பலவர் கூறிய பொருட்பாகுபாடு:

6. சுவாமிநாத தேசிகர் கூறிய பொருட்பாகுபாடு:

7. சூத்திரப் பாகுபாடு பற்றிக் காஞ்சிபுரம் சுவாமிகள் கருத்து:

8. என் கருத்து:

7. சிவப்பிரகாசத் திருவிருத்தங்களின் கருத்துத் தொகுப்பு.

8. இந்நூலில் சிந்திக்கப்பட்ட செய்திகள்.

உ
சிவமயம்

1. நூல் வகை

நூல் என்பது மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்குத் துணையாய் இருப்பது. இது வாக்கு ரூபமாகச் செவியில் மட்டும் கேட்டு உணரத்தக்கனவாகவும், உறுதிப் பொருள் (அறம், பொருள், இன்பம், வீடு) பொதிந்தனவாகவும் உள்ள சொற்களைக் கண்ணாலும் கண்டு உணரும்படியாக வாக்கு ரூபங்களுக்கு அடையாளமாக வரிவடிவில் உள்ள எழுத்துக்களால் ஆனது.

நம் தமிழ் மொழியில் வரி எழுத்துவடிவில் நூல்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே தோன்றிவிட்டன. இத்தகைய நூல்கள் **உலகுநூல்** என்றும் **அறிவுநூல்** என்றும் இருவகைப்படும்.

நூல் என்பது பெரும்பாலும் எழுத்து, சொல், பொருள் என்பவற்றுக்கு இலக்கணம் (மொழி இலக்கணம்) கூறும் நூல்களையே குறிக்கும் என்பது ஒரு கருத்து. இந்த அடிப்படையிலேயே **தொல்காப்பியம், நன்னூல்** ஆகிய இலக்கணநூல்களில் நூல் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

இப்பொழுது தமிழ் இலக்கண நூல்களுள் மிகப்பழமையான இலக்கணநூல் தொல்காப்பியமே. இதன் காலம் கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முன் என்று கூறுகின்றனர்.

இத்தொல்காப்பியத்தில் -பொருளதிகாரம்- செய்யுளியல், மரபியல் என்னும் இரண்டு இயல்களில் நூல் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்து நன்னூல் என்னும் இலக்கண

நூலிலும் (இதன் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்று கூறுகின்றனர்.) பொதுப்பாயிரத்தில் நூல் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் தொல்காப்பியம்- பொருளதிகாரம் மரபியலில் கூறப்பட்டுள்ளதையே கூறுகின்றது.

இங்ஙனம் கூறப்படும் நூல் இலக்கணக் கூறுகளுள் நூல் வகை என்பது ஒரு கூறாகும். தொல்காப்பியம் முதல் , வழி என்று நூல் இருவகைப்படும் எனக் கூறுகின்றது.

"மரபு நிலை திரியா மாட்சியவாகி
உரைபடும் நூல் தாம் இருவகை இயல
முதலும் வழியும் என நுதலிய நெறியின்" (மரபியல் - 93)

என்பது சூத்திரம்.

ஆனால் செய்யுளியலில் அவற்றுள்,

"*நூலெனப்படுவது நுவலுங்காலை*"

என்னும் சூத்திரத்தால் (116) நூலின் பொதுவிலக்கணம் கூறி

"*அதுவே தானும் ஈரிருவகைத்தே*" -

என்னும் சூத்திரத்தால் (167) அதன்வகை (நால் வகை) யினையும் கூறுகின்றது.

ஆனால் நால்வகை என்னென்ன என்பதனை இவ்வியலில் கூறவில்லை. உரையாசிரியர் (இளம்பூரணர்)

அவையாமாறு முன்னர் கூறப்படும்

என்று எழுதினார். முன்னர் என்று இவர் கருதியது மரபியலில் கூறப்படும் இலக்கணத்தை.

பேராசிரியர் என்பவர் பொதுஇலக்கணம் கூறும் சூத்திரத்தில் *தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி* எனவரும் பகுதி நூல்வகையைக் குறிப்பால் காட்டுகிறது என்று கருதுகிறார்.

ஆனால் தொகை வகை என இரண்டுதானே கூறியுள்ளார். ஈரிருவகையில்லையே! தொகை, வகை என்றதனாலே விரி என்பதொன்று சேர்த்துக் கொள்ளலாம். அப்படியும் மூன்று தான் வரும். நான்கு வராது. எனவே இதற்கு மரபியலைத்தான் நோக்குதல் வேண்டும்.

இங்குப் பேராசிரியர்

> மேல் தொகையினும் வகையினும் என்றதனானே தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பு என்னும் நால்வகை யாப்பிற்கும் தொகையினும் வகையினும் பொருண்மை காட்டுதல் ஒக்கும் என அவை இரண்டு நான்காதலும் உடைய என்பது

என ஒரு குறிப்பு எழுதினார்.

இவர் கருத்துப்படி நூல் என்பது முதல்நூல், வழிநூல் என இருவகைப்படும். இவற்றுள் வழிநூல் என்பது தொகுத்துச் செய்தல், விரித்துச் செய்தல், தொகைவிரியாகச் செய்தல், மொழி பெயர்த்துச் செய்தல் என நால்வகைப்படும் என்பன பெறப்படும்.

இங்குக் கூறும் நால்வகை என்பது அவ்வகை வழிநூலுக்கே உண்டு என்பதும் மரபியலை நோக்கியே கொள்ளப்படும். மரபியலில்

"வழியின் நெறியே நால்வகைத்தாகும்" (96)

"தொகுத்தல் விரித்தல் தொகை விரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அனை மரபினவே" (97)

என இரண்டு சூத்திரங்கள் இடம் பெற்றுள்ளன. இவ்விலக்கணச் சூத்திரங்கள் கூறுகின்றபடி நூல்வகை கீழ்க்கண்டவாறு அமையும் எனக் கூறலாம்:

- நூல்
  - முதல் நூல்
  - வழிநூல்
    - தொகுத்துச் செய்தல்
    - விரித்துச் செய்தல்
    - தொகுத்தும் விரித்தும் செய்தல்
    - மொழி பெயர்த்துச் செய்தல்

என அமையும்.

நன்னூல் பொதுப்பாயிரத்தில் நூலின் பொதுவிலக்கணம் கூறும் சூத்திரத்தில் (4) நூல் என்பது மூவகை நூல்களுள் ஒன்றாய் இருத்தல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. தொகை, வகை, விரியாக இருத்தல் வேண்டும் என்று கூறப்படவில்லை. மூவகை என்னென்ன? எனில் முதல்நூல், வழிநூல், சார்புநூல் என்பன. இது

"முதல்வழி புடையென நூல் மூன்றாகும்"

(சார்பென -எனவும் பாடம் உண்டு.)

எனத்தனி ஒரு சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. புடைநூல் - சார்புநூல் எனவும் கூறப்படும். ஆனால் தொல்காப்பியர் கூறியது போல் வழிநூல் நால்வகைப்படும் என்பதோ அவை இன்னின்ன (தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்தல்) என்பதோ நன்னூலில் வழிநூல் இலக்கணம் கூறுமிடத்திலும் கூறப்படவில்லை. நன்னூலுக்கு அமைந்த சிறப்புப்பாயிரமோ **'தொகை வகை விரியின் தருக'** எனக் கூறுகின்றது.

இதற்கு விருத்தியுரை செய்த மாதவச் சிவஞானமுனிவர் 'தொகை வகை விரி எனவே வழியின் வகையும்' என்று தம் உரையில் எழுதினார்.

மேலும் தொல்காப்பியத்தில் தொகுத்தல் தொகை விரி என்று தானே வகைப்படுத்தப்பட்டுள்ளது, வகுத்தல் என்றொரு வகை கூறப்படவில்லையே என்றோர் ஐயத்தை எழுப்பிக் கொண்டு விடையும் எழுதினார். அவ்விடை

> நடு நின்ற வகை (தொகை வகை விரியின் தருக என்பதில்) பின் நின்ற விரியை நோக்கின் தொகையாகவும் முன்நின்ற தொகையை நோக்கின் விரியாகவும் அடங்குதலின் இது இந்நன்னூல் தொகை விரியாப்பு என்பதன் பாற்படும் எங்க

என்பது.

இந்த வழியின் வகை பற்றிய விவரத்தை ஒருபுறம் வைத்துவிட்டு, இனி,

பொதுவாக நூலின் வகைபற்றிச் சிறிது சிந்திப்போம்.

தொல்காப்பியம் முதல் நூல் வழிநூல் என்று இருவகையே கூறிற்று. ஆனால் தொல்காப்பியர் காலத்திற்குப் பின் சார்பு நூல் - புடைநூல் என்னும் ஒருவகை உண்டு என்னும் கொள்கை உருவாய் விட்டது.

வழி என்ற சொல் பின் என்னும் பொருளை உடையது. புடை என்னும் சொல் பக்கம் என்னும் பொருளை உடையது. ஒருவனுடைய வழியில் ஒழுகுதல் (நடத்தல்) என்பது வேறு; ஒருவனைச் சார்ந்து அவன் பக்கத்தனாக ஒழுகுதல் என்பது வேறு; இங்ஙனம் வழி, பின் என்னும் சொற்களின் பொருளை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவ்வுணர்வு வழி நூலுக்கும் சார்பு நூலுக்குமிடையே யுள்ள வேறுபாட்டினையும் இரு நூல்களுக்கும் முதல் நூலுக்குமிடையேயுள்ள உறவினை - தொடர்பினையும் விளங்கிக் கொள்வதற்கு உதவும்.

சார்புநூல் என ஒருவகை கூறும் கொள்கை தொல்காப்பியத்துக்கு முதன் முதலில் உரை எழுதியவரும்

உரையாசிரியர் என்னும் பெயராலேயே வழங்கப்பட்டு வருபவருமாகிய **இளம்பூரணர்** காலத்துக்கு முன்னரே உருவாகிவிட்டது. இளம்பூரணர் உரையைப் பின்பற்றியே பவணந்திமுனிவர் நூல் செய்தார். ஆதலின் பவணந்தியார் நூலினை மூவகை எனத் துணிந்து கூறினார்.

மேலும் தொல்காப்பியத்தில் தொகுத்தல் தொகை விரி என்று தானே வகைப்படுத்தப்பட்டுள்ளது, வகுத்தல் என்றொரு வகை கூறப்படவில்லையே என்றோர் ஐயத்தை எழுப்பிக் கொண்டு விடையும் எழுதினார்.

இளம்பூரணரும் சார்புநூல் என ஒருவகை தொல்காப்பியர் காலத்துக்குப்பின் கூறப்பட்டது என்பதை எடுத்துக்காட்டினாரே யொழிய அதுவும் வழி நூலாகவே அடங்கும் என்றே குறிப்பிட்டார்.

> சார்புநூல் என்பது ஒன்று உண்டு எனின், அஃது
> இருவர் ஆசிரியர் கூறியவதற்கு உடம்பட்டு வருதலின்
> அதுவும் வழிநூல் என அடங்கும்

என்பது அவர் (இளம்பூரணர்) கொள்கை .(மரபியல் -95)

ஆனால், பின்னர் உரை எழுதிய பேராசிரியர் சார்புநூல் என மூன்றாவதாக ஒருவகை கூறுவது பொருத்தமற்றது என வற்புறுத்தியுள்ளார்.

இது பற்றி அவர் எழுதியுள்ளது வருமாறு:-

1. இன்னதே முதல் நூல்; இன்னதே வழி நூல் என்பதோர் யாப்புறவு(வரையறை) இல்லை. ஒரு நூல் பற்றி ஒருவன் வழிநூல் செய்த வழி அவ்வழி நூல் பற்றிப்பின் னொருகாலத்து ஒருநூல் பிறந்ததாயின் அது வழி நூல் எனப்பட்டு முன்னை வழி நூலே முதல் நூல் எனப்படும்-

எனவே முதல்நூல், வழிநூல் என்னும் பாகுபாடு எது கருதி உணரப்படுவது என்பதும் அது சூத்திரத்துள் நுதலிய நெறி (93) என்பதனால் உணர்த்தப்பட்டது என்பதும் பேராசிரியர் கருத்து எனத் தெரிகிறது.

2. இதனை (வழிநூல்பற்றிப் பின்னொரு காலத்துப் பிறந்த நூலினை)ச் சார்புநூல் என்று சொல்லலாகாதோ என்னின்,

(இது அவர் எழுப்பிக் கொண்ட வினா)

வழிநூல் சார்பு நூலுமாகலின் அங்ஙனம் கூறுதல் ஆகாது என்பது அவர் விடை.

வழி நூலும் முதல் நூலைச் சார்ந்தே தோன்றுதலின் வழிநூலினையும் சார்புநூல் எனல் வேண்டும். அல்லது சார்பு நூலினையும் வழிநூல் எனல் வேண்டும் என்பது அவர் கருத்து. எனவே முதல்நூல், வழிநூல் என இருவகை (அல்லது) முதல் நூல் சார்புநூல் என இருவகை கொண்டால் போதும்; வழி நூல் என்பதும் சார்பு நூல் என்பதும் ஒன்றே என்று பேராசிரியர் கருதியிருக்கிறார் எனத் தெரிகிறது. அவர் மேலும் இதுபற்றி எழுதியிருப்பது :-

> மூன்றாவது வகையாகிய சார்பு நூலினைப் பின்பற்றி ஒரு நூல் தோன்றின் அதனை என்ன வென்று சொல்வது? நான்காவதாக ஒருவகை இல்லை யாதலின், சார்பின் சார்பு எனல் வேண்டும். அந்த நான்காவது நூலினைப் பின்பற்றி ஒருநூல் தோன்றினால் அதனைச் சார்பின் சார்பின் சார்பு நூல் எனல் வேண்டும். இவ்வாறு பின்னர் பின்னர் தோன்றும் நூல்களுக் கெல்லாம் சார்பு என்னும் சொல்லைப் பலமுறை அடுக்கிக் கூறுதல் வேண்டுமே

என்பது.

மேலும் அவர் எழுதுகின்றார்.

> இரண்டாவதாகத் தோன்றிய நூலே வழிநூல்; மூன்றாவதாகத் தோன்றிய நூலே சார்பு நூல்; அவற்றின் பின்னர் நான்காவதாக ஒரு நூல் தோன்றாது எனலாமே

என்று ஒருவர் வினா எழுப்பிப் கொள்கிறார்.

இதற்கு அவர்

> வழிநூல் என ஒன்று இருக்க மூன்றாவதாகச் சார்பு நூல் என ஒன்று ஏன் தோன்றியது

என்று எதிர்க் கேள்வியை எழுப்பிக் கொள்கிறார்.

> இதற்கு வழிநூல் பிற்காலத்து அரிதாய்ப் போதலின் (அரிதாய்ப் போதல் விளங்கிக் கொள்ள முடியாததாக ஆதல் அல்லது வழக்கில் இல்லாமல் போதல் எனலாம்) மூன்றாவதாக ஒருநூல் தோன்ற வேண்டியதாயிற்று

என விடை கூறிக் கொள்கிறார்.

> இந்தவிடையின் மேல் மூன்றாவதாகத் தோன்றிய நூலும் பின் ஒரு காலத்து அரிதாயின் நான்காவதாக ஒரு நூல் தோன்றுமல்லவா ?

என்று வினா எழுப்புகிறார்.

ஆக நூல் ஒன்றனைச் சார்ந்து அல்லது ஒன்றன் வழியாகக் காலந்தோறும் தோன்றிக் கொண்டே இருக்கும்; மூன்றாவதாகத் தோன்றிய நூலுக்குப் பின்னர் வேறு நூல் தோன்றாது எனக் கருதுவது மாபெருந்தவறு என்பது அவருடைய கருத்தாக இருக்கிறது எனலாம்.

இதுவரை கூறியவற்றால் **இளம்பூரணரும் பேராசிரியரும்**

1. *முதல் நூல், வழி நூல் என நூல் இரு வகையே;*
2. *சார்பு நூல் எனப் பிறர் கூறுவது வழி நூலாகவே அடங்கும்;*

3. *வழிநூல் என்பது ஒன்றன் வழிநூலாக இருப்பதன்றி ஒன்றற்கு முதல் நூலாகவும் இருக்கும்.*
4. *காலந்தோறும் ஒன்றன் வழியாக ஒரு நூல் தோன்றிக் கொண்டே இருக்கும்*

எனக் கருதியுள்ளனர் எனத் தெரிகிறது.

தமிழிலக்கண நூல் வரலாற்றில் தொடக்கத்தில் நாம் அறிந்த வரையில் **அகத்தியம்** முதல் நூலாக இருந்தது. அதன் பின்னர் தொல்காப்பியம், அவிநயம், காக்கை பாடினியம், பன்னிருபடலம் முதலியன தோன்றின. அகத்தியம், அவிநயம் முதலிய நூல்கள் அரிதாயின. தொல்காப்பியமே முதல் நூலாயிற்று. தொல்காப்பியத்தின் பின்னர் நன்னூல், நேமிநாதம், புறப் பொருள் வெண்பாமாலை, நம்பியகப் பொருள் விளக்கம், யாப்பருங்கலம் முதலியன தோன்றலாயின.

வடமொழி இலக்கண அமைப்பினையும் தமிழில் இணைத்து வீர சோழியம், பிரயோக விவேகம் ஆகிய நூல்களும் தோன்றின. தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பன வடமொழி அணியிலக்கண அமைப்பையும் தழுவிக் கொண்டு தோன்றின.

இவையெல்லாம் கற்றற்கு அரியவாயினபொழுது இவற்றை உரைநடையில் தரும் முயற்சி தோன்றியது. இவ்வகையில் **ஆறுமுக நாவலர்** இலக்கணச் சுருக்கம், விசாகப் பெருமாளையர் யாப்பிலக்கணம், விசாகப் பெருமாளையர் அணியிலக்கணம் ஆகியன தோன்றலாயின.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, பிரபந்தங்கள் (சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள்) ஆகிய அனைத்துக்கும் ஒரே நூலில் இலக்கணம் கூறுதல் வேண்டும் என்னும் நோக்கத்தில் இலக்கணவிளக்கம் தோன்றியது.

பழந்தமிழலக்கியங்களில் வழங்கிவரும் சிலவழக்கு களுக்கு இலக்கணவிதி காட்டுதல் வேண்டும் என்னும் நோக்கத்தில் இலக்கணக் கொத்துரை என்னும் நூலும் செய்யப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் தமிழிலக்கணம் அறிந்து கொள்வதற்காகப் போப்பையர் தமிழிலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம் முதலியனவும் தோன்றின.

இக்காலத்து மொழியாராய்ச்சி - மொழி நூல் இலக்கணம்- என்றொரு துறை வளர்ந்து வருகின்றது. இதில் வல்லுநர்களா யிருப்பவர்களும் இத்துறையினர் கூறும் கருத்தைத் தமிழ் இலக்கண நூலார் கூறுவனவற்றுடன் இயைத்தே விளக்கி நூல் செய்கின்றனர்.

சற்றேறக்குறைய எல்லா நூல்களுமே தத்தமக்கு ஏதோ ஒரு நூலை வழிகாட்டியாகக் கொண்டே தோன்றுகின்றனவே யன்றித் தாம் தாம் புதிது புதிதாக எதையும் கண்டு சொன்னதாகத் தெரியவில்லை. குறியீடு(பெயர்) மட்டும் வேறு வேறாக இருக்கின்றது.

எனவே

1. *முதல் நூல் வழிநூல் என்ற இருவகை மட்டுமே உண்டு;*

2. *முனைவன் செய்தநூல் முதல் நூலாக இருக்கும் . ஏனைய நூல்கள் வழியும் முதலுமாக மாறி மாறி அமையும்.*

3. *காலந்தோறும் ஒரு நூலைச் சார்ந்து ஒரு நூல் தோன்றிக் கொண்டே இருக்கும். (இது காலத்தின் இன்றியமையாமை என அறிதல் வேண்டும்)*

4. *வழி நூல் என்பதும் சார்பு நூலே; சார்பு நூல் என்பதும் வழி நூலே என்னும் கொள்கைகள் உறுதிப்படுகின்றன.*

தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறிய கருத்து மாதவச் சிவஞானமுனிவர்க்கும் உடம்பாடு என்றே தெரிகின்றது.

மாதவச் சிவஞானமுனிவர் தமது தொல்காப்பியப் பாயிர விருத்தியிலும்

> ஒன்றன் வழியாய்ச் செய்வன எல்லாம் வழியேயாயினும் அவை முன்னோர் நூலின் முடிபு ஒத்தலும் திரிபு உடைத்தாதலும் என இரு வேறு வகைப்பட நிகழ்கின்றமையின் அது பற்றிச் சார்பு நூல் என வேறு கோடலும் அமையும்

எனவும்

> திரிபுடைத் தாதலும் அறிக

எனவும்

> பொருளான் ஒருங்கு ஒத்தலின் - மரபுநிலை
> திரியாமையின் வழிநூல் என்றற்கு
> ஏற்புடைத்தாதலும் அறிக

எனவும் எழுதியுள்ளார். இதனால் இவர் சார்பு நூலும் வழி நூலே என உடன்படுகிறார் எனத்தெரிகிறது.

முனிவர்

> முதல் நூல் மாத்திரையாய் நிற்பது இறைவன் நூலும் வழிநூல் மாத்திரையாய் நிற்பது இறுதி நூலும் அன்றி இடைநிற்கும் நூல்களெல்லாம் ஒருவற்கு மைந்தனாயினான் மற்றொருவற்குத் தந்தையாயினாற் போல முதல் நூலாயும் வழிநூலாயும் நிற்கும்

என எழுதியிருப்பது கொண்டு இதனை உணரலாம்.

எனினும் நன்னூலார் புடைநூல் என ஒருவகை கொண்டு நூல் மூவகைப்படும் எனக் கூறி வைத்தமையால் அதனை மறுக்கமாட்டாமல்

முதல் நூலுக்கு வழி நூலும் சார்பு நூலும்
ஒருவற்கு மைந்தனும் மருமானும் போலும்

என உவமை கூறினார்.

எனினும் வழிநூலும் சார்பு நூலும் முதல் நூலுடன் உறவுடையன; மாறுபட்டனவல்ல என்பது இவ்வுவமையால் புலனாகின்றது. **வழிநூல் முதல் நூலுக்கு முற்றிலும் நேரே தொடர்புடையது; சார்பு நூல் என்பது முதல் நூலின் வேறாய்த் தனித்து இயங்கக் கூடியது; முதல் நூலோடு ஒருவாற்றான் தொடர்புடையது** எனக் கொள்வதற்கு இவ்வுவமை துணை செய்கின்றது.

மேலும் இம்முனிவர் வழிநூல், முதல் நூலாகவும் வழிநூலாகவும் நிற்பது போல் முதல் நூலாகவும் வழிநூலாகவும் சார்புநூலாகவும் நிற்கும் என்றொரு கருத்தையும் குறிப்பிடுகின்றார்.

ஒரு நூல் தனக்கு வழிநூலை நோக்கின் முதல்
நூலாகவும் முதல்நூலை நோக்கின் வழிநூலகவும்
அயல் நூலை நோக்கின் சார்பு நூலாகவும் நிற்கும்

என இவர் எழுதியிருப்பது கொண்டு இதனை உணரலாம்.

முதல் நூல் என்று நோக்கும் போது வழிநூல் தன்மையோ சார்புநூல் தன்மையோ அந்நூலில் கருதப்படுவதில்லை. அவ்வாறே வழிநூல் என்று நோக்கும் பொழுது முதல் நூல் தன்மையோ சார்பு நூல் தன்மையோ அதில் கருதப்படுவதில்லை. சார்புநூல் என்று நோக்கும் பொழுது முதல் நூல் தன்மையோ வழி நூல் தன்மையோ அதில்

கருதப்படுவதில்லை என்றொரு விளக்கமும் அவர் உரையால் அறியப்படுகின்றது.

இவர் எழுதிய விளக்கத்துள் அயல் நூலை நோக்கின் சார்பு நூலாகவும்- என்று எழுதிய விளக்கம் சிந்திக்கத்தக்கது.

1. அயல்நூல் என்பது எது?
2. சார்புநூல் என்பது முதல்நூலைச் சார்ந்து இயங்கும் நூலா ?
3. அயல்நூலைச் சார்ந்து இயங்கும் நூலா ?
4. அயல்நூல் என்பது முதல் நூலுக்கு மாறுபட்ட நூலா?
5. முதல் நூலுக்கு இணையாக அருகில் வைத்து எண்ணப்படும் நூலா ?

என்பன போன்ற கேள்விகள் எழுவதற்கு இவ்விளக்கம் இடம் தருகின்றது.

அயல்நூல் என்பது முதல் நூலுக்கு மாறுபட்ட நூலாக இருத்தல் இயலாது. மாறுபட்டு இருப்பது எதிர்நூல் எனப்படும். அங்ஙனம் மாறுபட்டு எழுந்த நூலினை யாரும் நூல் என்று ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; இகழ்ந்து ஒதுக்கிவிடுவார்கள். இதனை

> மாணிக்க மணியினைச் செவ்வண்ணம் முதலாயின சில இலக்கணம் கூறிய நூல் கிடப்பக் கருவண்ணம் முதலாயினவும் அதற்கு இலக்கணம் என்று ஒருவன் எதிர் நூல் என்பதோர் நூல் பிற்காலத்துச் செய்யுமாயின் அஃது அதன் இலக்கணம் எனப்படாது

எனவரும் பேராசிரியர் உரையால் அறியலாம்.

எதிர் நூல் என்பதற்கு இறையனார் களவியல் உரை-***கண்டன நூல்*** - என்னும் கருத்துப்பட விளக்கம் கூறுகிறது. அந்நூல் கூறும் விளக்கம்

முதல் நூலின் முடிந்த பொருளை ஓர் ஆசிரியன் யாதானும் ஒரு காரணத்தால் பிறழ வைத்தால் அதனைக் கருவியால் திரிவு காட்டி ஒருவாமை வைத்தற்கு ஒள்ளியான் ஒருபுலவனால் உரைக்கப்படுவது

என்பதாம்.

இவ்விளக்கத்துள் கருவியான் திரிவு காட்டி - என்பதற்குத் தக்க காரணங்களால் அந்நூல் கூறிய விளக்கம் பிறழ்வுடைய- திரிபுஉடைய - விளக்கம் என்பதை உணர்த்தி - எனவும்

ஒருவாமை வைத்தற்கு-என்பதற்கு நூலின் உண்மைப் பொருள் நீங்காமல் - திரிவு படாமல் - பிறழ்வு படாமல் - பாதுகாத்து வைப்பதற்கு - எனவும்

ஒள்ளியான் ஒரு புலவனால் உரைக்கப்படுவது - என்பதற்கு விளக்கமான அறிவுடையவனாகிய ஒரு புலவவனால் உரைக்கப்படுவது - எனவும் விளக்கம் கொள்க.

இவ்வெதிர் நூல் இன்னது என்பதற்கு இறையனார் களவியல் உரை எடுத்துக்காட்டிய மேற்கோள் சூத்திரம்

தன்கோள் நிறீஇப் பிறன் கோள் மறுப்பது
எதிர் நூல் என்ப ஒருசாராரே என்பதாம்.

இது எந்த நூலில் உள்ள சூத்திரம் என்பது தெரியவில்லை. (கோள் - கொள்கை. நிறீஇ- நிறுவி) இந்தச் சூத்திரத்தைப் பார்த்தாலே இது கண்டன நூலின் இலக்கணம் என்பது புலனாகும்.

பேராசிரியர் உரையினையும் களவியலுரையினையும் இணைத்துப் பார்க்கின்ற பொழுது **மாறுபட்ட இலக்கணம் கூறும் நூலும் அதனை மறுத்துரைக்கும் நூலும் எதிர் நூல்** எனப்படும் எனக் கொள்ளலாம்.

இவ்வகையில் அருள்நந்தி சிவம் அருளிய சிவஞான சித்தியார் பரபக்கத்துள் வரும் மதமும் மதமறுதலையும் எதிர் நூல் எனப்படும். அவ்வாறே உமாபதிசிவம் அருளிய சங்கற்பநிராகரணமும் எதிர் நூல் எனப்படும். தருமையாதீனக் குரு முதல்வர் அருள்திரு குரு ஞானசம்பந்த தேசிகர் அருளிய முத்திநிச்சயம் என்னும் நூலும் எதிர் நூல் எனப்படும்.

சிவஞானசித்தியாருக்குச் சிவசமவாதக் கொள்கை யின்படி உரை செய்த ஞானப்பிரகாசர் உரையும் அதற்கு மறுப்பாகச் சிவஞானமுனிவர் எழுதிய சிவசமவாத உரை மறுப்பும் எதிர் நூல்கள் எனப்படும். மேலும் இவர் எழுதிய **எடுத்து என்னும் சொல்லுக்கு இட்ட வைரக் குப்பாயம்** என்னும் உரையும் **சித்தாந்த மரபு மரபு கண்டன கண்டனம்** என்னும் நூலில் இடம் பெற்றுள்ள கண்டனமும் - கண்டன கண்டனமும் , இலக்கணவிளக்கச் சூறாவளியும் எதிர் நூல் எனப்படுதற்கு உரியன எனக்கருதல் வேண்டும்.

எதிர்நூல் என்பது இங்ஙனம் ஆயின் அயல் நூல் என்பது யாது? ஒரு வழிநூல் அயல்நூலை நோக்கச் சார்பு நூலாதல் எங்ஙனம் என்பதற்கு விளக்கம் காணுதல் வேண்டும்.

மூவகை நூலுக்கும் மாதவச் சிவஞானமுனிவர் உவமை கூறும் போது தந்தை, மகன், மருமான் எனக் கூறினார். அதைப்பற்றி அயல் நூல் என்பதற்குப் பக்கத்து வீட்டுக்காரன் போல என்று நாம் உவமை கூறிக் கொள்ளலாம்.

பக்கத்து வீட்டுக்காரன் பிறப்பு வகையால் முறை உடையவனல்லன். எனினும் பகையுடையவனும் அல்லன். நம் கொள்கையுடன் ஒருவகையால் ஒத்துப் போகின்றவன். எனவே தந்தையின் வழி ஒழுகுகின்ற மகன் அயல் வீட்டுக்காரனையும் சிறிது சார்ந்தே ஒழுகுவான். இம் மகனுக்கு இவ்வகையால் அயல் வீட்டுக்காரனுடைய சார்பும் நிகழும்.

உறவோ சார்போ இல்லாத ஒருவனை அயல் வீட்டுக்காரன் என்று சொல்லிக் கொள்ளமாட்டார்கள். பக்கம் என்பது கொள்கை - கருத்தை- சார்ந்தது; அருகே இருப்பது மட்டும் பக்கமன்று.

தமிழ் இலக்கண நூல்களில் இதற்கு உதாரணம் காட்டலாம். தமிழ்ச்சங்களுள் தலைச் சங்கத்துக்கு இலக்கண நூலாக இருந்தது அகத்தியம். இடைச்சங்கத்துக்கு இலக்கண நூலாக இருந்தன அகத்தியம், தொல்காப்பியம், மா புராணம், இசை நுணுக்கம் பூதபுராணம் என்பன. கடைச்சங்கத்துக்கு அகத்தியமும், தொல்காப்பியமும் இலக்கண நூலாக இருந்தன என்பது களவியல் உரையால் அறியப்படுகின்றது.

தொல்காப்பியம் மரபியலுரையில் பேராசிரியரும் தொல்காப்பியர் செய்த இலக்கண நூலேயன்றிப் பல்காப்பியனார் காக்கை பாடினியார் முதலியோரும் நூல் செய்தனர் என்பதனைக் குறிப்பிடுகிறார்.

இவ்வகையில்

1. அகத்தியம் முதல்நூல்; தந்தை போல.
2. தொல்காப்பியம் அகத்தியத்தின் வழித் தோன்றிய வழிநூல் ; மகன் போல.
3. இவ்வழிநூல் களவியல் உரையிலும் பேராசிரியர் உரையிலும் காணப்படும் மாபுராணம் முதலிய நூல்களை நோக்க சார்புநூல் எனப்படும்.

மாபுராணம் முதலிய நூல்கள் அயல் வீட்டாரைப் போல, அவை அகத்தியத்தோடு உறவுடையன. எனினும் தொல்காப்பியம் அந்நூல்களை நோக்கிச் செய்யப்பட்டதன்று. அதே நேரத்தில் அந்நூல்களுக்கு மாறுபட்டுச் செய்யப்பட்டது மன்று.

இவ்வாறே பிற்காலத்து நன்னூல் தொல்காப்பியத்தின் வழியே செய்யப்பட்டது. எனவே அது தொல்காப்பியத்தை நோக்க வழிநூலே.

எனினும் தொல்காப்பியத்தின் பின்னர்த் தோன்றிய வீரசோழியம், நேமிநாதம் போன்ற நூல்களை நோக்கச் சார்பு நூல். வீரசோழியம்,நேமிநாதம் போன்ற நூல்களை நன்னூல் முழுவதும் பின்பற்றவில்லை. எனினும் அந்நூல்களில் சொல்லப்பட்ட சில கொள்கைகள் நன்னூலுக்கும் உடம்பாடே. உறவு இல்லை; தொடர்பு உண்டு.

இந்நிலைதான் சார்பு எனப்படுவது.

இவை எவ்வாறிருப்பினும் முதல்நூல் வழிநூல் சார்புநூல் என நூல் மூவகைப்படும் என்பதனை அருள்நந்திசிவமும் ஏற்றுக் கொண்டார் என்பதை நாம் நினைத்தல் வேண்டும்.

முன்னூலும் வழி நூலும் சார்பு நூலும்
மூன்றாகும் உலகத்து மொழிந்த நூல்கள்

என்பது காண்க. (சிவஞானசித்தியார் பரபக்கம் -104, மற்றும் சுபக்கம் 267)

இங்ஙனம் அருள்நந்திசிவம் போன்றோரும் கொள்வதற்குக் காரணம் **நன்னூலின் செல்வாக்கே** எனலாம். தமிழிலக்கண நூல்களுள் நன்னூல் பெற்றிருந்த செல்வாக்குப் பற்றியும் இங்குச் சிறிது கூறுதல் வேண்டும். ரு

இப்பொழுதுள்ள தமிழ் இலக்கண நூல்களுள் **தொல்காப்பியம்** மிகப் பழமையானது. கிறித்துவுக்கு முற்பட்டது. இதற்கு உரை சற்றேறக் குறைய கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் தோன்றிற்று என்பர்.

இதன் பின்னர் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரனார் இயற்றிய **வீரசோழியமும்** (இது ஐந்திலக்கணமும் கூறுவது. பௌத்த சமயத்தவரால்

இயற்றப்பட்டது. வடமொழிச் சார்பு மிக்கது) கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் அடுத்த தடுத்து குணவீரபண்டிதர் இயற்றிய **நேமிநாதமும்** பவணந்தி முனிவர் இயற்றிய **நன்னூலும்** தோன்றின. (இவையிரண்டும் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் என்னும் இரண்டிலக்கணம் மட்டுமே கூறுவன. சமண சமயத்தைச் சார்ந்தன. வீரசோழியத்தைக் காட்டிலும் வடமொழிச் சார்பு சற்றுக் குறைவாக உடையன)

பிற்காலத்தில்

தொல்காப்பியத்தை அறியாத தமிழ்ப்புலவர்கள் இருந்தனர்;

நன்னூலை அறியாதார் ஒருவரும் இலர்

என்னும் நிலை உண்டாயிற்று என்பர்.

காரணம் நன்னூலின் செல்வாக்கே.
நன்னூல் - தன்மையினால் பெற்றது என்பர்.

வீரசோழியம் நேமிநாதம் என்னும் நூல்களைக் காட்டிலும் நன்னூலே கி. பி. 12 ஆம் நூற்றாண்டுக்குப்பின் புலவர்களிடத்திலே செல்வாக்குப் பெறலாயிற்று. நன்னூல் சமணசமயத்தைச் சார்ந்தவரால் செய்யப்பட்ட தெனினும் சித்தாந்தசைவர்களும் வைதிகர்களும் அதனை மிவும் பாராட்டி ஏற்றுக் கொண்டனர். இலக்கணக் கொத்து என்னும் நூலை அருளிய சுவாமிநாத தேசிகர் , பிரயோகவிவேகம் என்னும் நூலை அருளிய குருகூர்ச் சுப்பிரமணிய தீட்சிதர், இலக்கண விளக்கம் அருளிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் போன்றோர் நன்னூலை மிகவும் பாராட்டி ஏற்றுக் கொண்டனர் என்பதனை உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் நன்னூல் உரை (மயிலைநாதர் உரை, சங்கர நமச்சிவாயர் உரை) ப் பதிப்புக்களில் நூலாசிரியர் பற்றியும் எழுதியிருப்பவற்றால் அறியலாம்.

சங்கர நமச்சிவாயர் நன்னூல் பதவியல் - **நடவாமடிசீ** என்னும் சூத்திரத்து உரையில் இச்சூத்திரம் -

பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர்
பெருமான் புகழ்போல் விளங்கி நிற்கிறது

என்று பாராட்டினார்.

மேலும் சுவாமிநாத தேசிகர்

முன்னோர் ஒழியப் பின்னோர் பலருள்
நன்னூலார்க்கு இணை எந்நூலாரும் உளரோ
என்னும் துணிவே மன்னுக -

எனவும் பவணந்தி முனிவரைப் பாராட்டினார்.

இத்தகைய செல்வாக்குடன் இந்நூல் உலவி வந்தமையால் **மாதவச் சிவஞானமுனிவர்** போன்றோரும் இந்நூல் கூறிய நூல் வகைகளையும் புடைநூல் இலக்கணத்தையும் ஏற்றுக் கொள்ளலாயினர்.

தொல்காப்பியரும் நன்னூலாரும் கூறியன பெரும்பாலும் மொழி இலக்கண நூல்களுக்கே உரியன. சிறுபான்மை நூல் என்னும் பொதுமை பற்றி ஏனைய நூல்களுக்கும் உரியன என உணர்தல் நல்லது.

இங்ஙனம் நன்னூல் செல்வாக்குப் பெற்றிருந்ததனால் மதுரைச் சிவப்பிரகாசர் போன்றோர் சிவஞானபோதம், சிவஞான சித்தி, சிவப்பிரகாசம் என்பவை முதல், வழி, சார்பு எனக் கொண்டு அவற்றுக்கு நன்னூல் பொதுப்பாயிரச் சூத்திரத்தையே இலக்கணமாகக் காட்டலாயினர்.

இந்தப்பகுதியில் கூறப்பட்ட விவரங்களை மனத்தில் வாங்கிக் கொண்டால்தான் அடுத்த பகுதிகளில் சொல்லப்போகும் விவரங்களை விளங்கிக் கொள்ள முடியும்.

உ

சிவமயம்

2. மூவகை நூல்களுக்கும் இலக்கணம்

முந்தைய பகுதியில் நூல் மூவகைப்படும் என்பது கூறப்பட்டது. இப்பகுதியில் அவற்றின் இலக்கணம் கூறப்படும்.

1. முதல் நூல்:

முதல் நூல் என்பது இறைவனால் செய்யப்படுவது. இறைவன் பிறர் அறிவிக்க வேண்டாமல் தானே அறியும் அறிவுடையவன். இந்த அறிவு முற்றறிவு, வியாபக ஞானம் என்றெல்லாம் கூறப்படும். இவ்விறைவன் வினை செய்து அதன்பயனாய் அறிதலும் அனுபவித்தலும் இல்லாதவன். எனவே அவனுக்கு மாயாமல சம்பந்தமும் இல்லை; கன்மம், மாயை என்பன பந்திப்பதற்குக் காரணமாகிய ஆணவமல சம்பந்தமும் இல்லை. அவன் ஆன்மாக்களுக்கு அறிவு விளங்குவதற்காகச் சுத்தமாயையிலிருந்து நாதம் என்பதனைத் தோற்றுவித்து அதிலிருந்து விரிவடையும் எழுத்து, பதம், மந்திரம் ஆகியவற்றைக் கொண்டு நூல்களை ஆக்கிவைத்துள்ளான். அவன் ஆக்கி வைத்த நூல்களே **முதல் நூல்** எனப்படும்.

இதனை

வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்
கண்டது முதல் நூலாகும்.

என்று தொல்காப்பியம் கூறுகிறது.(மரபியல் - 94)

இங்ஙனம் இறைவன் ஆன்மாக்களுக்காக நூல் செய்து வைத்தான் என்பது

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி
என்னும் திருக்குறளினாலும் விளங்கும்.

தொல்காப்பியச் சூத்திரத்தை நன்னூலாரும் அப்படியே எடுத்துத் தன் நூலுள் வைத்து முதல் நூலிலக்கணம் கூறினார்.

இச்சூத்திர உரையில் தாமே தலைவராயினார் முற்காலத்தில் தமிழ்நூல் செய்திலர் அதாவது இறைவன் தமிழில் முதல்நூல் (வேதாகமங்கள்) செய்யவில்லை என்ற குறிப்பினைப் பேராசிரியர் எழுதிவைத்துள்ளார்.

எனவே,

1. *இறைவன் செய்த நூல் முதல் நூல் என்பதும்*
2. *இறைவன் செய்த முதல்நூலும், இறைவனை வழிபட்டு இறைமைக்குணம் (எண்குணம்) உடையராயினார் செய்த முதல் நூலும் என இருவகை முதல்நூல் உண்டு என்பதும்,*
3. *முதல் வகை முதல் நூல் வடமொழியிலேயே உள்ளது; தமிழில் இறைவனை வழிபட்டு இறைமைக்குணம் உடையராயினார் செய்த நூலே உள்ளது என்பதும்*

பெறப்படும்.

மாதவச் சிவஞானமுனிவரும் இறைவன் நூலும் அவனருள்வழிப்பட்டுத் தத்தம் மரபின் வரும் குரவர் பலர் நூலும் முதல் நூல் எனவும் முன்னோர் நூல் எனவும் கூறப்படும் என்னும் கருத்துப்பட நன்னூலில் (பொதுப் பாயிரம்-7) எழுதிவைத்தார்.

முதல்வன் நூலில் குற்றமே இருக்காது. முதல்வன் நூலில் மேற்கோள் இருக்காது. உத்தி வகைகளுள் சில இடம் பெறா. பிற்காலத்தில் இறையனாரகப் பொருள் போன்ற நூல்களும் தொகுத்துச் செய்யப்பட்ட நூலாயினும் முதல்நூல் என்றே கொள்ளப்படும் என்பன போன்ற இலக்கணங்கள் தொல்காப்பியத்திலும் அதன் உரையிலும் இறையனார் களவியலுரையிலும் காணப்படுகின்றன.

2. வழி நூல்:

வழிநூல் என்பதற்குத் தொல்காப்பியத்தில் விரிவான, தெளிவான இலக்கணம் கூறப்படவில்லை. முதல்நூலின் வழித்தோன்றுவது வழிநூல் என்னும் கருத்துப்பட

வழி எனப்படுவது அதன் வழித்தாகும்

என்ற அளவே கூறப்பட்டுள்ளது. இது ஏதோ சொற் பொருள் கூறியது போல் உள்ளது. எனினும் வழித்தோன்றியது என்பதனால் முதல்நூலின் இலக்கணம் முழுவதனையும் தன்னிடத்துக் கொண்டிருப்பது வழிநூலின் இலக்கணம் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

தந்தைக்குப்பிறந்த மைந்தனை வழித்தோன்றல் என்பார்கள். தந்தையின் குணம் முழுவதும் வழித்தோன்றலாகிய மகனிடம் காணப்படும். எனினும் காலவேறுபாடு காரணமாகவும் உற்றார், உறவினர், அயலவர் முதலியோருடைய பழக்க வழக்கம் காரணமாகவும் வழித்தோன்றலாகிய மைந்தனிடம் வேறுபட்ட சில குணங்களும் கலந்தே இருக்கும். இதனை வேறுபாடு எனக் கருதுவதைக் காட்டிலும் இது ஒருவகையாக வளர்ச்சி என்றே கருதுதல் தக்கது. இத்தகைய வேறுபாடு மைந்தனிடம் வந்து பற்றினாலும் அம்மைந்தன் தந்தையின் அடிப்படைக் குணத்தை இயல்பாகவே பெற்று அதில் மாறுபடாமலே இருப்பான்.

இத்தகைய தந்தையும் மகனும் போன்றவைதான் முதல்நூலும் வழிநூலும். இந்த இயல்பினை உணர்ந்த நன்னூலார்:

முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி
அழியா மரபினது வழி நூலாகும்

என்று தெளிவாக இலக்கணம் கூறிவைத்தார். இச்சூத்திரம் நன்னூலார் செய்ததன்று, அவருக்கு முன் இருந்த இலக்கண நூல்களின் உரையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாதவச் சிவஞான முனிவர் **முடிபு ஒருங்கு ஒத்தல், பின்னோன் வேண்டும் விகற்பம் கூறல்** என்னும் இரண்டனுள் முன்னது மட்டும் இருந்தால் வழிநூல் எனவும் பின்னதும் இருந்தால் சார்பு நூல் எனவும் படும்; எனினும் சார்பு நூலில் சொல்லப்பட்ட விகற்பங்களும் ஆன்றோர் ஏற்றுக் கொள்ளத்தக்கனவாக இருப்பின் வழிநூல் எனவே படும் என்னும் கருத்துப்படத் தமது தொல்காப்பியப் பாயிர விருத்தியில் எழுதி வைத்தார். பின்னோன் வேண்டும் விகற்பங் கூறலைச் சார்பு நூல் எனக் கூறிப்பின் அதுவும் வழிநூலே எனக் கூறத்தக்கது என்பது முன்னரே காட்டப்பட்டுள்ளது.

இவ்வழி நூல் தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்தல் என நான்குவகைப்படும் என்று தொல்காப்பியம் கூறியது. நான்குவகைப்படும் என்பதனை நன்னூலார் கூறவில்லை.

தொல்காப்பியம் கூறும் வழிநூல் வகை பற்றிய உரையில் மொழிபெயர்த்தல் பற்றிச் சில செய்திகள் காணப்படுகின்றன. அவை வருமாறு:-

1. மொழி பெயர்ப்பு என்பது பிறபாடையால் செய்யப்பட்ட நூலினைத் தமிழ் நூலாகச் செய்வது.

2. அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால் அது கிடந்தவாற்றானே செய்யப்படும். தொகுத்தும் விரித்தும் தொகை விரியாகவும் செய்ததனால் இருமொழிக்கும் பயனில்லை.

3. வேதப் பொருண்மையும், ஆகமப் பொருண்மையும், நியாயநூற் பொருண்மையும் பற்றித் தமிழ்ப்படுக்குங்கால் அவற்றுக்கும் இதுவே (கிடந்தவாறே செய்தல்) இலக்கணம்.

(இது பேராசிரியர் என்பவரால் எழுதப்பட்டது. எனவே இவர் தத்துவ ஞானநூல்களும் தருக்க நூல்கள் போன்றனவும் தமிழில் இல்லை என்று கருதியிருந்தார் எனத் தெரிகிறது)

இன்னும் முதல்வன் நூலை முழுது ஒருங்கு ஒத்துக் கூறினாலும் வழி நூலில் நூற்குற்றம் எனப்படும் குன்றக் கூறல் முதலிய குற்றங்கள் நிகழும் என்பதும் உரையில் காணப்படுகிறது. இதற்குக் காரணம் முதல்நூல் செய்தவன் முதல்வன், வழிநூல் செய்தவன் மனிதன். மனிதன் செய்வதில் குற்றம் நிகழ்வது இயல்பு என்பதாம்.

3. சார்பு நூல்:

சார்புநூல் என்றொருவகை தொல்காப்பியத்தில் சொல்லப்படவில்லை ஆதலின் அதற்கு அங்கு இலக்கணச் சூத்திரம் இல்லை. நன்னூல் பொதுப்பாயிரத்தில்

இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித்
திரிபுவேறு உடையது புடை நூலாகும்

என்னும் சூத்திரம் காணப்படுகின்றது. இச் சூத்திரமும் நன்னூலார் செய்ததன்று. முந்தைய நூல்களின் உரையில் காணப்பட்டவற்றை எடுத்து அமைத்துக் கொண்டது.

சற்றேறக் குறைய வழிநூல் இலக்கணமும் சார்பு நூல் இலக்கணமும் ஒன்றாகவே உள்ளனபோல் தெரிகின்றது. வழிநூல் இலக்கணத்தில்-

பின்னோன் வேண்டும் விகற்பம் கூறல்-

என்று கூறப்பட்டுளள்ளது.

விகற்பம் உடையதாய் இருத்தல், திரிபு உடையதாய் இருத்தல் என்பவற்றுக்கிடையே வேறுபாடு யாது ?

மாதவச் சிவஞானமுனிவர் பின்னோன் வேண்டும் விகற்பங்கூறலுக்கு -

வழிநூல் செய்வோன் முதல் நூல் உளதாகவும்
தான் வழிநூல் செய்தற்குக் காரணமாக வேண்டிய
விகற்பங்களையும் உடன் கூறி

என்று எழுதினார்,.

திரிபு வேறு உடையது என்பதற்கு-

பொருள் முடிவு ஒத்து ஒழிந்தன எல்லாம்
ஒவ்வாமை யுடையது

என்று எழுதினார்.

பிற - என்பது வேறு என்னும் பொருளை உடையது. ஒழிந்தன என்பது ஒருபுடை ஒப்பதாகிய பொருள் முடிபு தவிர மற்றையன என்பது கருத்து.

இதன் விளக்கவுரையில் ஒரு நூல் தனக்கு முதல் நூலை நோக்கிச் சார்புநூலாக ஆவதில்லை; வழிநூலாகவே ஆகும்; அயல்நூலை நோக்கித்தான் சார்புநூலாகும் என்னும் கருத்தையும் புலப்படுத்தியிருக்கிறார்.

நன்னூலார் சார்புநூல் என ஒருவகையும் வகுத்து அதற்கு ஒரு சூத்திரமும் எடுத்துக் கூறிவிட்டாரே என்ற

நினைப்பில் தான் மாதவச் சிவஞான முனிவர் சார்புநூல் என்ற ஒருவகையை ஒப்புக் கொண்டுள்ளார் போலும். இச்சூத்திரங்கள் பழைய நூல்களாகிய இறையனாரகப் பொருளுரையிலும் யாப்பருங்கல விருத்தி யுரையிலும் இடம் பெற்றுள்ளனவே என்று கருதியும் ஏற்றுக் கொண்டார் எனலாம்.

மாதவச் சிவஞான முனிவர் சார்புநூல் இலக்கணம் வழி நூலிலக்கணத்திலேயே- பின்னோன் வேண்டும் விகற்பம் கூறியுள்ளதிலேயே - அடங்கி விட்டது என்னும் கருத்துப்படத் தொல்காப்பியப் பாயிர விருத்தியில் எழுதிவைத்தார். அது முன்னரே கூறப்பட்டது.

நன்னூல் முன்னோர் நூலின் வழியே செய்யப்பட்டது எனப் பாயிரம் கூறியிருக்கிறது. எனினும் மாதவச்சிவஞான முனிவர் அதில் வேறு திரிபுடையனவாகக் காணப்படுவன இவை என சற்றேறக் குறைய பன்னிரண்டு இடங்களை எடுத்துக்காட்டி-

> இங்ஙனம் வேறுபடினும் புணர்ச்சி முடிபும் சொல் முடிபும் பொருள் முடிபும் வேறுபடாமையில் மரபு நிலை திரியாவாயின -

என முடித்துக்காட்டினார். நன்னூல் சார்புநூல் என்பது முனிவர் கருத்து. ஆனால் அது முன்னோர் நூலின் வழியே செய்யப்பட்ட நூல் எனப் பாயிரம் வழி நூலாகக் காட்டுகின்றது.

எனவே பின்னோன் வேண்டும் விகற்பம் கூறும் வழிநூலாயினும் வேறு திரிவு உடைய சார்புநூலாயினும் மரபுநிலை திரியாதனவாய் இருத்தல் வேண்டும் என்பது அனைவருக்கும் ஒத்ததே. மரபு மாறுபடாதன எல்லாம் வழி நூலன்றோ!

நன்னூலுக்கு விருத்தியுரை எழுதிய இராமநுச கவிராயர் என்பவர்-

1. முதல் நூலை முழுவதும் ஒத்துச் சிறிது வேறு
பட்டிருப்பது வழி நூல்- எனவும்

2. முதல் நூல் வழி நூல்களுக்குச் சிறுபான்மை ஒத்துப்
பெரும்பாலும் வேறுபட்டிருப்பது சார்புநூல்

எனவும் ஒருவாறு வழிநூலுக்கும் சார்பு நூலுக்குமிடையே வேற்றுமை காட்டினார்.

இவர் **ஒரு சிறை தொடங்கி** என்பதற்கு - ஒருபக்கம் ஒத்திருக்கும்படித் தொடங்கப்பட்டு என்று உரை எழுதினார். அப்படியானால் தொடங்கப்பட்ட ஒருபக்கம் மட்டும் ஒத்திருக்கும் முடிவு முதலியன ஒவ்வா என்பது கருத்தா? பெரும்பாலும் வேறுபட்டால் அது மரபுநிலை திரிந்தது எனப்படுமே ! அது எந்நூலிலும் சேராதே!

இறையனார் அகப் பொருள் உரையில் சார்புநூல் பற்றி எழுதப்பட்டுள்ள விளக்கம் ஓரளவு தெளிவாக உள்ளது.

அவ்விரு நூலுள்ளும் ஒரு வழி முடிந்த பொருளை
ஓர் உபகாரம் நோக்கி, ஒரு கோவைப்பட வைப்பது
சார்பு நூல் ஆகும் -

என்பது அந்நூல் கூறும் விளக்கம்.

சார்பு நூலில் பொருள் ஒத்திருக்கும். ஆனால் வைப்பு முறை வேறுபட்டிருக்கும் என்று எழுதப்பட்டுள்ளது. பொருளை- ஓர் உபகாரம் நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது

என எழுதியுள்ள விளக்கம் **தனித்தன்மையுடையது.**

முதல் நூலில் பொருள் சுருக்கமாக அமைந்துள்ளது. வழி நூலும் முதல் நூலில் அமைந்துள்ள முறைப்படியே விரித்தல் வகையால் - அமைந்துள்ளது. இந்த முறையைக் காட்டிலும் இதே பொருளை வேறொரு முறையால் எடுத்துக் கூறினால் படிப்பவர்க்கு உபகாரமாக இருக்கும் எனக் கருதியே சார்புநூல் செய்யப்படுகிறது என்ற தெளிவு இறையனார் அகப்பொருள் உரையால் கிடைக்கிறது.

ஆனால் இதற்கு எடுத்துக் காட்டப்பட்ட

இருவர் நூற்கும் .. .. திரிபு வேறுடையது ..

என்னும் சூத்திரம் இவ்விளக்கத்திற்குப் பொருத்தமாக அமையவில்லை. அதாவது - ஒரு கோவைப்பட வைப்பது - என்னும் விளக்கம் இச்சூத்திரத்தில் இல்லை. வேறு சூத்திரம் ஏதேனும் இருந்திருத்தல் வேண்டும். அது கிடைக்க வில்லை.

இது தான் சூத்திரம் எனின் -வேறு திரிபுடையது - என்பதற்கு முதல் நூலுக்கும் வழி நூலுக்கும் பெரும்பாலும் வேறுபட்டிருப்பது - என்று பொருள் கூறுதல் மயக்கம் தருவதாகும்.

எனவே வழி நூலிலும் சார்பு நூலிலும் முதல் நூலில் சொல்லப்பட்ட பொருளே இடம் பெற்றிருக்கும். மாறுபட்டிருக்காது. ஆனால் வழிநூலில் முதல் நூலின் பொருள்மட்டுமன்றி அமைப்பும் முதல் நூலையே ஒத்திருக்கும். சார்பு நூலில் முதல் நூலின் பொருளே அமைந்திருக்கும் . வழி நூலில் விரித்துக் கூறப்பட்ட சில செய்திகளும் அமைந்திருக்கும். (இதைத் தான் இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கி என்று சூத்திரம் கூறுகிறது எனலாம்) ஆனால் அமைப்புமட்டும் முதல் நூல் வழி நூல்களுக்கு வேறாக அமைந்திருக்கும். அந்த வேறுபாடும் படிப்பவர்களுக்கு முதல் நூற் பொருள் சுருக்கமாக விளங்க வேண்டுமே; எளிதாக விளங்க வேண்டுமே; தெளிவாக விளங்க வேண்டுமே என்ற கவலையில் சிந்தித்து, அமைப்பு முறையைச் சிறிது வேறுபடுத்தி - வரிசைப்படுத்தி அமைக்கப்பட்டிருக்கும்- என்ற முடிவுக்கு வரலாம்.

இந்தப்பகுதியில் கூறப்பட்ட செய்திகளை மனத்தில் இருத்திக் கொள்வது அடுத்த பகுதியில் கூறப்போகும் செய்திகளை விளங்கிக் கொள்வதற்குத் துணை செய்யும்.

உ
சிவமயம்

3. மெய்கண்ட நூல்களில் முதல், வழி, சார்பு

தமிழ் மொழியில் சித்தாந்த சைவத் தத்துவஞானக் கோட்பாட்டினைக் கூறும் நூல் தொகுப்புக்கு மெய்கண்ட சாத்திரம் என்று பெயர் வழங்கி வருகின்றது. இதில் பதினான்கு நூல்கள் இடம் பெற்றுள்ளன. எனினும் மெய்கண்டாரும் அவர் வழிவந்தவரும் செய்த நூல்களாகப் பன்னிரண்டு நூல்களே இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

மெய்கண்ட சாத்திரம் என்னும் நூல் தொகுப்பில் இடம் பெற்றுள்ள நூல்கள் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம் , சிவஞானசித்தியார்,(பரபக்கம், சுபக்கம்) இருபாஇருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம் திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாம்.

இவற்றுள் திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் மெய்கண்ட சந்தானத்து நூல்களல்ல. அவை உய்யவந்த தேவநாயனார் சந்தானம் என்னும் வேறொரு சந்தானத்தைச் சேர்ந்தவை. ஏனைய பன்னிரண்டு நூல்களே மெய்கண்ட சந்தானத்தைச் சேர்ந்தவை.

இப்பன்னிரண்டு நூல்களையும் மெய்கண்டாரும் அவருடைய மாணாக்கர்களும் செய்தனர். மெய்கண்டார் சிவஞானபோதம் என்னும் நூலினை அருளினார். இந்நூல்தான் சித்தாந்த சைவத்துக்கு முதல் நூலாக விளங்குவது.

இவருடைய மாணாக்கர் அருள்நந்திசிவம். இவர் சிவஞானசித்தியார், இருபா இருபஃது என்னும் இரண்டு நூல்களை அருளினார். இவற்றுள் சிவஞானசித்தியார் சிவஞானபோதத்துக்கு வழிநூலாக விளங்குவது.

இவருடைய மாணாக்கர் உமாபதிசிவம். இவர் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டு நூல்களை அருளினார். இந்நூல்களுள் சிவப்பிரகாசம் தலைமை பெற்று விளங்குவது. இதனை அடுத்து விளங்குவது திருவருட்பயன். (இவற்றுள் உண்மை நெறி விளக்கம் இவர் அருளியதன்று என்று ஒரு கருத்தும் நிலவுகிறது.)

எஞ்சியுள்ள உண்மை விளக்கம் என்னும் நூல் திருவதிகை மனவாசகம்கடந்தார் என்பவர் அருளியது. இவரும் மெய்கண்டாருக்கு நேர் மாணாக்கர். அருள் நந்தி சிவத்துக்கு ஒருசாலை மாணாக்கர் எனச் சொல்லத் தக்கவர். எனினும் சந்தானத்தைச் சார்ந்தவராகச் சொல்லப்படுவதில்லை.

ஆக, மெய்கண்டார், அருள்நந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் என்னும் நால்வரும் சந்தான குரவர் எனப்படுகின்றனர். இவருள் மெய்கண்டாரை முதல்நூல் ஆசிரியர் என்றும், அருள்நந்தி சிவத்தை வழிநூல் ஆசிரியர் என்றும், உமாபதிசிவத்தைப் புடைநூலாசிரியர் என்றும் சொல்வது வழக்கம். எனவே இவர்கள் அருளிய சிவஞான போதம் முதல்நூல் எனவும், சிவஞானசித்தியார் வழிநூல் எனவும் சிவப்பிரகாசம் புடைநூல் எனவும் சொல்லப்படும் என்பதும் புலனாகும். எனினும் ஏனைய ஒன்பது நூல்களும் ஒரு வகையால் சார்புநூல் என்றே கொள்ளத்தக்கன.

இங்ஙனம் சொல்லும் மரபு திருவாவடுதுறை ஆதீனம் தோன்றிய காலத்திலேயே உருவாய்விட்டது. -

முந்தும் ஆகமத்தை அருள்துறை அண்ணல்
மொழி பெயர்த்து உரைத்த நூல் முதலா

எனவரும் உலகுடைய நாயனார் கழிநெடிலால் (10) இது புலனாகின்றது.

இனி, தமிழ் இலக்கண நூல்களில் கூறப்படும் முதல் நூல், வழிநூல், சார்நூல் இலக்கணம் இம் மூன்று நூல்களிலும் எவ்வாறு பொருந்தியிருக்கிறது - குறிப்பாகப் **புடை நூல் இலக்கணம் சிவப்பிரகாசத்தில் எவ்வாறு பொருந்தியுள்ளது- என்பதைப் பார்த்தல் வேண்டும்.**

1. முதல் நூல் சிவஞானபோதம்:

1. முதல் நூல் என்பது இறைவனால் செய்யப்படுவது.
2. இறைவன் அருள் வழி நின்ற குரவர்களால் செய்யப்படுவது.
3. முதல் நூலில் சொல்லப்படும் பொருளுக்குப் பிறர் கூறியதை எடுத்துக்காட்டுவதோ பிறர் கூறியதை எடுத்துக் காட்டி மறுப்புக் கூறுவதோ இருக்காது.
4. வரிசையாகக் கொள்கை மட்டுமே சொல்லும் முதல் நூலுக்கு முன்மாதிரியாக வேறொரு நூல் இருக்காது. அதாவது பிறரும் இவ்வாறு கூறினார்கள் என்றோ பிறநூலும் இவ்வாறு அமைந்திருக்கிறது என்றோ முதல்நூலில் வாசகம் இடம் பெற்றிருக்காது என்பது கருத்து.

(இவற்றுள் மூன்றாவதாகவும் நான்காவதாகவும் கூறியவை இறையனார் அகப்பொருள் உரையில்

முதல்வன் நூற்குப் பிறன் கோள் கூறாது - எனவும்
தந்திரம், சூத்திரம், விருத்தி மூன்றற்கும்
முந்து நூல் இல்லது முதல் நூலாகும்-

எனவும் வரும் சூத்திரங்களால் பெறப்படும். இச்சூத்திரங்கள் எந்த நூலிருந்து எடுத்துக்காட்டப்பட்டன என்பது தெரியவில்லை.)

சிவஞானபோதம் என்னும் முதல் நூலைப் பற்றி மரபாகச் சொல்லப்பட்டு வருகின்ற செய்தி ஒன்று உண்டு. அஃது; அந்நூல் சீகண்ட சிவத்தினால் திருநந்தி தேவர்க்குச் **சிவாகமங்களின் நிச்சயப்பொருள்** இது என்று உணர்த்துவதற்காக உபதேசிக்கப்பட்டது என்பதாம்.

பின்னர் திருநந்திதேவர் அதனைச் சனற்குமார முனிவருக்கு உபதேசித்தார். அவர் சத்திய ஞான தரிசனி என்பவர்க்கு உபதேசித்தார். அவர் பரஞ்சோதி முனிவருக்கு உபதேசித்தார். இதுவரை நிகழ்ந்தவை திருக்கயிலையில்.

இதன் பின்னர் பரஞ்சோதி முனிவர் மண்ணுலகில் சுவேதவனப் பெருமாள் என்னும் குழந்தைக்கு உபதேசித்து மெய்கண்டார் என்று பெயரும் சூட்டிச் சென்றார்.

இங்ஙனம் உபதேசிக்கப் பெற்ற சிவஞானபோதம் வட மொழியில் இருந்தது. தம் ஆசிரியரின் ஆணைப்படி மெய்கண்டார் அதனைத் தமிழ்ப்படுத்தி அதற்கு நுதலியபொருள், அதிகரணப்பகுப்பு, மேற்கோள், ஏது, உதாரணம் என்பவற்றை உள்ளடக்கிய வார்த்திகம் என்னும் பொழிப்புரையும் செய்து தமிழுலகுக்கு அளித்தார்.

இந்த வரலாற்றின்படி சிவஞானபோத சூத்திரம் சீகண்ட சிவத்தினால் அருளப் பெற்றது; எனவே அது இறைவன் நூல் எனப்படும் முதல்நூல்.

இந்த விவரம் சிவஞானபோதம் என்னும் நூலின் இறுதியிலும் நூலின் முகப்பிலும் அமைந்துள்ள பாயிரங்களினால் புலனாகும்.

எந்தை சனற் குமரன் ஏத்தித் தொழ இயல்பாய்
நந்தி உரைத்தருளும் ஞானநூல் - சிந்தை செய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாம் உணர
ஏது திருட்டாந்தத்தால் இன்று.

இது சிவஞானபோதம் நூலின் இறுதியில் உள்ள பாயிரம். இதில் நந்தி சனற்குமாரர்க்கு உரைத்தார் என்பது தான் உள்ளது. நந்திக்குச் சீகண்ட சிவம் உரைத்த செய்தி இல்லை.

இந்தப்பாயிரத்தைச் செய்தவர்- அவர் (மெய்கண்ட தேவர்) மாணாக்கராகிய -**அருள்நந்தி தேவ தம்பிரான்** என்று பாண்டிப் பெருமாள் குறிப்பிடுகின்றார். ஆயின் அருள்நந்தி சிவம் சீகண்ட சிவத்தால் நந்தி தேவருக்கு உபதேசிக்கப்பட்டது என்பதனை ஏன் எடுத்துக் கூறவில்லை? என்னும் வினா எழுவதற்கு இடம் உண்டாகின்றது.

நூலின் தொடக்கத்தில் உள்ள பாயிரத்திலும்

நந்திமுனி கணத்து அளித்த உயர் சிவஞானபோதம்
உரைத்தோன்... ...மெய்கண்டதேவன் -

என்றே கூறப்பட்டுள்ளது.

இதிலும் சீகண்ட சிவம் நந்திக்கு உரைத்த செய்தி இடம் பெறவில்லை. உரையில் மட்டும் -சீகண்ட தேவர்பால் கேட்டருளிய நந்தி – என்று வாங்கி எழுதப்பட்டுள்ளது. இங்ஙனம் உரை எழுதாவிட்டால் திருநந்திதேவர் தாமே உணர்ந்து முனிகணத்துக்கு உபதேசித்தாரா? அவருக்கு அந்தத் தலைமை (குருவாக இருந்து உபதேசிக்கும் உரிமை) யார் கொடுத்தது என்ற கேள்வி எழும்.

உரையில் தகுந்த ஆதாரத்துடன்தான் வாங்கி எழுதப்பட்டது. இதற்கு ஆதாரம் மெய்கண்டாரின் தலைமாணாக்கராகிய அருள்நந்தி சிவம் அருளிய சிவஞான சித்தியார் பரபக்கம் பாயிரத்தில் -

இறைவன் அருள்நந்தி தனக்கு இயம்ப, நந்திகோதுஇல்
அருட்சனற்குமாரற்குக் கூறக் குவலயத்தில் அவ்வழி எம்
குருநாதன் கொண்டு தீது அகல எமக்கு அளித்த ஞான
நூலைத் தேர்ந்து அளிப்பன் சிவஞானசித்தி என்றே-

எனப் பாடியிருப்பதே யாகும்.

பாண்டிப்பெருமாளும்-பரமேஸ்வரன் தமக்கு அருளிச் செய்த மிக்க சிவஞான போதத்தை என்று உரை எழுதினார்.

பின்னர் வந்தவர்களும் இதையே பின்பற்றி யிருப்பார்கள் என்பது எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. திருவாவடுதுறை ஆதீனத்து மூன்றாவது குருமகா சந்நிதானங்கள் அருள்திரு அம்பலவாணதேசிகரும் -

முன்னவன் வட நூல் நோக்கி மொழிந்தனன் -

என்று தமது தசகாரியத்தில் கூறினார்.(55)

தட்சிணா மூர்த்தி தேசிகரும்

திருந்து வடகயிலைதனில் பரமசிவன் அளித்த
சிவஞானபோதம் உணர்நந்தி முதல் சிறந்தே வரும் குரவர்
வெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவன்

என்று பாடினார்.(தட்சணாமூர்த்தி தேசிகர் தசகாரியம் - குருவணக்கம்.)

உமாபதிசிவம் தமது சிவப்பிரகாசத்தில்

தெரித்த குருமுதல்வர் உயர் சிவஞானபோதம் செப்பினர் -

என்று மட்டுமே பாடியுள்ளார். (பாயிரம் 11)

இவற்றை எல்லாம் நோக்குகின்ற பொழுது சிவஞான போதம் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனால் செய்யப்பட்ட முதல் நூல். அம்முதல்வன் தமிழில் நூல் செய்திலன். மெய்கண்ட சிவம் அதனைத் தமிழில் மொழி பெயர்த்துச் செய்தார் என்பன பெறப்படுகின்றன.

எனவே மெய்கண்ட சிவம் அருளிய தமிழ்ச் சிவஞானபோதம் வழி நூல். வழி நூலின் வகை நான்கனுள் மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல் என்னும் வகையைச் சார்ந்தது என்றே கொள்ளுதல் வேண்டும்.

குவலயத்தில் அவ்வழி எம் குருநாதன் கொண்டு -

என்னும் அருள்நந்தி சிவத்தின் வாக்கும் இதற்குத் துணை செய்கிறது.

இதனால்

தமிழ்ச்சிவஞானபோதம் முதல் நூலா ?
வழிநூலா ?

என்றொரு வினா எழுவதற்கு இடம் ஏற்பட்டு விடுகிறது.

தமிழ்ச்சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு அன்று; தமிழில் தோன்றிய முதல் நூலே என்ற இக்காலத்து ஆராய்ச்சியாளர் கருத்து எனக்கு உடன்பாடு.

மாதவச்சிவஞானமுனிவர்க்கும் சிவஞானபோதம் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதன்று என்ற கருத்தே இருக்கும் எனத் தெரிகிறது. சிவஞான போதத்துக்குத் தாம் எழுதிய உரையில் மிகப்பல இடங்களில் வடமொழி மூலத்துக்கும் தமிழ் மொழி பெயர்ப்புக்கும் வேறுபாடு இருப்பதை எடுத்துக்காட்டுகிறார். அரிதின் முயன்று அமைதி எழுதுகின்றார். இது ஏதோ ஒரு மரபுக்குக் கட்டுப்பட்டு மொழிபெயர்ப்பு என்னும் கொள்கையைச் சாதிக்க முயல்கின்றார் என்பதையே காட்டுகிறது.

இந்தச் சிந்தனை இந்த அளவில் நிற்கட்டும்.

தமிழ்ச் சந்தான பரம்பரைக்கு மெய்கண்டார் குருமுதல்வர். ஆதலின் தமிழில் தோன்றிய நூல்களுக்கு இது முதல் நூல். கயிலைச் (அகச்)சந்தானத்துக்கு நந்திதேவர் குருமுதல்வர். அச்சந்தானத்துக்கு வடமொழிச் சிவஞானபோதம் முதல் நூல் என்ற அளவில் அமைவோம்.

மெய்கண்டான் நூல் சென்னியில் கொண்டு -

என அருள்நந்திசிவம் கூறியிருப்பதனால் (சித்தியார்-சுபக்கம் பாயிரம்-3) தமிழில் உள்ள சித்தாந்தசைவக் கோட்பாட்டிற்கு சிவஞானபோதம் முதல் நூல் என்பது புலனாகும்.

மொழி பெயர்த்தலாகிய வழிநூல் மூலமொழியில் உள்ளவாறே பெயர்க்கப்படுதல் வேண்டும். கூட்டியோ ,

குறைத்தோ, தொகுத்தோ, விரித்தோ மொழிபெயர்க்கப்படுதல் ஆகாது என்று பேராசிரியர் தொல்காப்பியத்தில்:

மொழி பெயர்த்து அதர்ப்படயாத்தல்

என்பதில் வரும் **அதர்ப்பட** - என்பதற்கு எழுதிய விளக்கத்தினையும் முதல்வன் நூலில் பிறன்கோள் கூறுதல் இல்லை என்பதனையும் மனத்துள் இருத்தி மேலே சிந்தனையைத் தொடங்குவோம்.

தமிழ்ச்சிவஞானபோதம் முதற் சூத்திரம் **என்மனார் புலவர்** என்று முடிகின்றது. ஆறாஞ்சூத்திரம் **இசைக்கும் மன் உலகே** என்று முடிகின்றது. இவ்வாறு வடமொழி மூலத்தில் இருக்கின்றதோ என்று பார்த்தால் அங்கு முதற் சூத்திரத்தில் இல்லை. ஆறாஞ் சூத்திரத்தில் **ஞானிகள் அறிகின்றாரங்கள்** என்று முடிகின்றது. இங்ஙனம் முடிவது ஓரளவு முதல் நூல் மரபுக்கு மாறுபட்டதுதான்.

தமிழ்ச்சிவஞானபோதத்தில் வரும் **என்மனார் புலவர்** என்பதற்கு - என்று அளவை நூல் அறிந்தோர் கூறுவர் என்று உரை எழுதப்பட்டுள்ளது. **இசைக்கும் மன்உலகே** என்பதற்கு- மெய்யுணர்வின் நிலைபெற்று உயர்ந்தோர் கூறுவர் என்று சிற்றுரையில் உரை எழுதப்பட்டுள்ளது.

மாபாடியத்தில் என்மனார் புலவர் என்பதற்கு -அறிவுடையோர் கூறுவர் - என்று உரை எழுதி ஈண்டுப் புலவர் என்றது அளவையின் இயல்புணர்ந்தோரை - என்று விளக்கம் எழுதப்பட்டுள்ளது. என்மனார் - என்னும் சொல் நிலையும் தொல்காப்பியம் சொல்லதிகாரம் முதற் சூத்திரத்தில் வரும் என்மனார் என்பதற்குச் சேனாவரையர் என்னும் உரையாசிரியர் எழுதியவாறே விளக்கப்பட்டுள்ளது. இசைக்கும் மன் உலகே என்பதற்கும் சிற்றுரையில் உள்ளவாறே உரைகாணப்படுகின்றது.

வழிநூல் வாசகம் வந்தது பற்றி மாதவச் சிவஞானமுனிவர் ஏதும் எழுதவில்லை. பாண்டிப் பெருமாளும் எழுதவில்லை.

இவ்வாறே தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்றாகிய இறையனார் களவியலில் ஒரு சிக்கல் எழுந்துள்ளது. அந்நூல் -ஆலவாய்ப் பெருமானடிகளால் செய்யப்பட்டது - ஆதலின் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் தமிழிலும் முதல் நூல் செய்துள்ளான் என்பது பெறப்படுகின்றது. இதனைப் பேராசிரியரும் (தொல்காப்பியத்துக்கு உரை எழுதியவர்) உடம்படுகின்றார்.

> பிற்காலத்துப் பெருமானடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும் பிற்காலத்தானும் முதல் நூலாவது -

என்று அவர் எழுதியுள்ளார். இந்நூலிலும் என்மனார் புலவர் - என்பது இடம் பெற்றுள்ளது.

> **அன்பின் ஐந்திணைக் களவெனப்படுவது**
> **அந்தணர் அருமறைமன்றல் எட்டனுள்**
> **கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்.**

என்பது அந்நூலின் முதற் சூத்திரம். இதன் உரைகாரராகிய மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் - என்மனார் புலவர் என்பதற்குக் கற்று வல்லோர் சொல்லுவர் என்று உரை எழுதினார். இதற்கு விளக்கம் எழுதத் தொடங்கி

> இதனை முதல்நூல் என்று புகுந்தமையால் கந்தருவ வழக்கம் என்றே மொழியற்பாற்று; என்மனார் புலவர் என்று சொல்லற்பாற்றன்று; அது வழி நூல் வாய்பாடு ஆகலான்—

என்று வினா எழுப்பிக் கொண்டு

> பிறநூல்களெல்லாம் ஆசிரியப்பகுதிப்படும்; இதுவும் அவையே போல் ஆசிரியப் பகுதிப்படுங் கொல்லோ ? எனின், படாது; கந்தருவ வழக்கம் போல்வது களவு ஆதல் மூன்று காலத்துப் புலவர்க்கும் ஒப்ப முடிந்தமையால் அவ்வகை சொன்னான் —

என விடை யும் கூறிவைத்தார்.

பாண்டிப் பெருமாளோ மாதவச் சிவஞானமுனிவரோ இதற்குச் சங்கை , உத்தரம் ஏதும் எழுதவில்லை.

சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப் பன்று என்பதனை வற்புறுத்த 120 காரணங்கள் காட்டிய சைவத்திரு **ம. பாலசுப்பிரமணிய முதலியார்** அவர்களும் 7 ஆவது காரணத்தில்

வடமொழியில் முதல் சூத்திரத்தில் இல்லாத என்மனார் புலவர் என்ற சொற்களைச் சேர்த்துதிருப்பது பெரிய மோசம் குற்றமாகும்

என்று குறிப்பிடுகின்றார். இதனைத் தொடர்ந்து 8,9,10 எண்களைக் கொண்ட காரணங்களிலும் அவர் இது பற்றி விரித்துக் கூறியிருக்கிறார். விவரம் அந்நூலில் காணலாம்.

சிவஞான முனிவரும் ஆதீனசம்பிரதாயத்துக்குக் கட்டுப்பட்டே மொழிபெயர்ப்புக் கொள்கையை ஆதரித்திருக்கிறார்

என்று 58 ஆவது காரணத்தில் விளக்கியிருக்கின்றார்.

ஆறாஞ் சூத்திரத்தில் வரும்

இசைக்கும் மன் உலகே -

என்பதற்கு மாதவச் சிவஞானமுனிவர்

மெய்யுணர்வின் நிலைபெற்றுயர்ந்தோர் கூறுவர் என்று எழுதினார்.

பாண்டிப் பெருமாள் நிலைபெற்ற உலகம் சொல்லும் என்று உரை எழுதி ....உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே எனவே கற்று உயர்ந்தோராம் என்ற விளக்கம் எழுதினார்.

இந்தப் பகுதியை இந்த அளவில் நிறுத்திச் சிவஞானசித்தியார் வழிநூல் எனல் எவ்வாறு எனப் பார்க்கலாம்.

2. வழி நூல் - சிவஞானசித்தியார்:

சிவஞானசித்தியார் வழிநூல் என்பது மரபாகச் சொல்லப்படுகிறது. நன்னூல் கூறும் வழி நூல் இலக்கணச் சூத்திரம் இங்கு எந்த அளவுக்குப் பொருந்தும் எனப் பார்த்தல் வேண்டும்.

வழிநூல் என்பது முதல்நூலின் வழியாகத் தோன்றுவது - அதாவது தானாக ஒருநூல் எனத் தோன்றாதது - எனத் தொல்காப்பியம் பொதுவாக இலக்கணம் கூறியுள்ளது என்பதும்

நன்னூல் பொதுப் பாயிரம் வழிநூல் என்பது

1. முன்னோர் நூலின் முடிபினை முழுவதுமாக ஒத்துக் கொள்வது.

2. அதனுடன் தான் விரும்பும் வேறுபாடுகளையும் (பின்னோன் வேண்டும் விகற்பம்) கூறுவது

என இரண்டு இயல்பினை உடையது என வேறுவகையாக இலக்கணம் கூறியுள்ளது என்பதும் முன்னமே கூறப்பட்டன.

பின்னோன் வேண்டும் விகற்பம் கூறுதல் என்பது முதல் நூலுக்கும் வழி நூலுக்கும் கால இடையீடு மிக அதிகமாக இருந்தால் தான் நிகழும். அதுவும் உலகியல் நூலுக்கு -மொழி இலக்கணம் கூறும் நூலுக்குத்தான் நிகழும்.

உலகியல் என்பது மக்கள் வாழ்க்கை நெறி, பண்பு, நடை, உடை, உணவுப்பழக்க வழக்கம், மற்றும் பேசும் மொழி அமைப்பு முதலியவற்றைக் குறிக்கும். இவையெல்லாம் காலப்போக்கில் மாற்றம் அடையத்தக்கவை, அதுவும் மிகக் குறுகிய கால எல்லையில் அடைவதில்லை. பலநூற்றாண்டுகள் கால இடை வெளியிருந்தால் தான் பிற நாட்டினருடைய கலப்பு

பிற மொழிக்கலப்பு போன்றவற்றால் இம்மாற்றங்கள் நிகழும். எனவே பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வகுத்த விதிகளில் சிலவற்றை நீக்கியும் புதிதாகச் சிலவற்றைச் சேர்த்தும் - விதி செய்து அமைத்தல் இன்றியமையாததாகும். இதனைத் தான் -

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழு அல;
கால வகையினான்-

எனக் கூறுவர். (நன்னூல் உரியியல்-51)

கடி சொல் இல்லை காலத்துப்படினே

(தொல்காப்பியமும் சொல்லதிகாரம் - எச்சவியல் 56)

என்று தொல்காப்பியமும் கூறியுள்ளது இங்கு மரபுக்கு மாறாகாத - அடிப்படைப் பண்புகளுக்கு மாறாகாத - புதியனவே ஏற்றுக் கொள்ளப்படும்.

சிவஞானபோதத்துக்கும் சிவஞானசித்தியாருக்கும் காலஇடையீடு என்பதே இல்லை. மெய்கண்டார் ஆசிரியர். அருள்நந்திசிவம் மாணாக்கர். இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்திருக்கின்றனர். ஒரே இடத்தில் தங்கியிருந்திருக்கின்றனர். அடிக்கடி மாணாக்கர் ஆசிரியரைக் கண்டு அவர் கூறிய நூல்களில் தமக்குத் தோன்றிய ஐயங்களை வினவி அறிந்திருக்கின்றார். சில கொள்கைகளில் ஆசிரியர் கூறும் விளக்கத்திற்கு இடையிடையே தடைகள் நிகழ்த்தி விளக்கம் பெற்றிருக்கிறன்றார். இவை யெல்லாம் அருள்நந்தி சிவம் அருளிய இருபாஇருபஃது என்னும் நூலினால் புலப்படுகின்றன.

இங்ஙனம் இருப்ப சிவஞானபோதத்தில் இருப்பவற்றை காட்டிலும் சிவஞானசித்தியாரில் விகற்பமான கொள்கைகள் இடம் பெறுவதற்கு வாய்ப்பு ஏது? விகற்பம் இருக்கும் எனின் அது ஆசிரியரோடு மாறுபடச் செய்த நூலாகவே மதிக்கப்பட்டுத் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்குமே யன்றிச் சந்தானத்தில் வந்த நூலாக மதிக்கப்பட்டிருக்காது.

அருள்நந்திசிவம் தாம் இயற்றிய சிவஞானசித்தியாரைத் தம் ஆசிரியராகிய மெய்கண்டாருடைய பார்வைக்கு வைத்து ஒப்புதலும் பெற்றிருப்பார் என்றே கருதலாம்.

தத்துவஞானம் என்பது மொழி வழக்குகள் காலந்தோறும் மாறுபடுவது போலவோ உலகியலில் உணவு, உடை, அயலவர் உறவு முதலிய புறப்பண்பாடுகள் (அகப்பண்புகள்வேறு -அது அன்புடைமை, விருந்தோம்பல், பிறர்க்கு இன்னா செய்யாமை போன்றவை. இவை மக்கட் பண்பு எனப்படும். இவை எக்காலத்தும் மாறுபடுதல் இல்லை. இவற்றை மக்கள் கைக் கொண்டு ஒழுகமுடியாமல் போகலாம். அதனால் அவை நற்பண்புகளல்ல என்று ஒதுக்கப்படுவன அல்ல?) காலந்தோறும் மாறுபடுவது போலவோ மாறுபடுவதில்லை

மக்களால் கட்டி உரைக்கப்பட்ட தத்துவ ஞானங்கள் காலப்போக்கில் வேறுபாடுகளை அடையும். அடைவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இறைவனால் அருளப்பட்ட ஆகமங்கள் கூறும் தத்துவ ஞானம் வேறுபாடுகளை அடைவதில்லை. பின்னர் வந்தவர்கள் ஆகமங்களில் சிலவற்றை ஏற்றுக் கொண்டு சிலவற்றைப் பாராமுகமாக விட்டு விட்டு சிலவற்றுக்குப் பொருந்தா விளக்கங்களைக் கூறிப் புதிய புதிய பெயரில் தத்துவ ஞான நூல்களைச் செய்யலாம். அவற்றை யெல்லாம் புறம் என விலக்கிச் சுத்தாத்வைத சித்தாந்த சைவம் இது என நிலை நட்டிய சிவஞானபோதக் கோட்பாட்டுக்கு விகற்பமாக ஒரு நூல் எழ வாய்ப்பில்லை.

உரைகாரர்கள் வேண்டுமானால் புதிய கொள்கையை அதில் ஏற்றி உரை செய்யலாம். அத்தகைய உரைகளும் மறுக்கப்படுவனவாகவே உள்ளன.

இதுவரை கூறியவற்றால் *பின்னோன் வேண்டும் விகற்பம் கூறல்* என்னும் தன்மை சிவஞானசித்தியார் என்னும் வழி நூலில் இல்லை என்பது பெறப்படும்..

தொல்காப்பியம் சார்புநூல் என ஒருவகை கூறாதிருப்பதை அறிந்தும் வழிநூல் என்பதற்கு **வழித்தோன்றுவது** என்பதைத் தவிர வேறு இலக்கணம் கூறாதிருப்பதை அறிந்தும் பின்வந்தோர் வழிநூல் , சார்புநூல் என இரண்டு வகை கொண்டு சூத்திரம் செய்து வைத்ததும் அதனை நன்னூலார் தமது பொதுப் பாயிரத்தில் (நன்னூல் பொதுப்பாயிரத்தில் உள்ள சூத்திரங்கள் அனைத்தும் நன்னூலார் செய்தவையல்ல; நன்னூலார்க்கு முன்னே இருந்த உரையாசிரியர்கள் தத்தம் உரை முகப்பில் கூறியவற்றுள் சிலவற்றை எடுத்துத் தன் நூலின் பொதுப் பாயிரத்தில் அமைத்துக் கொண்டார். அவை பின்னர் நன்னூல் சூத்திரம் எனக் கருதப்படலாயின. எந்ததெந்த சூத்திரம் எந்தெந்த நூலிலிருந்து, உரையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பது நன்னூலுக்கு முதன் முதலாக உரை செய்தவர் என்று கருதப்படுகின்ற **மயிலைநாதர்** என்பவரால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும் சிலவற்றை **உ.வே.சா.** அவர் தம் பதிப்பில் அடிக்குறிப்பாகக் காட்டியுள்ளார்)

இங்ஙனம் கூறிய வழிநூலிலக்கணமாகிய **பின்னோன் வேண்டும் விகற்பம் கூறலும்** -சார்பு நூல் இலக்கணமாகிய - **திரிபு வேறு உடைமையும்** - தெளிவில்லாதனவாய்த் தம்முள் மயங்குவனவாகவே உள்ளன. இறையனார் அகப்பொருள் உரைமட்டும் சிறிது தெளிவு தருகின்றது என்பது முன்னமே கூறப்பட்டது. வழிநூலும் சார்புநூலே. சார்புநூலும் வழிநூலே என்று உரையாசிரியர்களே கூறும் நிலை ஏற்பட்டு விட்டது.

இங்ஙனமாயின் சிவஞானசித்தியாரை வழிநூல் எனல் எவ்வாறு? எனில் தொல்காப்பியர் வழிநூலுக்கு இலக்கணம் - **அதன் வழித்தாதல்** - எனப் பொதுவாகக் கூறிவைத்துள்ளார். வழிநூல் நான்குவகைப் படும் எனவும் கூறியுள்ளார். நன்னூலார் இதனைத் தவிர்த்து விட்டார் என்பது நினைவில் கொள்ளுதல் வேண்டும்; அவ்வகைகளுள் விரித்தல் - என்னும் வகையினால் சிவஞானசித்தியார் வழிநூலாயிற்று என அறிதல் வேண்டும்.

சிவஞானபோதம் மூலம் சூத்திரயாப்பினால் ஆனது. உரையோ வார்த்திகம் என்னும் பொழிப்புரையாக அமைந்தது. ஆதலின் அதனை விரித்துச் செய்ய வேண்டியது இன்றியமையாததாயிற்று. அதற்குத் தகுதியுடையவர் தம்மிடம் நேரே பாடம் கேட்டவரும், சிவாகமங்களில் நல்ல பயிற்சி உடையவரும், தமக்குப்பின்னர் இத்தத்துவ ஞானத்தை விளங்கச் செய்பவர் எனத்தம்மால் நம்பப்பட்டவரும், தம்மிடத்திலேயே தடைகள் பல நிகழ்த்தி விளக்கம் பெற்றவருமாகிய அருள்நந்தி சிவமே எனக் கருதிய மெய்கண்டார் இந்நூலை **விரித்துரைக்க** என ஆணை தந்திருத்தல் வேண்டும். அதன்படியே அருள்நந்திசிவம் விரித்துரைத்தலின் இது விரிநூல் என்னும் வகையான் **சிவஞானபோதத்தின் வழியே செய்யப்பட்ட வழிநூல்** என வழங்குவதாயிற்று என அறிதல் வேண்டும். உமாபதி சிவமும்

தெரித்த குரு முதல்வர் உயர்சிவ ஞான போதம் செப்பினர்;

பின் அவர் புதல்வர் சிவஞான சித்தி விரித்தனர் -

என்றே கூறினார் (சிவப்பிரகாசம் - பாயிரம் 11)

சிவஞானபோதத்தின் பொருளே சிவஞான சித்தியாரிலும் கூறப்பட்டுள்ளது என்பதனைப் பாண்டிப் பெருமாள் தமது சிவஞானபோத விருத்தியுரையில் தொடர்புடைய சிவஞானசித்தித் திருவிருத்தங்களைச் சூத்திரந்தோறும் எடுத்துக்காட்டியது கொண்டு அறியலாம்.

மாதவச்சிவஞானமுனிவர் அருளிய சிவஞானபோதச் சிற்றுரையினையும், மாபாடியத்தினையும், சிவஞானசித்தியார் சுபக்கம் பொழிப்புரையினையும் ஒருங்கு வைத்துப் பார்ப்பவர்களுக்குச் சிவஞானசித்தியார் சிவஞான போதம் என்னும் நூலினையும் நூலமைப்பினையும் சூத்திரப் பொருளினையும் ஒருங்கு ஒத்துச் செல்வது புலனாகும்.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் எனில்

சிவஞான சித்தியார் சிவஞானபோதம் என்னும் நூலுக்குச் செய்யுள் நடையில் அமைந்த பேருரைநூல் என்பதே உண்மை எனல் வேண்டும். அது செய்யுள் நடையில் அமைந்து விட்டதனால் அதனை வழிநூல் என்கிறோம்.

சிவஞானபோதத்தில் அதிகாரப்பகுப்புகள், இயல் பகுப்புகள், சூத்திர வைப்பு முறைகள் எவ்வாறு அமைந்துள்ளனவோ அவ்வாறே சிவஞானசித்தியிலும் அமைந்துள்ளன. சிவஞானபோதச் சூத்திரத்தில் பொருளும் அதிகரணப்பகுப்பும் எவ்வாறு அமைந்துள்ளனவோ அவ்வாறே சிவஞானசித்தித் திருவிருத்தத்திலும் சூத்திரப் பொருளும் அதிகரணப்பாகுபாடும் அமைந்துள்ளன. அதிகரணப் பொருள், ஆசங்கை, ஏது, உதாரணம், சித்தாந்தம் என விரித்து விளக்கிக்காட்டப்பட்டுள்ளது.

1. மெய்கண்டார் அவையடக்கத்தில் **தம்மை உணரார் உணரார் உடங்கியைந்து தம்மில் புணராமை கேளாம் புறன்**- எனக் கூறியதே பற்றி அருள்நந்திசிவம் பரபக்கம் விரித்துரைத்தார்.
2. மெய்கண்டார் பிரமாணங்களால் பொருளுண்மை நிச்சயித்திருப்பதை அறிந்து அருள்நந்தி சிவம் அளவை இலக்கணத்தை நூலின் தொடக்கத்தில் விரித்துரைத்தார்.
3. மெய்கண்டார் **பூதாதி** எனக் கூறியிருப்பதனை அறிந்து அருள்நந்திசிவம் தத்துவம் முப்பத்தாறுக்கும் வகை, விரி முதலாயின விரித்துரைத்தார்.
4. மெய்கண்டார் எட்டாஞ் சூத்திரத்தில் உபதேசம் மட்டும் கூறினார், அருள்நந்திசிவம் சித்தியாரில் தீக்கைகள் பற்றி விரிவாகப் பாடியுள்ளார்.

இங்ஙனம் அருள்நந்தி சிவம் விரித்துரைத்தவற்றை எழுதத் தொடங்கினால் சிவஞானசித்தியாரையே இங்கு எழுத வேண்டிவரும். ஆதலின் *இதனை இந்த அளவில் நிறுத்தி இனி, சார்பு நூல் பற்றிப்பார்ப்போம்.*

3. புடை நூல் சிவப்பிரகாசம்:

இனி, புடைநூலுக்குச் சொல்லப்படும் இலக்கணத்தைச் சிவப்பிரகாசத்தில் பொருத்திப்பார்ப்போம்.

நன்னூல் பொதுப்பாயிரத்தில் புடைநூல் இலக்கணமும் வழிநூல் இலக்கணமும் தெளிவாகவும் வரையறையாகவும் சொல்லப்பட வில்லை என்பது முன்னரே கூறப்பட்டது.

புடைநூலுக்குச் சொல்லப்பட்ட இலக்கணம் வழிநூலிலக்கணத்திலும் செல்கிறது. வழி நூலுக்குச் சொல்லப்பட்ட இலக்கணம் புடை நூலிலக்கணத்திலும் செல்கிறது. இந்த இலக்கணத்தை நம்புவதால் பயனில்லை. ஒரு சிறைதொடங்கி என்பதே பொருந்தவதாகத் தெரியவில்லையே.

உரையாசிரியர்கள் தந்த விளக்கமும் அவ்வாறே தெளிவில்லாமல் இருக்கிறது என்பதும் முன்னரே கூறப்பட்டது.

சார்பு நூல் வழிநூலும் ஆம் என்று உரைகாரர்கள் கூறுகிறார்கள். அப்படியானால்

சிவப்பிரகாசத்தை வழிநூல் என்று சொல்வதா ?
சார்பு நூல் என்று சொல்வதா ?
ஏதாவது ஒன்றைத் துணிந்து சொல்லவேண்டுமே!

மாதவச் சிவஞானமுனிவர் நன்னூலில் திரிபுவேறு உடையன எனப் பன்னிரண்டு இடங்களைத் தமது தொல்காப்பிய பாயிரவிருத்தியில் எடுத்துக்காட்டினார். அதுபோல சிவப்பிரகாசத்தில் சிவாகமத்தை நோக்கத் திரிபு வேறுடையன இவை என்றோ சிவஞானபோதத்தை நோக்கத் திரிபு வேறு உடையன இவை என்றோ, சித்தியாரை நோக்கத் திரிபு வேறு உடையன இவை யென்றோ காட்டுதல் வேண்டுமே!

தொடக்கம் ஒருங்கு ஒத்து முடிவின்கண் வேறுபடுவ தென்று கூறலாமா? அப்படி இருந்தால் அது ஒரு தத்துவ ஞான நூல் என்று ஏற்றுக் கொள்ளப்படுமா ? முன்னொடுபின் மலைவு உடையது என்று தள்ளப்படுமல்லவா!

சித்தியார் சிவஞானபோதத்தைப் பெரிதும் ஒத்துச் சிறிது வேறுபட்டது; சிவப்பிரகாசம் சிறிது ஒத்துப் பெரிதும் ஒவ்வாதது என்று கூறலாமா ?

சித்தியாரை நோக்க வழிநூல்; அயல் நூலைநோக்கச் சார்புநூல் என்றால் சிவப்பிரகாசத்துக்கு அயல்நூல் என்று எதனைக் கொள்வது? அங்ஙனம் கொள்ளப்படும் நூல் சிவஞானபோதத்துக்கு அயல்நூலா? சித்தியாருக்கு அயல் நூலா? போதத்துக்கோ, சித்திக்கோ அயலாயிருப்பதொரு நூலைச் சிவப்பிரகாசம் தனக்கு ஆதாரமாகக் கொண்டு எழுந்தது எனலாமா?

சிவஞானபோதத்துக்கு சித்தியார் மகன் போன்ற உறவுடையது; சிவப்பிரகாசம் மருமகன் போன்ற உறவுடையது என்றால் சிவப்பிரகாசம் சிவஞானபோதத்தின் கால்வழியில் தோன்றவில்லை; வேறொரு கால்வழியில் தோன்றியது என்றாகுமே. அங்ஙனம் கால்வழி வேறுபட்டதாகவும் தெரியவில்லையே . வேறுபட்டால் சந்தானம் மாறுபடுமே!

சிவப்பிரகாசத்துக்கு உரை செய்த மதுரைச்சிவப்பிரகாசர் என்பவர் சிவஞானபோதம், சிவஞானசித்தி என்னும் இரண்டையுமே வழிநூல் என்றும் சிவப்பிரகாசம் சார்புநூல் என்றும் கூறினார். இதனை அவர்

> அந்த மெய்கண்ட தேவ தம்பிரானார்..
> ..பன்னிரண்டு சூத்திரமாக வகுத்து ....
> சிவஞானபோதம் எனத் திருநாமத்தையும் சாத்தி வழி
> நூலாகச் செய்தருளித் தமது திருவடியைப் பெற்ற

அருள் நந்தி தேவ தம்பிரானார்க்குக் கடாக்ஷித்தருள, அவர் அந்நூலின் அத்தத்தை விரித்துச் சிவஞானசித்தி என்னும் திருநாமத்தினையும் சாத்தி வழிநூலாகச் செய்தருள, இந்த இரண்டு நூல்களையும் கொற்றவன் குடியில் உமாபதி தேவ தம்பிரானார் திருவுள்ளத்தடைத்தருளி .. ... யாவர்க்கும் எளிதாக அடையத் தக்கதாக அந்த இரண்டுவழி நூல்களின் அத்தமும் முன்னூலாகிய சிவாகமத்தின் அத்தமும் தம்மிடத்தில் விளைவதாய் இருக்கப்பட்ட திருவருள் ஞானமும் கூட்டி .. .. .. சிவப்பிரகாசம் என்னும் திருநாமத்தையும் சாத்திச் சார்பு நூலாகச் செய்தது என அறிக –

எனவும்

இங்ஙனம் சிவாகமம் முன்னூல் என்பதற்கும் சிவஞானபோதமும் சிவஞானசித்தியும் வழிநூல் என்பதற்கும் இந்தச் சிவப்பிரகாசம் சார்புநால் என்பதற்கும் பிரமாணமாவது.......

வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும் – என்னும் விதியால் சிவாகமம் முன்னூலானது என அறிக.

இரண்டாவது – முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்துப் பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி அழியா மரபினது வழிநூலாகும்– என்னும் விதியால் சிவஞானபோதம் சிவஞான சித்தியும் வழி நூலானது என அறிக.

மூன்றாவது இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித் திரிபு வேறுஉடையது புடை நூலாகும் – என்னும் விதியால் முன்னூலாகிய சிவாகமத்தின் அத்தமும் வழிநூலாகிய சிவஞானபோதமும் சிவஞானசித்தியின் அத்தமும் கருத்திலுறை திருவருளாகிய வேற்றுமை அத்தமும் கூட்டி அருளிச் செய்கையால் இந்தச் சிவப்பிரகாசம் சார்பு நூலானது என அறிக..................

எனவும்

> இந்தச் சார்பு நூலாகிய சிவப்பிரகாசம் என்னும் நூலிலே முன்னூலின் அத்தமும் வழிநூலின் அத்தமும் அது நீங்கலாக வேற்றுமை அத்தமும் கூட்டி அருளிச் செய்தற்குப் பிரமாணம் இந்நூலிலே தெரித்த குரு முதல்வர் (11) என்ற செய்யுளிலே இறைவன் நூலும் கலந்து – என்றமையால் முன்னூலின் அத்தமும் கூடினது என அறிக. விளம்பிய நூல் அவை இரண்டும் விரும்பி நோக்கி என்றமையால் வழி நூலின் அத்தமும் கூடினது என அறிக.– கருத்திலுறை திருவருளும் – என்றமையால் திரிபு வேறுடைய வேற்றுமை அத்தமும் கூடினது என அறிக. ஆக மூன்றுவகையும் இங்ஙனம் கண்டு கொள்க.

எனவும் தமது உரைக்குக் கூறிய காப்புச் செய்யுள் உரையில் மிக விரிவாக எழுதியிருப்பதனால் அறியலாம்.

கருத்திலுறை திருவருள் அயல்நூல் எனப்படுமா ?

இங்ஙனம் சிவப்பிரகாசத்தைச் சார்புநூல் எனக் கூறினாலும் இவர் இதுவும் வழிநூல் என்ற கருத்தையும் உடையவர் என்பது

> முன்னுள்ள சிவஞானபோதத்தின் அத்தமும் சிவஞான சித்தியாரின் அத்தமும் இந்தச் சிவப்பிரகாச வழி நூலின் அத்தமும் கூடினதேயானால் –

என்று எழுதியிருப்பது கொண்டு அறியலாம்.

மேலும் சிவப்பிரகாசம் சார்புநூல் என்பதற்குத் **தெரித்த குருமுதல்வர்** என்னும் பாடலை அகச்சான்றாகக் காட்டியவர் புறச்சான்றாக **ஞான தீக்கைத் திருவிருத்தம்** என்னும் நூலிலிருந்து ஒருபாடலையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

அப்பாடல்:

தேசுமிகும் அருள்பயின்ற சிவப்பிரகாசத்தில்
திரிந்து பொதுச் சங்கற்ப நிராகரணந் திருத்தி
ஆசிலருள் வினாவெண்பாச் சார்பு நூலால்
அருள் எளிதில்குறி கூட அளித்து ஞானப்
பூசை தக்க காரணம் முன்புகன்று அதனில் புரிந்து
புணர்விக்கச் சிவஞான போதசித்தி வழிநூல்
மாசில் சதமணிக்கோவை முன்னூல் சான்று
மருவு திருமுறைத் திரட்டு வைத்தனன்
மன்உயிர்க்கே.

என்பதாம்.

நூலுரையுள்ளும் சித்தியாராகிய வழிநூலிருந்து சிவப்பிரகாசமாகிய இச்சார்புநூல் திரிபுவேறு உடையதாய் இருக்கிறது என்பதற்கு இவர் காட்டும் காரணம்.:

> இந்த நூல் சித்தியாரைப்பின் சென்ற நூலாயிருக்க சுத்தமாயையைச் சிவனுக்குத் திருமேனி என்று அந்நூல் முதற் சூத்திரத்தில் சொல்லியிருக்க அதனை இந்த நூலில் மலத்தொடும் கூட்டி வேற்றுமை கூறுவதற்கு விதி ஏதென்னில் சித்தியார் வழி நூலாகையாலும் இந்நூல் சார்பு நூலாகையாலும் இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித் திரிபு வேறுடைய நூலாகும் என்பதைப் பற்றி அப்படி வேற்றுமை கூறினது என அறிக

என்பதாம்.

இங்கு **மதுரைச் சிவப்பிரகாசர் சைவசித்தாந்த மரபுக்கு மாறாக எழுதியிருக்கிறார்** எனத் தெரிகிறது. சிவத்துக்கு அருளே திருமேனி. மாயை திருமேனியன்று. அதிட்டானமே இவர் எடுத்துக் காட்டிய *வித்தையோ டீசர்* என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்துக்கு மாதவச் சிவஞானமுனிவர்

> சுத்த தத்துவம் ஐந்தும் அவ்விறைவனுக்குச் சுதந்திரமாகிய அதிட்டான முமாம்-

என்று உரை எழுதி-

> அநந்த தேவர் முதலியோர் வாயிலாக நின்று அதிட்டிக்கப்படும் ஏனைமாயேயம் போலன்றித் தானே அதிட்டிக்கப்படுதலின் இவை சுதந்திர வடிவம் எனப்பட்டன; அதிட்டானத்தை வடிவம் என்று உபசரித்தார்-

என விளக்கம் எழுதியுள்ளார்.

இத்திருவிருத்தத்துக்கு முந்தின திருவிருத்தமாகிய **ஞானமே ஆனபோது** என்னும் திருவிருத்தத்தில்

லயம் போகம் ஆனபேரதிகாரத்தோடு அதிகரணத்தன் ஆமே

எனவருவதும் அதற்கு

> இலயம் போகம் அதிகாரம் என மூன்றாய் அடங்கும் அவத்தைகளையும் அவத்தைகளுக்கு ஏதுவாய் அங்ஙனம் வேறுபட்ட ஆதாரங்களையும் உடையவனாய்-

என்று முனிவர் உரை எழுதியிருப்பதும் இங்கு நினைத்தல் தகும்.

மதுரைச் சிவப்பிரகாசர் மற்றோரிடத்திலும் தம் உரையில் சிவப்பிரகாசம் சார்புநூல் என்பதற்குக் காரணம் எழுதியிருக்கிறார். அது:

> தத்துவங்கள் தோன்றுமிடத்துச் சித்தியாரில் காலம் முதலாகத் தோன்றும் என்று சொல்லியிருக்க இந்நூலில் (சிவப்பிரகாசத்தில்) கலை முதலாகத் தோற்றம் சொன்னது ஏதென்னில் சித்தியார் செய்தருளினவர் பிரபஞ்சத் தோற்றம் சொல்லுகையால் காலம் உண்டாகவே பிரபஞ்சம் தோன்றுகையாலே காலம் முதலாச் சொன்னதென அறிக. இந்நூல்

செய்தருளினவர் ஆன்மாக்களுக்கு உணர்த்தும் முறைமையைச் சொல்லுகையாலே உணர்த்துகைக்குக் கலை முந்தி எழுப்ப வேண்டுகையால் கலையை முந்திக் கூறியதென அறிக. அப்படி வேற்றுமை கூறியது ஏதென்னில் இது சார்பு நூலாகையால்...........என அறிக என்பதாம்.

இங்ஙனம் காரணம் கூறியவர் அதில் நிலைத்து நிற்காமல்-

> இத்தத்துவத்தோற்றம் அனந்த தேவநாயனார் ஒருவர் நடத்துகையால் அப்படி முன்பின்னாகக் கூறியது எனினும் ஆம்

என்று ஒரு சமாதானம் எழுதிவைத்தார் வித்தையும் அராகமும் மாயைதனில் ஆகும் என்பது பற்றி இவர் ஒன்றும் எழுதவில்லை.

இப்படி ஒரு ஐயம் மாதவச்சிவஞான முனிவர்க்கும் தோன்றியுள்ளது. இதற்கு அவர் கூறும் அமைதி

> காலதத்துவம் காலமும் நியதியும் தனக்குத் துணைக்கருவியாகக் கொண்டு முதற்காரணமாய் நின்று வித்தை அராகம் முதலியதத்துவங்கள் எல்லாவற்றையும் தன்பால் நின்று தோற்றுவிக்கும் எனத் தத்துவப்பிரகாசம் என்னும் வடநூலுள் ஓதுதலின் அஃது உணர்ந்து கோடற்கு அம்முறை வைத்தார் என்க-

என்பதாம் (மாபாடியம் சூ 2, அதி 2)

எப்படியாயினும், இது வழிநூல் கூறும் வைப்பு முறைக்குமாறுபட்டிருக்கிறது; எனினும் தத்துவங்கள் தோன்றும் முறை தொழிற்பாட்டுமுறை என்ற இருவகையில் தோன்றும்

முறையில் காலம் முன்னர்க் கூறப்படும்; தொழிற்பாட்டு முறையில் கலை முன்னர்க் கூறப்படும். இதனைப் பெரிய திரிபு என்று கூறுதல் இயலாது. இது பற்றிச் சிவப்பிரகாசம் சார்புநூல் எனச்சாதிப்பது பொருந்தும் எனத் தெரியவில்லை. இங்ஙனம் ஒரு சில இடங்களில் வேறுபட்டிருப்பதனைத் **திரிபு வேறுடையது புடை நூல்** - என்னும் இலக்கணமாகக் காட்டுதல் பொருந்தும் எனத் தெரியவில்லை.

மாதவச் சிவஞானமுனிவரும் சிவப்பிரகாசத்தையும் உமாபதி சிவத்தையும் தமது சிவஞானபோதம், சித்தியார் உரைகளில் குறிப்பிடும் இடங்களிலெல்லாம் புடைநூல் என்றும் புடைநூலாசிரியர் என்றும் கூறிச் செல்கிறார்.

எனினும் வழிநூல் பின்னோன் வேண்டும் விகற்பம் கூறியது என்றோ புடைநூல் திரிபுவேறுடையது என்றோ எங்கும் கூறவில்லை. (பார்க்க: சித்தியார் சுபக்கம் *உருவொடு கருவி எல்லாம்* - 93 பொழிப்புரை)

சிவஞானசித்தியாரில் சிவஞானபோதம் கூறிய சில தொடர்களையே அருள்நந்திசிவமும் கூறியது ஆசிரியவசனம் கூறுதல் என்னும் வழி நூல் மரபுபற்றி என்க என எழுதினார்.

அவ்வாறே சிவப்பிரகாசம் கலை, காலம், நியதியொடு வித்தை அராகம் இவை மாயைதனில் ஆகும் என முறைபிறழக்கூறியது பற்றி எழுதிய இடத்தில் முறை பிறழ வைத்ததனால் தத்துவப்பிரகாசம் என்னும் வட நூல் சொல்லும் முறை ஒன்றை நினைவுபடுத்தினார் என்று எழுதினார். இது நூல் செய்வார் மேற்கொள்வதோர் உத்திவகை எனலாமேயன்றி இதனைத் திரிபு வேறு உடையது எனக் கூறுதல் பொருந்தாது.

இதனால் இது உமாபதிசிவத்துக்குக் கருத்து என்பது பெறப்படாது. இதற்குரிய சமாதானத்தை முன்னமே தோன்றும் முறைப்பற்றிக் காலம் முன்னதாகக் கூறப்படும்; தொழில் முறைமை பற்றிக் கலை முதலில் கூறப்படும்;

இரண்டற்குமிடையே முரண்பாடு இல்லை என மாதவச் சிவஞான முனிவர் எழுதிவிட்டார்.

மற்ற இடங்களிலெல்லாம்

> இவற்றின் இயல்பெல்லாம் வழி நூல் புடை நூல்களின் விரித்து ஓதுதலின் ஆண்டுக்காண்க

என்றும்

> இக்கருத்துப் பற்றியன்றே சிவஞானசித்தி சிவப்பிரகாசம் முதலியவற்றுள் மாயை இரண்டென வகுத்து ஓதித் தொகை கூறுங்கால் வேறு எண்ணாது ஒன்றாக வைத்து எண்ணி ....

எனவும் என்றார் புடைநூலாசிரியரும்;

> என்ற புடை நூலாசிரியர்க்கும் இதுவே கருத்து;
> புடை நூலாசிரியர் சித்தாந்தம் செய்தார்

எனவும் பல இடங்களில் எழுதிச் சென்றுள்ளார்.

எனவே திரிபுவேறு உடைமையால் சிவப்பிரகாசம் புடைநூல் எனக் கூறப்படவில்லை என்றே முடிவு செய்தல் வேண்டும் எனத் தெரிகின்றது. மாதவச்சிவஞானமுனிவர் சித்தியார் சுபக்கம் *அருமறை ஆகமம் முதல்நூல்* என்பதன் உரையில் எழுதிய குறிப்புப்படியும் சிவப்பிரகாசம் புடைநூலாவதற்கு இயைபு இல்லை.

மதுரைச்சிவப்பிரகாசர்தான் சிவஞானபோதம் வடமொழி மூலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதாகிய வழிநூல் என்ற கருத்தை முதல் முதல் தம் நூலில் இடம்பெறச் செய்தவர் என்பதுசிவஞானபோதம் தமிழ் முதல் நூலே; மொழி பெயர்ப்பல்ல; 120 காரணங்கள் (ஆசிரியர் சைவத்திரு ம. பாலசுப்பிரமணிய முதலியால் பிஎ.பிஎல்) எனும் நூலில் காரணம் 42 ல் காட்டப்பட்டுளது.

எனவே வடமொழி மூலம் இறைவன் செய்தது முதல் நூல். சிவஞானபோதம் மெய்கண்டார் மொழிபெயர்த்தது வழிநூல். சிவஞானசித்தியார் வடமொழி மூலத்தின் தமிழ் மொழி பெயர்ப்புக்கு வழிநூல். **சிவப்பிரகாசம்** இந்த இரு நூல்களையும் நோக்கி இவற்றுடன் வேறு வடமொழி நூல்களையும் திருவருளையும் கலந்து எழுதப்பட்ட **சார்புநூல் என்னும் கருத்தையும் இம்மதுரைச்சிவப்பிரகாசரே** பரவச் **செய்தார்;** இதற்கு இவர் நன்னூல் பொதுப் பாயிரத்தில் உள்ள முதல் நூல் வழி நூல் சார்பு நூல் இலக்கணம் கூறும் சூத்திரங்களை ஆதாரமாக் கொண்டார் என்று முடிவு செய்யவேண்டியுள்ளது. நன்னூலில் உள்ள சூத்திரங்கள் வரையறையான இலக்கணம் கூறவில்லை, அச்சூத்திரங்களைக் கொண்டு சிவஞானபோதம் முதல்நூல், சித்தியார் வழிநூல் சிவப்பிரகாசம் சார்புநூல் எனச் சாதித்தல் பொருந்தாது என்பதும் முன்னரே விளக்கப்பட்டன.

எல்லாவற்றுக்கும் மூலமாக அமைந்தவை

குவலயத்தில் அவ்வழி எம் குருநாதன் கொண்டு
தீதகல எமக்களித்த ஞான நூல் -

என அருணந்தி சிவம் கூறியதும் ,

தெரித்த குருமுதல்வர் உயர் சிவஞானபோதம் செப்பினர்;
பின்பு அவர் புதல்வர் சிவஞானசித்தி விரித்தனர் -

என உமாபதிசிவம் கூறியதுமேயாகும் எனக்கருதலாம். இவற்றின் பின் மூன்றாவதாக எழுந்த நூல் ஆதலின் சிவப்பிரகாசம் சார்பு நூல் எனக் கருதப்படலாயிற்று.

திருவாவடுதுறை ஆதீனத்தின் தொடக்ககாலத்திலேயே இக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆதலின் இதுவே நிலைத்து விட்டது எனலாம்.

இவற்றை மனத்தில்அமைத்துக் கொண்டு அடுத்தபகுதிக்குப் போகலாம்

உ
சிவமயம்

4. தத்துவ ஞான நூல்களில் முதல், வழி, சார்பு

தத்துவ ஞானநூல்கள் என்பவற்றில் நமது பாரத நாட்டைச் சார்ந்த ஞானிகளில் பலரும் வேதாகமங்களையே முதல் நூலாகக் கொண்டுள்ளனர். அவற்றின் வழியே தாம் தாம் கண்ட முடிவுகளைத் தரிசனங்கள் என்னும் பெயரில் மக்களிடையே பரப்பி வந்தனர். அங்ஙனம் விளங்கிவரும் தரிசனங்களை ஆறுவகையாக முன்னோர்கள் வகைப்படுத்தி யுள்ளனர். அவை : 1. நியாயம் 2. வைசேடிகம் 3.சாங்கியம் 4. யோகம் 5. பூர்வமீமாஞ்சை 6. உத்தர மீமாஞ்சை என்பன.

நமது தமிழகத்தில் நிலவிவரும் தத்துவஞானங்களுள் சித்தாந்த சைவம் என்பது மேலே கூறப்பட்ட ஆறனுள் அடங்குவதன்று. முயன்று அடக்கிக் கூறவேண்டுமென்றால் உத்தர மீமாஞ்சையில் ஒருவாறு அடக்கலாம்.

உத்தர மீமாஞ்சை எனப்படும் சங்கர வேதாந்தம் உபநிடதங்களில் கூறப்படும் மகாவாக்கியங்களின் பொருளை ஆராய்கின்றது. சித்தாந்த சைவமும் அவற்றையே ஆராய்கின்றது. ஆனால் சங்கர வேதாந்தம் பிரமசூத்திரம் அல்லது வியாச சூத்திரம் என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மற்றும் உபநிடதங்களையும் பகவத் கீதையையும் உடன் கொள்கின்றது. சித்தாந்த சைவம் சிவஞானபோத சூத்திரம் என்பதனை அடிப்படையாகக் கொள்கிறது. தமிழில் உள்ள திருக்குறள், திருமுறைகள் என்பன சிவஞானபோத சூத்திரப் பொருளை ஆராய்வதற்குத் துணை செய்கின்றன. இது பற்றிச் சித்தாந்த சைவம் காலத்தால் பிற்பட்டது எனக் கருதுவது பொருந்தாது. இதன் மூலம் சிவாகமங்கள் என்பதும் சிவாகமங்களுக்குச் சைவ நூல் எனவும் சித்தாந்தம் எனவும் பெயர் கூறப்படுகின்றது என்பதும் இங்கு மனத்தில் கொள்ளத்தக்கன.

இது பற்றி மெய்கண்ட நூல்களுள் ஒன்றாகிய சிவஞானசித்தியாரில் காணப்படும் சில செய்திகள் இப்பகுதியில் எழுதப்படுகின்றன.

சிவஞானசித்தியார் அளவை இயலில் உரையளவை யின் வகையைக் கூறவந்த இடத்து வேதாகமங்களை :

அநாதியே அமலனாகிய அறிவன் நூல் (செய்----)
எனக் கூறுகிறது. இதற்கு மாதவச் சிவஞானமுனிவர்,

> அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன் அருளிச் செய்த வேதாகமங்கள்

என உரை எழுதி

> அறிவன் நூல் என்புழி ஆறாவது செய்யுள் கிழமைக் கண் வந்தது

எனக் குறிப்பும் எழுதினார். எனவே **வேதாகமங்கள் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் செய்த முதல் நூல்கள்** என்பது பெறப்படும்.

அங்ஙனம் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் வேதம் மட்டும் அல்லது ஆகமம் மட்டும் செய்யாமல் இரண்டு வகையாக முதல் நூல் செய்வானேன்? முதல் நூல் என்பது ஒன்றாகத் தானே இருத்தல் வேண்டும்! என்று ஐயம் எழும். இதற்கு விடை.

வேதம், ஆகமம் எனப் பெயர் வேறு வேறாய் இருந்தாலும் இரண்டும் வேதம் என்னும் ஒருபெயராலேயே வழங்கப்படும். வேதமும் அளவையிலக்கணம் சொல்லுமிடத்து ஆகம அளவை என்றே கொள்ளப்படும். ஆகமங்களும் முதல் நூல் எனப் பேசுமிடத்து வேதம் என்றே கொள்ளப்பபடும். இதனை மாதவச்சிவஞானமுனிவர் தமது மாபாடியத்தில் சிறப்புப் பாயிரப்பாடியத்தில் நீலகண்ட பாடியத்தை மேற்கோள் காட்டி விளக்கியிருக்கின்றார்.(பார்க்க சிவஞானபாடியம் கழகப் பதிப்பு பக்கம் 22)

இறைவன் செய்த நூல் ஒன்றே பயன்படும் வகைபற்றி இரண்டாகக் கூறப்பட்டது. அதாவது உலகத்தார்க்குப் பயன்படுவது வேதம். சத்திநிபாதத்தார்க்குப் பயன்படுவது சிவாகமம். எனவே பெயர் இரண்டாயினும் முதல் நூல் என்ற நோக்கில் ஒரு நூல் எனவே கொள்ளத்தகும். இதனை

வேத நூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்;.....

....

ஆதிநூல், அநாதி அமலன் தரும் நூல்; இரண்டும்,
ஆரண நூல் பொது சைவம் அரும் சிறப்பு நூலாம்;
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது

எனவரும் சிவஞானசித்தியாரும்.(சுபக்கம் 267) இதன் உரையில்

> அற்றேல் முதல்வனால் தரப்பட்டும் முதல் நூலை ஒன்றாக வைத்து எண்ணாமல் இங்ஙனம் இருவகைப்படுத்து எண்ணியது என்னை எனின்? முதல்வன் பெருங்கருணையாளன் ஆதலின் உலகத்தார் உய்தற் பொருட்டும் சத்திநிபாதம் உடையார் உய்தற் பொருட்டும் திருவுளத்திற் கருதி ...... வேதமும் சிவாகமும் செய்யப்பட்டன

என்று எழுதியிருப்பதனாலும் அறியலாம்.

இச்சிவஞானசித்தியார் நூல்வகைகளைப் பற்றிப்பின் வருமாறு கூறுகின்றது.:

> சமயங்களும் சமயப் பொருள்களைக் கூறும் நூல்களும் ஒன்றொடொன்றொவ்வாதனவாய் மிகப்பல உள்ளனவே! இவற்றுள் முதன்மையான சமயம் யாது ? அச்சமயப் பொருளைக் கூறும் நூல் யாது? என்பது வினா. இதற்கு விடை
>
> இது ஆகும்; இது அல்லது என்னும் பிணக்கின்றி எல்லாம் ஓரிடத்தே காணுமாறு நிற்பது எதுவோ அது முதன்மைச் சமயம்; அச்சமயப் பொருளைக் கூறும் நூலே நூல். என்பதாம்.

எனவே எல்லாம் அருமறை ஆகமத்தே அடங்கும். ஏனைச் சமயங்கள் கூறும் பொருள்களெல்லாம் வேதாகமங் களில் கூறப்பட்ட பொருளின் ஏகதேசமே.

1. முதல் நூல்:

வேதாகமங்கள் சிவபெருமானால் செய்யப்பட்டன; அவனையே தமக்கு முதலாகக் கொண்டுள்ளன. எனவே **அருமறை ஆகமம் முதல் நூல்.**

இவ்வேதாகமங்களில் கூறப்பட்ட பொருளை மக்கள் முழுவதும் உணரமாட்டாதவர். ஆதலினால் சமுத்திர கலச நியாம் பற்றித் தாம்தாம் அறிந்த அளவில் தர்க்கமும் வினாவிடையு மாகச் சமயம் சாதித்துத் தத்தம் கருத்தையே கூறுவார்கள். அவையெல்லாம் **பூர்வ பக்க நூல்கள்** எனப்படும்.

2. வழி நூல்:

மிருதி, புராணம், கலைகள், உபாகமங்கள் எல்லாம் மெய்ந்நூலாகிய வேதாகமங்களின் பொருளை உள்ளவாறு உணர்ந்தோர் அவற்றைப்பிறர்க்கு இனிது விளங்குதற் பொருட்டுத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் வழிப்படுத்துச் செய்யப்பட்ட வழி நூல்கள் எனப்படும்.

3. சார்பு நூல்:

ஆகமாங்கங்களும் வேதாங்கங்களும் ஆகமங்களையும் வேதங்களையும் உள்ளவாறு உணர்தற் பொருட்டுச் சார்பாய்ப் புடைபட்டு நிகழ்தலின் அவை சார்பு நூல் எனப்படும்.

இங்குக் கூறப்பட்ட செய்திகளை **ஓது சமயங்கள், அருமறை ஆகமம்** என்னும் தொடக்கங்களை உடைய சிவஞானசித்தியார்த் திருவிருத்தங்களாலும் அவற்றின் உரையாலும் அறியலாம்.

இதுவரை கூறியவற்றால்

1. வேதமும் சிவாகமமும் முதல் நூல்.

2. புராணம் முதலியன வழிநூல்.

3. வேதாங்கமும் ஆகமாங்கங்களும் சார்பு நூல் எனப்படும் என்பன பெறப்படுகின்றன.

சிவப்பிரகாசம் ஆகமாங்கம் போன்றதன்று; வேதாங்கம் போன்றதன்று. சிவஞானபோதமாகிய முதல் நூல் சொல்லும் பொருளையே சொல்வது.

ஆகமாங்கம், வேதாங்கம் என்பன ஆகமங்களின் பொருளையும் வேதத்தின் பொருளையும் உணர்வதற்குரிய **கருவி** நூல்கள். சிவப்பிரகாசம் கருவி நூலன்று.

மேலும் புடைநூல் என்பது முதல் நூலில் சொல்லப்பட்ட பொருளை உணர்வதற்குப் புடைபட வைத்து நோக்கும் நூல் என்று தான் அருள்நந்திசிவம் பொருள் கொண்டார்; ஒரு புடை ஒத்த நூல் என்று பொருள் கொள்ளவில்லை என்பதும் இதனால் விளங்குகின்றது.

அவ்விரண்டையும் உள்ளவாறு உணர்தற்குச் சார்பாய்ப் புடைப்பட்டு நிகழ்வது என்றே உரை எழுதப்பட்டுள்ளது.

ஆதலின் இவ்வகையாலும் சிவப்பிரகாசம் புடை நூல் என்பதற்கு உரியதாகாது. **இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித் திரிபு வேறுபடுவதாகிய** புடை நூலும் ஆகாது.

வேறு எவ்வகையால் (சிவப்பிரகாசம்) புடை நூலாகும் எனின் முதல் நூற் பொருளை அது சொல்லிச் செல்லும் வகையால் சொல்லாமல் ஒரு பயன் கருதிப் பிறிதொரு வகையால் கூறுவதனால் அதாவது நூல் அமைப்பு முறையினால் புடைநூலாகும் என்றே கூறுதல் வேண்டும்.

உ

சிவமயம்

5. புடைநூலாசிரியர் உமாபதி சிவம்

உமாபதிசிவம் புறச்சந்தான குரவர்களுள் நான்காமவர். இவருடன் சந்தான பரம்பரை முடிவுற்றது. இவருக்குப் பின்னர் அபிடேக பரம்பரை என்பது தொடங்குகின்றது.

இவர் சித்தாந்த சைவத்துக்காக எட்டு நூல்கள் அருளிச் செய்தார். மெய்கண்ட சந்தானத்து நூல்கள் பன்னிரண்டில் மூன்றில் இரண்டுபங்கு இவருடையது.

இவர் தில்லைநகரத்துத் தீட்சிதர் மரபில் தோன்றியவர். நடராசப் பெருமானுக்கு வழிபாடு செய்யும் மரபு உரிமை உடையவர். அருள் நந்தி சிவத்தின் மாணாக்கராகிய மறைஞான சம்பந்தரைக் குருவாகக் கொண்டவர்.

மறைஞானசம்பந்தர் பராசரமுனிவர் மரபினர். சாமவேதி. வைதிகப்பிராமணர். சித்தாந்த சைவ நெறியினை மேற்கொண்டு அருள் நந்தி சிவத்திடம் உபதேசம் பெற்றவர் ஆதலின் மகா சைவர் என மதிக்கத்தக்கவர்.

இம் மறைஞானசம்பந்தர் உமாபதி சிவத்தை ஆட்கொள்ளும் வகையில் **பட்ட கட்டையில் பகற் குருடு போகிறது** என்றொருவாசகத்தைக் கூறினார் என்பர். அதனைக் கேட்டு அதன் பொருள் நுட்பம் உணர்ந்து இவரே நமக்கு உபதேச குருவாகத் தக்கவர் என உணர்ந்து இவரைப்பின் தொடர்ந்து சென்று இவரிடம் ஞானோபதேசம் பெற்று இவருக்கு மாணாக்கராயினர் என்பர். இவ்வகையில் இவர் மெய்கண்ட சந்தானத்தைச் சேர்ந்தவராயினார்.

1. பட்ட கட்டையும் பகல் குருடும் :

பட்டகட்டை என்பது இவர் அமர்ந்து சென்ற சிவிகையைக் குறிப்பதென்றும் , பகற் குருடு என்பது இவர் பகற்காலத்திலேயே ஆலயத்துக்குச் செல்லும் போதும் இல்லத்திற்கு மீளும் போதும் சிவிகைக்கு முன்னே தீவர்த்தி ஏந்திச் செல்வதாகிய உபசாரத்தைக் குறிப்ப தென்றும் இவ்வாசகத்துக்கு நுட்பப் பொருள் கூறுகின்றனர்.

பட்டகட்டை என்பது இத்தூல தேகத்தைக் குறிப்பது என்றும், பகற் குருடு என்பது இத்தூலதேகத்தில் இருக்கும் ஆன்மா சகலத்திற்கு வந்த பின்னும் உண்மைப் பொருளைக் காணாமல் குருடாயிருபதைக் குறிப்பது என்றும் கருதுவது பொருந்தும்.(ஆணவமலத்துடன் அநாதியே கிடந்த அபக்குவ நிலையினை இரவுக் குருடு எனலாம்)

தூலதேகம் சிறிது காலம் இருந்து அழியக்கூடியது. இதிலிருந்து இன்னொரு தூலதேகம் இவ்வான்மாவுக்கு வாய்க்கப் போவதில்லை.(சூக்கும தேகத் திலிருந்து பூதசார தேகமோ, யாதனா சரீரமோ வரும்) ஆதலின் இது பட்ட மரமே. சிறிது காலம் இருந்து பின்னர் இது வேரிலிருந்து விடுபட்டு இற்று அழிவதேயாகும்.

சகலநிலையைப் பகல் என்றும் கேவலநிலையை இருள் என்றும் கூறுவது மரபு. இரவிலே கண் அலர விழித்துக் கொண்டிருந்தாலும் பொருளைக் காணமாட்டாததாக இருக்கும். விளக்கொளி கிடைத்த பின்னும் கண் அதன் உதவியில் பொய்ப் பொருளை மெய்ப் பொருளாகக் காணுகிறதே யொழிய பொய்ப் பொருளை நீக்கி மெய்ப் பொருளைக் காணமாட்டாததாகவே இருக்கும். **மெய்ப் பொருளைக் காணமாட்டாத ஆன்மாவுக்கு இதுவும் ஒரு கேவல நிலை என்றே கூறப்படும். இந்நிலையே பகற்குருடு எனப்பட்டது.**

திருவாவடுதுறை ஆதீனத்துச் சுவாமிநாத தேசிகர் அருளிய தசகாரியம் 12 ஆவது பாடலின் பழைய உரை

> கண்ணானது இருட்டு நீக்கவந்த விளக்கத்தினாலேயே மறைபடும். விளக்கினாலும் மறைவு ஏது என்னில் பழுதையைப் பாம்பாகத் திரிவுக் காட்சி படுவதால் மறைவென்றே கூறப்படும். இதுபோல உயிரும் மலத்திலும் அறியாது; கேவலத்திலும் அறியாது; சகலத்தினும் அறியாது.(சகலத்தினும் அறியாது என்பது இருந்திருத்தல் வேண்டும்; ஆனால் அச்சிட்ட நூலில் இல்லை)

என்று கூறுகின்றது.

உமாபதி சிவம் தீட்சிதர் மரபில் பிறந்திருந்தும் நடராசப் பெருமானுக்கு வழிபாடு செய்யும் மரபுரிமையைப் பெற்றிருந்தும், ஆகமங்களை ஓதி உணர்ந்தும், உண்மை ஞானத்தை அறியாமலும், உண்மை ஞானம் அருட்குரவன் அறிவுறுத்தும் உபதேச ஞானத்தால் மட்டுமே விளையும் என்பதை அறியாமலும் அந்த உண்மை ஞானத்தினால் விளையும் சிவானந்தமே உண்மைப்பயன் என்பதை அறியாமலும் தீவர்த்தி, திருச்சின்னம் முதலிய உபசாரங்களுடன் சிவிகையில் அமர்ந்து பூசைக்குச் செல்லுவதும் இல்லத்துக்குத் திரும்புவதுமே பயன் எனக் கருதி அதிலேயே மகிழ்ந்து கிடப்பதையே **பகற் குருடு** என்பது உணர்த்துகிறது எனத் தெரிகின்றது.

திருவருள் வலத்தாலும் சாத்திர நூல்களைப் பயின்று வந்த பழக்கத்தாலும் பகற்குருடு என்பது இந்நிலையினையே உணர்த்துகின்றது என்பதை உணர்ந்த உமாபதிசிவம் அவரே தமக்கு ஞானாசிரியராக அமைதற்கு உரியவர் அவரே தமக்குப் பகற்குருடு என்னும் பழியினைப் போக்குபவர் என அறிந்து சிவிகையை விட்டு இறங்கி அவரைப் பின் தொடர்ந்து சென்றனராதல் வேண்டும்.

இது இந்த அளவில் நிற்க.

சகலத்தில் சுத்தநிலையினை அடைந்தால் பகற்குருடு என்னும் பழி நீங்கும்.

தீட்சிதர் மரபில் தோன்றிய உமாபதிசிவம் வைதீக பிராமணர் ஒருவரையடுத்து ஞானோபதேசம் பெற்றாரே என்று வெறுப்படைந்த தீட்சிதர் அவரை இனத்தை விட்டும் ஊரைவிட்டும் ஒதுக்கிவைத்தனர். அதன் பின் தில்லைக் கூத்தப் பெருமான் பலவகையாலும் உமாபதி சிவத்தின் பெருமையினை அனைவரும் அறியச் செய்ததும் அரசன் அவர்க்குக் கொற்றவன் குடியில் திருமடம் அமைத்துக் கொடுத்ததும் அவர் அங்குத் தங்கியிருந்து நடராசப் பெருமானைப் பூசித்துக் கொண்டும் அன்பர்களுக்கு உபதேசம் செய்து கொண்டும் ஞானநூல்கள் பல அருளிச் செய்து கொண்டும் வாழ்ந்ததும் அனைவரும் அறிந்ததே.

உமாபதிசிவத்தினுடைய வரலாறு சந்தானகுரவர் புராண சங்கிரகம் என்னும் நூலிலும், புலவர் புராணம் என்னும் நூலிலும் கூறப்பட்டுள்ளது. **எல்லாம் செவிவழிச் செய்திகளே.**

2. உமாபதிசிவம் நூல் அருளிச் செய்யும் திறம்:

இங்கு நாம் உமாபதிசிவம் நூல்கள் அருளிச் செய்த திறத்தை மட்டும் சிறிது விரிவாகச் சிந்திக்கலாம்.

1. உமாபதிசிவம் நன்கு திட்டமிட்டு நூல் செய்யும் தன்மையுடையவர்.

2. ஒருநூல் செய்ய வேண்டு மென்றால் அதற்குத் துணையாக எவ்வெவற்றைத் தேடித் தொகுத்துக் கொள்ள வேண்டும் என்று தேடித் தொகுத்துக் கொள்பவர்.

3. நூலின் அமைப்பு எவ்வாறு இருத்தல் வேண்டும்; சொல்ல எடுத்துக் கொள்ளப்பட்ட பொருளை எவ்வாறு வகைப்படுத்துதல் வேண்டும்; என்னென்ன தலைப்புகளிலே கருத்துக்களைத் தருதல் வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து நூல் செய்பவர்.

4. எத்துணை செய்யுட்கள் உடையதாக நூல் அமைதல் வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து நூல் செய்பவர்.

5. முன்னே உள்ள நூல்களில் எவை விட்டுப்போயின; எவை சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன என்றெல்லாம் சிந்தித்துச் சேர்க்க வேண்டியவற்றைச் சேர்த்தும் விரிக்க வேண்டியவற்றை விரித்தும் நூல் செய்பவர்.

6. முன்னூல்களில் சொல்லப்பட்டவை அனைத்தையும் திரட்டி ஒருங்கே எவ்வாறு செய்வது; தனித்தனிச் செய்திகளைத் தனித்தனி நூலாக எவ்வாறு செய்வது என்றெல்லாம் சிந்தித்து நூல் செய்பவர்.

7. முழு நூல் செய்வதற்கு முன்னதாக வரைவுநூல் ஒன்று சுருக்கமாகச் செய்து கொள்பவர்.

8. இவையனைத்திற்கும் மேலாகத் தாம் செய்தளிக்கும் நூலினை யார் யார் எந்தெந்த நோக்கில் பார்ப்பார்கள்; அது தம்மை எவ்வாறு பாதிக்கும் எனவும் சிந்தித்து நூல் செய்பவர்.

9. தாம் செய்யும் நூலை யார் கற்கலாம்; எவ்வாறு கற்கலாம்; யாருக்குக் கற்பிக்கலாம் ; எவ்வாறு கற்பிக்கலாம் என்னும் வழிகாட்டுதலையும் தம் நூலிலேயே கூறிவைப்பவர்.

10. இந்நூலில் இன்னபொருளைக் கூறத் தொடங்கு கிறேன்; அது இத்தகைய சிறப்புடையது எனக் கூறி நூலைத் தொடங்குபவர்.

11. இந்நூலை இவ்வாறு செய்யத் தொடங்குகிறேன் என்று கூறித் தொடங்குவார்; இது வரை இன்னது கூறினேன்; இனி இன்னது கூறுவேன் என நூலினிடையிலும் கூறுவார். தொடங்கியவாறே இவ்வாறு இந்நூலைச் செய்து முடித்தேன் என்று நூலின் இறுதியில் முடித்துக்காட்டுவார். (பார்க்க - சிவப்பிரகாசம் பாயிரம் 7, 11, நூல் 51, 99, 100)

12. இவர் சித்தாந்த சைவத் தத்துவஞானத்தைச் சாத்திர நூலாகச் செய்யவும் தோத்திர நூலாகச் செய்யவும் இலக்கிய நூலாகச் செய்யவும் தனிப்பாடல்களாகச் செய்யவும் ஆற்றல் பெற்றிருந்தார்.

இவையெல்லாம் இவர் அருளிய அட்டகத்தினால் உணரக்கிடக்கின்றன.

3. சிவப்பிரகாசம்:

உமாபதிசிவம் பட்டகட்டை, பகற்குருடு என இரண்டு தொகைச் சொற்களால் ஈர்க்கப்பட்டு மறைஞானசம்பந்தரைச் சரணடைந்தார். அவரால் சுத்தாத்துவித சித்தாந்த சைவத் தத்துவஞானம் உபதேசிக்கப் பெற்றார். அவரால் சிவஞானபோதம், சிவஞானசித்தி என்னும் நூல்கள் கற்பிக்கப்பெற்றார்.

இந்நூல்களைப் பயின்ற அவருக்குச் சிவஞானபோதம் எவ்வாறு சூத்திரமும் அதிகரணப்பகுப்பும் பொழிப்புரையுமாக இருக்கின்றதோ அவ்வாறே சிவஞான சித்தியாரும் சூத்திரப் பொருளும் அதிகரணப்பகுப்பும் விரிவுரையுமாக இருப்பது

புலனாயிற்று. மிக விரிவாக இருப்பதும் புலனாயிற்று. இதனை வேறொரு வகையால் செய்யலாகாதோ என்று சிந்தித்தார். சற்று சுருக்கமாகவும் செய்யலாமே என்றும் சிந்தித்தார். அச்சிந்தனையின் விளைவே நூறு திருவிருத்தங்களால் இருபகுதியாக, இரண்டாம் பகுதி ஏழு தலைப்புக்கள் உடையதாக அமைந்த சிவப்பிரகாசம் என்னும் நூல்.

4. சங்கற்ப நிராகரணம்:

மற்றும் சிவஞானசித்தியார் பரபக்கத்தை நூலின் ஒருபகுதியாகச் செய்தது போல் செய்யாமல் தனி நூலாகச் செய்யலாமே என்றும் சிந்தித்தார். அதன் விளைவே சங்கற்பநிராகரணம் என்னும் தனி நூல் எனத் தெரிகின்றது.

சங்கற்ப நிராகரணத்தில் ஓர் உத்தியையும் பயன்படத்தினார். அது: தத்துவ ஞான விசாரம் - குறிப்பாக இறைவன் திருவருள் - அதனால் ஆன்மா பெறும் பயனாகிய முத்தி நிலை எத்தகையது என்பது பற்றிய விசாரம் செய்யும் சபை. அதில் ஒருவன் எழுப்பும் வினா. ஒவ்வொரு சமயவாதிகளும் கூறும் விடை. முடிவாகச் சைவசித்தாந்தி மெய்கண்ட சந்தானத்தைச் சேர்ந்தவர் கூறும் தீர்வு என அமைத்துக் கொண்டது. இங்ஙனம் அமைத்துக் கொள்வதற்கு அவருக்குத் துணை செய்தது ஆனித்திருவிழவில் கூடும் தத்துவஞானிகளின் சபை.

5. சதுரத்தின சங்கிரகம்:

சிவப்பிரகாசம் சிவாகமங்களின் ஞானபாதப் பொருளை உணர்த்துவது ஆகலின் சிவாகமங்களையும் ஒருமுறை பார்த்தார். அவற்றிலிருந்து நூறு சுலோகங்களைத் திரட்டினார். **சதரத்ன சங்கிரகம்** என்னும் பெயரால் அமைத்து வைத்துக் கொண்டார்.

6. தேவார அருள் முறைத் திரட்டு:

தமிழ்த் தேவாரத் திருமுறைகளையும் பார்த்தார். அவற்றிலிருந்து 99 பாடல்களைத் திரட்டினார். அவற்றைப் பத்துத் தலைப்புக்களில் (பதிமுதுநிலை முதலாக அணைந்தோர் தன்மை ஈறாக) பகுத்தார். அது **தேவார அருள்முறைத் திரட்டு** என வழங்கப்படுகின்றது.

அப்பத்துத் தலைப்புகளையே அதிகாரத் தலைப்பாகக் கொண்டு ஒவ்வோரதிகாரத்துக்கும் பத்துப் பத்துக் குறட்பாக்களாக நூறு குறட்பாக்களால் ஆகிய **திருவருட்பயன்** என ஒரு நூலினையும் இவ்வண்ணமாக அமைத்துக் கொண்டார். (சிவப்பிரகாசமும் நூறு திருவிருத்தங்களால் ஆனது என்பது இங்கு நினைக்கத்தக்கது) திருவருட்பயன் தொடர்களும் கருத்துக்களும் சிவப்பிரகாசத்தில் அப்படியே அமைந்துள்ளன.

இவ்வளவு முன்னேற்பாடுகளையும் செய்து கொண்டுதான் உமாபதிசிவம் **சிவப்பிரகாசம்** என்னும் நூலைச் செய்யத் தொடங்கி இருக்கிறார். சிவப்பிரகாசமும் திருவருட்பயனும் சேர்ந்தே பயிலத்தக்கன. திருவருட்பயன் பயின்ற பின்னர்ச் சிவப்பிரகாசம் பயிலுவதும் பொருந்தும்.

7. அருள்... தீக்கை:

திருவருள் கொடுத்து மற்று இச் சிவப்பிரகாச நன்னூல் விரிவது தெரியுமாற்றால் - எனவரும் சிவப்பிரகாசத் தொடரிலும், -**சிவப்பிரகாசச் செழுந்தமிழ் உண்மையை அருளுடன் ஆய்ந்து கொள்ள** - எனவரும் சங்கற்பநிரா கரணத்தொடரில் **அருள்** எனும் சொல்லுக்கு **தீக்கை** என உரை கூறுவது வழக்கம். திருவருட்பயனைக் கற்பித்து, திருவருட்பயனுடன் ஆராய என்று உரை கூறுவதற்கும் ஏற்ப இத்தொடர்கள் அமைந்துள்ளன எனத் தெரிகின்றது.

8. சுருக்கமும் விரிவும்:

1. சிவஞானசித்தியாரில் (வழிநூலில்) எட்டாஞ் சூத்திரம் முதல் அதிகரணத்தில் சொல்லப்பட்ட தீக்கை முறையினை (பத்துத் திருவிருத்தங்களில் சொல்லப்பட்டுள்ளது) உமாபதி சிவம் பாயிரத்தில் சுருக்கமாகக்(மூன்று திருவிருத்தங்களில்) கூறிவைத்தார்.

2. உமாபதிசிவம் இவற்றைப்பாயிரத்தில் கூறியதற்குக் காரணம் தீக்கையுடையோரே ஞானநூலை ஓதுதற்குத் தகுதியுடையர் என்பதனை வற்புறுத்தவே எனலாம். வழி நூலில் எட்டாஞ்சூத்திரத்திலும் இக்காரணத்தினாலேயே இது விரித்துரைக்கப்பட்டது எனலாம்.

3. முதல் நூலும் வழி நூலும் முதலில் பொருளுண்மையினை அளவையினால் நிறுவிக் கொண்டு பின்னர் இலக்கணம் கூறுகின்றன. உமாபதிசிவம் முதலில் இலக்கணம் கூறி(13)ப் பின்னர் பதி உண்மையினை நிறுவுகின்றார் (16). இவ்வாறே ஆணவமலத்துக்கு இலக்கணம் கூறி (20)ப் பின்னர் நெடுந்தூரம் சென்று அதன் உண்மையினை நிறுவுகிறார் .(34, 35,36)

3. கன்மத்தைப்பற்றிச் சொல்கின்ற பொழுது **-பிராயச்சித்த கன்மம் -** என ஒன்றைக் கூறுகிறார். இது சிலருக்கு விவாதப் பொருளாகவும் அமைந்துவிட்டது. இது ஆசிரியன் கற்பித்த ஞானநெறியில் நிற்றலில் அடங்கும் ஆதலின் இது விவாதத்துக்கு உரியதன்று.

(விரிவு: நான் எழுதும் சைவசித்தாந்தம் - தொகையும் விரியும் என்னும் நூலில் காண்க)

4. தத்துவங்களின் வரிசையில் குணதத்துவத்தையும் புத்தி தத்துவத்தையும் இவர் சற்று விரித்துக் கூறிப் புத்தி குணபாவகங் களுக்குத் தொகை கூறியுள்ளார்.(பாடல் -42)

5. வழிநூலில் மூலப்பிரகிருதி கலையில் தோன்றிக் குணவடிவாய் வரும் என்றும், அக்குணம் சாத்துவிகம் முதலிய (சாத்துவிகம், ராசதம், தாமதம்) மூன்றாக இருக்கும் என்றும், பின்னும் அவற்றுள் ஒவ்வொன்றும் முத்திறப்பட்டு ஒன்பது வகையாகும் என்றும் அதன் கண் (மூலப்பிரகிருதியிலிருந்து) தோன்றும் புத்தி முதலிய தத்துவங்களும் குணவடிவேயாய்ப் போகசாதனமாய் ஆன்மாவைப் பந்திக்கும் என்றும் சொல்லப்பட்டது.

உமாபதி சிவம்

1. சாத்துவிகம் -பிரகாசமும் லகுதையும் உடையதாக இருக்கும்,
2. இராசதம் -வியாவிருதியும் அடர்ச்சியும் உடையதாக இருக்கும்,
3. தாமதம் -கௌரவமும் அநியமும் உடையதாக இருக்கும்,

எனவும் விரித்துரைத்தார். மற்றும்

தாமத குணம் -இந்திரிய விடயங்களைக் கைக் கொள்ளும்.

இராசத குணம் -ஆன்மா போகம் கொள்வதற்கு இடமாக இருக்கும்.
சாத்துவிக குணம்-ஒழியாப் பிரகாசமாய் இருக்கும்.

புத்தி தத்துவம் -ஐம்பது பாவகங்களைப் பண்ணும்

என்று விரித்துரைத்தார். இது வழி நூலில் விரித்துரைக்கப்படாத செய்தி.

(பிரகாசம் - அறிவுடைமை; லகுதை -சாந்தம் உடைமை;
வியர்விருதி - சலனம் உடைமை; அடர்ச்சி -குரோதம் உடைமை;
கௌரவம் - செருக்குடைமை; அநியமம் -நியமம் தவறி நடத்தல்)

இந்தப் புத்தி குணபாவகங்களை மாதவச் சிவஞானமுனிவர் தமது மாபாடியத்தில் தன்மம் முதலிய எட்டாக வகுத்தும், அறுநூற்றுப்பன்னிரண்டென விரித்தும் கூறினார். இன்னும் குணவிருத்தியைப் பலரும் பலவாறு விரித்துரைத்தனர்.

6. வழி நூலில் எட்டாஞ்சூத்திரத்தில் சொன்ன முத்திபேதங் களை உமாபதிசிவம் பொதுவதிகாரத்தின் இறுதியில் வைத்தார்.

7. பொது அதிகாரத்தில் கூறிய ஆன்மாவின் இலக்கணத்தை (19)த் தொடர்ந்து உண்மையதிகாரத்தில் ஆன்மா என்பதொன்றில்லை என்றும் ஐம்பொறி முதலியனவே ஆன்மா என்றும் கூறுபவர்களை மறுத்துக் கூறினார். உடம்பின் வேறாய் உடம்பினுள் அறிவுடையதாய் இருந்து கொண்டு அறிதலைச் செய்யும் (53) ஆன்மா என்பதொன்று உண்டு என்பதை நிறுவினார்.

8. அவத்தை கூறுமிடத்தில் முதல் நூலைப்பின்பற்றி அதீதம் முதலாகக் கூறினார். (வழி நூலில் சாக்கிரம் முதலாகக் கூறப்பட்டது)

9. முதல் நூலில் **தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த** - என்று கூறப்பட்டது. வழிநூலில் - **மன்னும் அருட் குருவாகி வந்து** - என்று கூறப்பட்டது (அருள் என்பதற்கு மாதவச்சிவஞானமுனிவர் தவமுதிர்ச்சி என்று உரை கூறினார். அப்படி உரை கூறினால் தான் முதல்நூல் போல் அதிகரணப்பகுப்புக் காட்ட முடியும்) உமாபதி சிவம் - **முன்னம் ஈட்டிய தவத்தினாலே இறை; யருள் உருவாய் வந்து** - என முதல் நூல் வழிநூல் இரண்டையும் பின்பற்றி இணைத்துக் கூறினார்.

10. தசகாரியம் - ஞானச் செய்தி - பத்தாகக் கூறப்படுவது என்பது அதன் பெயராலேயே விளங்கும். முதல் நூலிலும்

வழி நூலிலும் தசகாரியம் சொல்லப்பட்டுள்ளது. எனினும் பெயரும் தொகையும் விளக்கமாகக் கிளந்தெடுத்துக் கூறப்படவில்லை. சித்தாந்த சைவத்தத்துவஞானம் கூறும் நூல்கள் எல்லாமே தசகாரியம் கூறுவனவே.

உமாபதி சிவம் தசகாரியத்தை ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்மலாபம் என மூன்றாக அடக்கிக் கூறினார். (இவரே உண்மை நெறி விளக்கத்தில் பத்தாகக் கூறித் தனித்தனியே விளக்கமும் கூறினார். ஆனால் உண்மைநெறி விளக்கம் உமாபதிசிவம் செய்ததன்று.

உமாபதிசிவம் கூறும் பொருட் போக்குக்கும் உண்மை நெறி விளக்கத்தின்பொருட் போக்குக்கும் வேறுபாடு உள்ளது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.) ஆன்ம லாபம் என்பது சிவபோகம். ஆன்மசுத்தி என்பது சிவதரிசனம், சிவயோகம் என்பன.

எனவே ஆன்ம தெரிசனம் என்பது தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம் என்பன என்பது உமாபதிசிவத்தின் கருத்து எனத் தெரிகின்றது. சிவரூபம் என்பதும் ஆன்மதரிசனம் என்பதில் அடங்கும்.(6 + 3 + 1 = 10) தத்துவரூபம் முதலிய நான்கும் பயன்படுவன அல்ல என ஒதுக்கப்படும்.

11. திருவைந்தெழுத்துப் பற்றி முதல்நூலும் வழிநூலும் எடுத்துக் கூறவில்லை. **விதி எண்ணும் அஞ்செழுத்தே** - (சூ-9) என முதல் நூலும் -**ஓசை தரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க** -(292) என வழிநூலும் கூறி அமைந்தன.

உமாபதிசிவம் அஞ்செழுத்து, அஞ்செழுத்தின் பொருள் நிலை, அஞ்செழுத்தில் யகரத்துக்கு நகர மகரங்களின் சம்பந்தம், அதன் விளைவு, வகர சிகரங்களின் சம்பந்தம் அதன் விளைவு, ஓதும் முறை முதலியவற்றை விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

மாதவச் சிவஞானமுனிவரும்

> இதன் இயல்பனைத்தும் உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட் பயன், கொடிப்பாட்டு, நெஞ்சு விடு தூது முதலியவற்றின் விரித்து ஓதுதலின் அவையெல்லாம் ஆண்டுக் காண்க

(சூ 9, அதி 3). என்று எழுதினார்.

முனிவர் காட்டிய நூல்களுள் உண்மை விளக்கம் தவிர மற்றை நான்கும் உமாபதிசிவம் அருளியவை. இதனால் திருவைந்தெழுத்தை விளக்கிக் கூறுவதில் உமாபதி சிவம் தனிச்சிறப்பு உடையவர் என்பது புலனாகும். நெஞ்சு விடு தூதில் குரு மாணாக்கனுக்கு ஐந்தெழுத்தை உபதேசித்து அவ்வான்மாவில் அதன் அனுபவம் விளங்கச் செய்யும் முறையினை மிக **அழுத்தமாகப்** பாடியுள்ளார். (பார்க்க கண்ணி 93-98)

௯. சிவப்பிரகாசம் சார்பு நூல் - காரணங்கள்:

இங்ஙனம்

1. *நூலமைப்பு முறையினாலும்,*
2. *பொருட் பாகுபாட்டு முறையினாலும்,*
3. *பொருள்களை இடம் மாற்றிக் கூறும் முறையினாலும்,*
4. *முதல் வழி நூல்களை இணைத்துக் கூறும் முறையினாலும்,*
5. *வழி நூலில் விரிக்காது விட்டவற்றை விரித்துக் கூறும் முறையினாலும்,*
6. *வினைத் தீர்வுக்குரிய வழிகளுள் ஒன்றை விளங்கக் கூறிய முறையினாலும் -*

சிவப்பிரகாசம் *சார் நூலாயிற்று எனத் தெரிகிறது.*

இங்ஙனம் அன்றிச் சிறிது ஒத்துப் பெரிதும் வேறுபட்டு நிற்றல் என்றோ தொடக்கம் ஒத்து முடிவு வேறுபட்டு நிற்றல் என்றோ காரணம் கூறுவதற்கு இடமில்லை.

இறையனாரகப் பொருள் உரையில் -

அவ்விரு நூலுள்ளும் ஒரு வழி முடிந்த பொருளை
ஓர் உபகாரம் நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது
சார்பு நூல்–

என எழுதப்பட்டுள்ளது இச்சிவப்பிரகாசத்துக்குப் பொருந்தும் எனத் தெரிகிறது.

10. எட்டு நூல்களும் சார்பு நூல்களே:

இப்புடை நூலாசிரியர் சித்தாந்த சைவத் தத்துவஞானத்தை விளக்குவதற்கு முழுமையான நூலாக இச்சிவப்பிரகாசத்தைச் செய்தது போதாதென்று வேறும் ஏழுநூல்கள் செய்வானேன்?

இச்சிவப்பிரகாசத்துடன் இணைத்துப்பயில வேண்டிய நூல் **திருவருட்பயன்**[1] என்பது முன்னமே கூறப்பட்டது. திருவருட்பயனும் சைவசித்தாந்தத் தத்துவஞானத்தை முழுமையாக விளக்கும் நூல். சிவம், உயிர், மலம், குரு, உபதேசம், உபதேசப்பயன், இன்பத்தின் இயல்பு, அஞ்செழுத்து, பயனடைந்தோர் இவ்வுலகில் வாழும் நிலை எனத் தனித்தனித் தலைப்புகளில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் சைவ சித்தாந்தத்தை எளிமையாக விளங்கிக் கொள்ளவும் நினைவில் பதிய வைத்துக் கொள்ளவும் உதவுவது; சிறுவர்களும் எளிதில் மனப்பாடம் செய்து கொள்ள உதவுவது.

எப்படியேனும் சைவசித்தாந்தத்தை மக்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும் என்னும் கருணை மிகுதியினால் நூல் செய்பவர் உமாபதிசிவம்.

கள்ளத் தலைவர் துயர் கருதித் தம் கருணை
வெள்ளத்து அலைவர் மிக-

எனத் திருவருட் பயனில் இவர் கூறிவைத்தார் (100) அதற்கு இவரே உதாரணமாகவும் விளங்குகின்றார்.

சித்தாந்த சைவத் தத்துவஞானத்தைக் கேட்டபின் சிந்தித்தல் வேண்டும். சிந்தித்தால் ஐய வினாக்கள் தோன்றும். அவற்றைப் தம்மைப்போல் குருமுகமாகக் கேட்டவரிடத்து வினவுதலும் அவர் தொடுக்கும் வினாவுக்கு விடை கூறுதலுமாகிய பயிற்சியினால் போக்கிக் கொள்ளலாம். அல்லது கற்பித்த ஆசாரியனிடத்திலேயே கேட்டுத் தெளிந்து கொள்ளலாம்.

இந்தவகையில் வழிநூலாசிரியர் **இருபா இருபஃது** என்னும் நூல் செய்து வைத்தார். அவரைப் பின்பற்றி வினா வெண்பா என்றொரு நூல் செய்தார். இது முழு நூலன்று. தனித்தனித் தலைப்புக்களாக எடுத்துக் கொண்டு பேசும் நூலுமன்று. சில இடங்களில் தோன்றக் கூடிய ஐயங்களை மட்டுமே எடுத்து வினாவுகின்ற நூலாக அமைந்துள்ளது. வினா மட்டுமே பாடலில் உள்ளது. விடை சிவஞானசித்தி, சிவப்பிரகாசம் முதலிய நூல்களில் அமைந்திருக்கும் . தேடித் தெரிந்து விடை காணவேண்டும்.

இந்தப் பயிற்சியின் இன்றியமையாமையினை இவரே எடுத்துக் கூறியுள்ளார். இந்தப்பயிற்சியினை மேற் கொள்ளாவிட்டால் ஒருவன் கற்ற, கேட்ட தத்துவஞானம் ***ஊமையன் கண்ட கனவு போல்*** இருக்கும்(வினா வெண்பா 13) என்கிறார்.

அருள்நந்தி சிவமோ, திருவதிகை மனவாசகம் கடந்தாரோ குருதோத்திரமாகத் தனி நூல் செய்யுவில்லை. ஆனால் இருபா இருபஃது என்னும் நூலில் தோத்திரமாகப் பல தொடர்கள் அமைந்துள்ளன. உண்மை விளக்கத்திலும் சில

தொடர்கள் இங்ஙனம் அமைந்தள்ளன. புடை நூலாசிரியராகிய உமாபதி சிவமோ **போற்றிப்பஃறொடை**[2] என்றும், **நெஞ்சு விடு தூது**[3] என்றும் இரு நூல்களைச் செய்து வைத்தார். இவற்றிலும் சித்தாந்த சைவத்தத்துவஞானத்தை விளக்குவதே இவர் நோக்கம்.

போற்றிப் பஃறெடை[4]யும் ஒரு வகையில் சித்தாந்த சைவத்தத்துவ ஞானத்தை முழுமையாக விளக்கும் நூலே. ஓர் ஆன்மா கேவலத்திலிருந்து சகலத்துக்கு வந்து இறந்தும் பிறந்தும் சுவர்க்க நரகங்களில் சென்றும் மீண்டும் உழன்று பக்குவம் அடைந்து குரு உபதேசத்தினால் உண்மை ஞானம் பெற்று ஞானப்பயிற்சியில் உறைத்து நின்று சிவானந்தானுபவம் பெற்று விளங்குவதைத் தொடர்ச்சியாகக் கூறுகிறது. இத் தொடர் நிகழ்வுகளைப் பதினைந்து பகுதியாகப் பகுத்துக் கொண்டு சொல்லி யிருக்கிறார். மனப்பாடம் செய்து கொள்வதற்கு எளிமையானது. **நாள்தோறும் பாராயணம் செய்து வந்தால் சித்தாந்த சைவத் தத்துவஞானம் மனத்தில் நீங்காமல் நிலைபெற்றிருக்கும்.** குருதோத்திரமாகவும் அதனுடன் சைவசித்தாந்தத் தொகுப்பாகவும் இந்நூல் விளங்குகின்றது. **முதல் உற்பவம்** பற்றிக் கூறப்பட்டிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு. மாதவச் சிவஞானமுனிவர் இப்பகுதியைத் தமது மாபாடியத்தில் (சூ 2) எடுத்துக்காட்டியுள்ளார்.

நெஞ்சு விடு தூது[5] நல்ல பிரபந்தமாக (சிற்றிலக்கியமாக) அழகிய வருணனைகள், உருவகங்கள் முதலியன உடையதாக குருதோத்திரமாக விளங்குவது. ஆசாரியர் மறைஞானசம்பந்தர் தமக்கு உபதேசம் செய்தருளிய முறையைத் தெளிவாக இந்நூலில் உமாபதிசிவம் விளக்கியுள்ளார்.

மெய்கண்டார் தமக்கு என்ன உபதேசம் செய்தார்; எவ்வாறு உபதேசம் செய்தார்; அதன் விளைவு எவ்வாறு இருந்தது என்பது பற்றி அருள் நந்திசிவம் தனியே நூல் ஏதும்

செய்யவில்லை. அதனால் அதுபற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. மறை ஞானசம்பந்தரோ நூலே செய்யவில்லை. ஆக, உமாபதிசிவம் ஒருவர்தான் மெய்கண்ட சந்தானத்தில் ஞானஉபதேசம் எவ்வாறு அமையும் என்பதனை இந்நூலில் எடுத்துக் கூறியுள்ளார். இது இந்நூலின் தனிச்சிறப்பு.

கொடிக்கவி[6] தனிப்பாடல்களாக அமைந்தது. அதனால் இது மற்றைய நூல்களினும் வேறானது. மாதவச் சிவஞானமுனிவர் ஆன்மாவுக்கு ஆணவமலம் சகசம் என்பதை உணர்த்துவதற்கு நூல்களெல்லாம் செம்பிற் களிம்பு போல எனக் காரணம் கூறுவது தூலமான விடை என்றும்- **ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்** - என இக் கொடிக்கவி கூறியுள்ளது நுட்பமான விடை என்றும் தமது மாபாடியத்தில் எழுதியிருப்பதனால் இந்நூலின் சிறப்பு விளங்கும்.(மாபாடியம் சிறப்புப்பாயிரம் தூலாருந்ததி நியாம் பற்றிய விளக்கம்)

அவ்வாறே ஐந்தெழுத்தின் விகற்பங்கள் பற்றி இந்நூல் கூறியிருக்கும் செய்தி வேறு எங்கும் காணல் அரிது. இப்படி ஒவ்வொரு செய்தி மட்டும் எடுத்துக் கொண்டு ஒரு தொடர்ச்சியின்றி ஒரே வகையான யாப்புமின்றிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

சிவப்பிரகாசத்தில் மூன்றாகச் சொன்ன தசகாரியத்தைப் பத்தாகவே அமைத்து விளக்குவதற்காக **உண்மை நெறி விளக்கம்**[7] என்னும் நூலினை அருளினார்.(இது பற்றிக் கருத்துவேறுபாடு உண்டு என்பது முன்னரே எழுதப்பட்டது.)

காஞ்சிபுரம் சுவாமிகள் உண்மை நெறி என்பதே நூலின் பெயர். இது உமாபதி சிவத்தினால் செய்யப்பட்டது என்னும் கருத்துடையவர் எனத் தெரிகின்றது.

> உண்மை நெறி என்பது தசகாரியத்தை விளக்கும் ஆறு திருவிருத்தம் உள்ள உண்மை ஞான சாத்திரம். அதன் முடிவில் –**பெருகுசிவபோகம் எனப் பேசும் நெறி** –

இதுவே என்றுள்ளது. அதனை - **உண்மை நெறி சங்கற்பம் உற்று** - என்று நூற்பெயர் உணர்த்தும் வெண்பா அறிவிக்கின்றது. துகளறு போதப் பொருளை உண்மை நெறிப் பொருளோடு இயைத்து அடக்கிக் காட்டும் உரையே உண்மை நெறி விளக்கம் என்று உணர்வதே தகும் -

என்று சுவாமிகள் எழுதியுள்ளார்கள் .(பார்க்க - சித்தாந்தக் கட்டுரைகள் தசகாரியம் - சிவயநம)

சங்கற்ப நிராகரணம் பற்றி முன்னமே கூறப்பட்டது. இந்நூலில் உமாபதிசிவம் தம்மைப் பிறர் போல் வைத்து **-மெய்கண்டவன் அருள் கைக்கண்டவர்களில் ஒருவர்** - எனவும் தாம் அருளிய சிவப்பிரகாசத்தை -

மெய் கண்டவன் அருளுல் நிலையுடையோன் ஒருவன்
உரைத்த தவப்பிரகாசத் தன்மையில் விரித்த
சிவப்பிரகாசச் செழுந்தமிழ்-

எனவும் கூறியுள்ளார்.

இது நூல் செய்வார் மேற்கொள்ளும் உத்தி.

இவ்வகையில் உமாபதிசிவம். அருளிய எட்டு நூல்களுமே சார்பு நூல்கள் - புடைநூல்கள் என்பதற்கு உரியன. சிவப்பிரகாசம் முழுநூலாய் அதிகாரப் பகுப்பும், பொருட்பாகுபாடும் உடையதாய் இருப்பதனாலும் பொது - உண்மை; பெத்தம் - முத்தி என இரண்டினையும் முதல் நூல் வழிநூல்கள் போல் கூறுவதனாலும் **சிவப்பிரகாசம் மட்டுமே சார்பு நூல்** என எடுத்துக் கூறப்படுவதாயிற்று.

இப்பகுதியை இந்த அளவில் நிறுத்தி மேல் சிவப்பிரகாசம் முதல் நூல் வழி நூல்கள் போல் பன்னிரு சூத்திரப் பாகுபாடு உடையதா ? என்பதச் சிறிது சிந்திப்போம்.

உ

சிவமயம்

6. புடை நூலில் பன்னிரு சூத்திரப்பகுப்பு

தமிழ்ச்சித்தாந்த சைவத்துக்கு முதல்நூலாகிய சிவஞானபோதம் இரண்டு அதிகாரம், நான்கு இயல், பன்னிரு சூத்திரம் என்னும் பகுப்பு உடையதாய் இருக்கிறது.

வழி நூலாகிய சிவஞான சித்தியாரும் அவ்வாறே பகுப்பு உடையதாக இருக்கின்றது.

எனவே புடைநூலாகிய சிவப்பிரகாசமும் அவ்வாறே பகுப்பு உடையதாக இருத்தல் வேண்டும் என்றொரு கருத்து உரையாசிரியர்களுள்ளத்தில் இடம் பிடித்துவிட்டது எனத் தெரிகிறது.

சிவஞானபோதம் மூலத்தில் இந்தப்பகுப்பு பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. சிவஞானசித்தியாரில் **சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றாம்** (சுபக்கம் - பாயிரம் 3) எனப் பொதுவாகச் சொல்லியிருந்தாலும் - **பெத்த மொடு முத்தியெல்லாம் .. ..துகள் தீர இந்நூலில் சொல்கிற்பாம்** -(பரபக்கம் பாயிரம் 11) என இரண்டு பகுப்புகள் கூறப்பட்டன.

சிவப்பிரகாசத்திலும் -**சைவசித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கலுற்றாம்** (பாயிரம் 7) எனப் பொதுவாகவும் -

... பொது உண்மை எனக் கருதியானும்
அருத்தி மிக உரைப்பன் வளர் விருத்தம் நூறும்
ஆசில் சிவப்பிரகாசம் ஆகும் அன்றே-

என இருபகுப்பு உடையதாகவும் கூறப்பட்டது (பாயிரம் 11) நூல் முடிவிலும் - **பெத்தம் முத்திகள் மதித்தாமன்றே** - என்று கூறப்பட்டது.

ஆக நூலாசிரியர்களால் நாம் அறிவது சைவசித்தாந்தம் பெத்தம் முத்தி அல்லது பொது உண்மை என இருபகுதியாகப் பிரித்துச் சொல்லப்படும் என்பதே.

மாதவச் சிவஞானமுனிவர் சிவஞான போதச் சிறப்புப் பாயிர உரையில்

பெரும் பெயர்க் கடவுளின் கண்டு

எனவும்

அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி எனவும் வரும் தொடர்களுக்கு உரை எழுதும் போது

> நாடுதலாவது .... ஆகம அளவை சார்பாகத் தலை நின்று வழியளவையான் ஆராய்ந்து பொது வியல்பு துணிதல்

எனவும்

> காண்டலாவது திருவருள் கண்ணாக அனுபூதியில் கண்டு சிறப்பிலக்கணம் உணர்தல்

எனவும் பொது, உண்மை என்பவற்றுக்கு விளக்கம் எழுதினார்.

இவ்விளக்கம் பொது என்பது நூல் வாயிலாக அளவைகளான் அறியப்படுவது; உண்மை என்பது உபதேச வாயிலாக அநுபவத்தால் அறியப்படுவது என்னும் கருத்தை நமக்குத் தெரிவிக்கின்றது. பொது என்பது தடத்தலக்கணம்; சிறப்பு என்பது சொரூபலக்கணம் என்பதும் உரைகளால் அறியப்படுகின்றது.

கல்லால் நிழல் - என்னும் மங்கல வாழ்த்துக்கு எழுதிய பாடியத்திலும் மாதவச் சிவஞான முனிவர் நூலின் அதிகாரம், இயல், சூத்திரம் ஆகிய பகுப்புக்களைப் புலப்படுத்தி எழுதினார்.

புடை நூலில் கூறப்பட்ட பொது உண்மை, பெத்தம் முத்தி என்பவற்றின் கருத்து இதுவே என்பதனையும் மாதவச்சிவ ஞானமுனிவர் தமது மாபாடியத்தில் உணர்த்தினார் அது

> பெத்தத்தின் நின்ற நிலை பற்றிக் கூறும் இலக்கணம் ஆகந்துகம் ஆகலின் பொதுவியல் பென்றும் முத்தியின் நின்ற நிலை பற்றிக் கூறும் இலக்கணம் சகசம் ஆகலின் சிறப்பியல் பென்றும் ஆயின. புடை நூலிசிரியர் - **பொது உண்மை எனக் கருதி** - என்று எடுத்துக் கொண்டு முடிவின் கண் **பெத்தம் முத்திகள் மதித்தாம் அன்றே** என முடித்தமையின் ஈண்டுக் கூறப்படும் பொதுவியல் சிறப்பியல்புகளுக்கு இவையே பொருளாதல் அறிக -

என்பதாம்.

ஆக, பொது - உண்மை, பொதுவியல்பு- சிறப்பியல்பு, பெத்தம் - முத்தி என்பன ஒரேகருத்தை உணர்த்துவன என்பது பெறப்படும்.

1. மதுரைச் சிவப்பிரகாசர் கூறிய சூத்திரப் பாகுபாடு:

இனி, புடைநூலில் வரும் பொது - உண்மை, பெத்தம் - முத்தி என்பவற்றுக்கு மதுரைச்சிவப்பிரகாசர் உரையில் காணப்படும் விளக்கம் வருமாறு:

> பொது என்றது பதி பசு பாசங்களைச் சாமாநியமாக அருளிச் செய்கையினால் எனக் கொள்க; உண்மை என்றது ஆன்ம தரிசனம், சிவதரிசனம் முதலாயுள்ளவற்றை அநுபவமாக அருளிச் செய்கையினால் எனக் கொள்க. (11) பெத்தம் – பாசத்தொடு கட்டுப்பட்டு நிற்கை; முத்தி அந்தக் கட்டு விடுகை என அறிக (௧௧).

எனவே பொது என்பது நூலால் அறிதல்;

உண்மை என்பது உபதேச முகத்தால் அறிதல்

என்பது பெறப்படுகிறது. பொது - சாமானியம் எனவே உண்மை - விசேடம் என்பதும் பெறப்படும்.

இங்ஙனம் முதல் நூல், வழி நூல்களில் பொது , உண்மை என்ற பகுப்பு இருக்கின்றது. அதனுடன் பன்னிரு சூத்திரப் பகுப்பும் இருக்கின்றது. வழி நூலைப் போலவே இப்புடை நூலிலும் பொது உண்மை என்ற பகுப்பு இருக்கின்றது. ஆதலின் முதல் நூல் வழி நூல்களில் உள்ளதைப் போன்று இப் புடைநூலிலும் பன்னிருசூத்திரப் பகுப்பு இருத்தல் வேண்டுமே என்று மதுரைச் சிவப்பிரகாசர் சிந்தித்திருக்கின்றார். சூத்திரப் பகுப்பினைத் தேடிக் கண்டுபிடித்து எழுதத் தொடங்கினார். இது பற்றி அவர் எழுதியிருப்பது வருமாறு:-

> முன்னுள்ள சிவஞான போதத்தின் அத்தமும் சிவஞான சித்தியின் அத்தமும் இந்தச் சிவப்பிரகாச வழி நூலின் அத்தமும் கூடினதேயானால் அந்த நூல்களைப் போலச் சூத்திரம் பன்னிரண்டும் இந்நூலில் நின்ற முறை எங்ஙனே? என்னில், அவை வருமாறு:–

இங்ஙனம் தொடங்கி நூறு திருவிருத்தங்களுக்கும் பொருட் பாகுபாடு காட்டுகிறார்.

1. **ஓங்கு ஒளியாய்** என்பது முதல் **தொன்மையவாம்** என்பது முடியப் பன்னிரு செய்யுள்களும் பாயிரம்.

2. பதியிலக்கணமாகிய **பலகலை** என்பது முதல் **ஏற்ற இவை** என்பது – முடிய ஆறு செய்யுள்களும் முதற் சூத்திரம்.

3. பசு இலக்கணமாகிய **எண்ணரிதாய்** என்பது முதல் **அரிவையர் இன்புறு முத்தி** என்பது முடிய முப்பத்திரண்டு செய்யுள்களும் இரண்டாஞ் சூத்திரம்.

ஆகப் பொது ஐம்பது. மேல் உண்மை ஐம்பதில்,

4. **இங்கிவை** என்ற திருவிருத்தம் ஒன்றும் உண்மைக்கு அதிகார வகுப்பு

5. மேல் ஆன்ம இலக்கணமாகிய **செறிந்திடும்** என்பது முதல் ஓரிடத்திருத்தல் என்பது முடிய செய்யுள் எட்டும் மூன்றாஞ் சூத்திரம்.

6. அவத்தைத் தன்மையாகிய **எண்ண ஒன்றிலாதீதம், இவ்வகை அவத்தை , நீக்கம் இல் அதீதம்** ஆக மூன்று செய்யுளும் நாலாஞ் சூத்திரம்.

7. உணர்த்தும் முறைமையாகிய **மருவிய பொறியில்** என்பது முதல் **அறிந்திடும் மனாதி** என்பது முடிய ஐந்து செய்யுள்களும் ஐந்தாஞ் சூத்திரம்.

8. ஞானவாய்மையாகிய **காட்டிடும் கரணம்** என்ற ஒரு செய்யுள்ஆறாஞ் சூத்திரம்.

9. அதனைத் தொடர்ந்துவரும் **பன்னிறம் கவரும், மாயைமாமாயை** என்னும் இரண்டு செய்யுளும் ஆறாஞ் சூத்திரத்துக்குப் புறநடையாகிய ஏழாஞ் சூத்திரம்.

10. **தேசுறமருவும்** என்ற விருத்தம் ஒன்றும் ஞானவாய்மையின் பயனுக்கு அதிகார வகுப்பு.

11. **தன்னறிவதனால்** என்பது முதல் **சுத்தமாம் சத்தி** என்பது முடிய உள்ள நான்கு செய்யுளும் எட்டாஞ் சூத்திரம்.

12. **புகலரும் அசத்தர் தம்பால்** என்பது முதல் **அடைபவர் சிவமேயாகும்** என்பது முடிய நான்கு செய்யுளும், புனிதன் நாமம் என்னும் அதிகாரத்தில் வரும் பஞ்சாக்கர

தரிசனத்தில் **பந்தமானவை, திருவெழுத்து, ஆசுறு** என்னும் மூன்று செய்யுளும் ஆக ஏழு செய்யுள்கள் ஒன்பதாஞ் சூத்திரம்.

13. ஆன்ம லாபமாகிய **பொற்புறுகருவி** என்பது முதல் **எல்லையில் பிறவி** என்பது முடிய செய்யுள் பத்தும் பத்தாஞ் சூத்திரம்.

14. அணைந்தோர் தன்மையில் **தீங்குறு, குறிப்பிடம், அகம்புறம் , அண்டம் , மண்முதல்** என்னும் விருத்தம் ஐந்தும் பதினோராஞ் சூத்திரம்.

15. **தொண்டர்களிடம்** என்ற விருத்தம் ஒன்றும் பன்னிரண்டாஞ் சூத்திரம்.

16. **நிலவுலகாயதாதி** என்னும் விருத்தம் ஒன்றும் சீடனுக்கு நூலும் அத்தமும் கொடுக்கும் முறை

ஆக இங்ஙனம் சூத்திரங்கள் வகுத்து அதற்கு மேல் எழுதுகின்ற வியாக்கியையிலே அந்தந்த அதிகாரங்கள் தோறும் (இங்கு அதிகாரங்கள் என இவர் குறிப்பிடுவது ஐம்பத்தொன்றாம் திருவிருத்தத்தில் உமாபதிசிவம் கூறிய தலைப்புக்களை) சிவஞான போதத்திலும் சிவஞானசித்தியிலும் வரும் சூத்திரத்தின் ஏதுக்களும் காட்டி எழுதுகின்ற முறைமையாலே சூத்திரம் பன்னிரண்டும் கண்டு கொள்க–

எனவும்

வழிநூல்களில் உண்டான சூத்திரம் பன்னிரண்டும் இந்நூலிலே வகுத்து வியாக்கியானம் செய்தது என அறிக (இவர் வழிநூல்கள் என்றது சிவஞான போதம், சிவஞான சித்தி என்ற இரண்டையும். சிவஞான போதம் மொழிபெயர்ப்பாகிய வழி நூல், சிவஞானசித்தி மொழிபெயர்ப்பின் வழியாகிய வழிநூல் என்பது இவர் கொள்கை)

இங்ஙனம் **மதுரைச் சிவப்பிரகாசர்** விரிவாகச் சூத்திரப் பகுப்புக் காட்டியதனால் **சூத்திரப் பகுப்புக் கொள்கையைத் தோற்றுவித்தவரும்** இவரே எனத் தெரிகிறது. இவருரைக்கு முன்னமே வேறு உரைகள் இருந்தன என்பது இந்தச்சிவப்பிரகாசமாகிய நூலுக்கு முன்னோர்களும் வியாக்கியானம் செய்திருக்க .....என இவர் எழுதியிருப்பதனால் புலனாகின்றன. அவ்வுரைகளெல்லாம் சூத்திரப் பகுப்புக் காட்டினவா? என்பது தெரியவில்லை. (அவ்வுரைகளை நான் பார்க்கவில்லை; கிடைக்கவில்லை.)

2. இலக்கணம் ஸ்ரீ சிதம்பரநாத முனிவர் கூறிய சூத்திரப் பாகுபாடு:

இச்சிவப்பிரகாசத்துக்கு இலக்கணம் ஸ்ரீ சிதம்பரநாத முனிவர் என்பவர் எழுதிய உரை ஒன்று உண்டு. இம்முனிவர் மாதவச்சிவஞானமுனிவரின் மாணாக்கர் எனப்படுகின்றார். இவரும் மதுரைச் சிவப்பிரகாசரைப் பின்பற்றியே சூத்திரப் பகுப்புக் காட்டி உரை எழுதியுள்ளார்

> இது முதல்(பலகலை என்னும் திருவிருத்தம் முதல்) ஏற்ற இவை என்னும் செய்யுள் ஈறாக ஆறு திருவிருத்தங்களாலும் முதல் நூலாகிய சிவ ஞான போதத்தின் முதல் சூத்திரம் உணர்த்துவான் எடுத்துக் கொண்டார்

எனப் பொதுவதிகாரத்தின் முதற் செய்யுளுக்கு அவதாரிகை எழுதியுள்ளார்.

இவ்வாறே

> இதுமுதல் அரிவையர் என்னும் செய்யுள் ஈறாக முப்பத்திரண்டு திருவிருத்தங்களாலும் இரண்டாம் சூத்திரம் உணர்த்துவான் எடுத்துக் கொண்டார் என

எண்ணரிதாய் என்னும் திருவிருத்தத்தின் உரையில் அவதாரிகை

எழுதியுள்ளார். இவ்வாறே நூல் முழுமைக்கும் எழுதியுள்ளார். உரையில் கண்டு கொள்க.

இங்ஙனம் சூத்திரப் பகுப்புக்காட்டியவர்கள் இயல்பகுப்புக் காட்டாது போனது ஏனோ ? **இயல் பகுப்புக் காட்டப் புகுந்தால் சூத்திரப் பகுப்புக் கோட்பாடு அடிபட்டுப்போகும்.**

இவர்கள் காட்டிய சூத்திரப் பாகுபாடு பற்றியும் சிறிது சிந்திக்கலாம்.

1. **பலகலை** என்பது முதல் **ஏற்ற இவை** என்பது முடிய ஆறு செய்யுளும் முதல் நூலாகிய சிவஞான போதத்தின் **முதல் சூத்திரம்** என்று எழுதினார்கள்.

சிவஞானபோதத்தின் முதற் சூத்திரம் பிரமாண இயலில் உள்ளது. அது பதி உண்மைக்குப் பிரமாணம் கூறுகிறதே யன்றிப் பதிக்கு இலக்கணம் கூறவில்லை. பதியின் பொது இலக்கணம் இரண்டாஞ் சூத்திரத்தால் பெற வைத்து ஆறாஞ் சூத்திரத்தால் சிறப்பிலக்கணம் கூறுகிறது. இது முதல் நூலின் நிலை. இவர்கள் முதற் சூத்திரம் எனக்காட்டிய புடை நூல் செய்யுள் பதிக்கு இலக்கணம் கூறுகிறதே. பதி உண்மைக்குப் பிரமாணம் **உலகமெலாம் ஒருவனோடொருத்தி** என்னும் (16) செய்யுளில் கூறுகிறது. இது சிவஞானபோதத்தின் முதற் சூத்திரப் பொருளாதல் எவ்வாறு?

சிவஞான போதத்து ஆறாஞ் சூத்திரப் பொருள் சிவப்பிரகாசத்தில் **அறிவினால் அறிந்தயாவும் அசத்தாதல் அறிதி** என்னும் (55) உண்மையதிகாரத்துச் செய்யுளில் கூறுப்படுகின்றதே.

2. **எண்ணரிதாய்** என்பது முதல் **அரிவையர்** என்பது முடிய உள்ள முப்பத்திரண்டு செய்யுள்களும் **இரண்டாஞ் சூத்திரம்** என்று எழுதினார்கள்.

சிவஞானபோதத்து ஆறாஞ் சூத்திரப் பொருள் சிவப்பிரகாசத்தில் **அறிவினால் அறிந்தயாவும் அசத்தாதல் அறிதி** (55) என்னும் உண்மை அதிகாரச் செய்யுளில் கூறப்படுகின்றதே.

ஆனால் சிவஞானபோதம் இரண்டாஞ் சூத்திரம் பாசங்களின் உண்மைக்குப் பிரமாணம் கூறுகிறது. இவர்கள் கூறும் சிவப்பிரகாசச் செய்யுள்களுள் **எண்ணரிதாய்** என்னும் தொடக்கச் செய்யுள் பசு இலக்கணம் கூறுகிறதே. பசு இலக்கணம் என்று ஆதீனப்பதிப்பில் (வெளியீடு எண் 65-1953) தலைப்பும் இட்டிருக்கின்றார்கள். இரண்டாஞ் சூத்திரம் பசு பாச இலக்கணங்கள் என்றும் எழுதியிருக்கின்றார்கள். மதுரைச் சிவப்பிரகாசரோ இரண்டாஞ் சூத்திரமாகிய பசு இலக்கணமும் பாச இலக்கணமும் அருளிச் செய்வான் எடுத்துக் கொண்டார் என அவதாரிகை எழுதினார்.

இரண்டாஞ் சூத்திரத்தில் பசு இலக்கணம் கூறப்பட வில்லையே! பாச உண்மைக்குப் பிரமாணம் மட்டுந்தானே கூறப்பட்டுள்ளது!.

முதல் நூலாகிய சிவஞானபோதத்தில் பசு இலக்கணம் நான்காஞ் சூத்திரத்திலும் (பொது இலக்கணம்) ஏழாஞ் சூத்திரத்திலும் (சிறப்பிலக்கணம்) கூறப்படுகின்றதே. பாச இலக்கணம் ஐந்தாஞ் சூத்திரத்திலன்றோ கூறப்படுகின்றது.

இங்ஙனம் வரிசையாக எழுதிக் கொண்டே போனால் மிகவிரியும்.

3. சிவப்பிரகாச உரையாசிரியர்கள் ஆறாஞ்சூத்திரம் உணர்த்துவதாகக் குறிப்பிடும் - **காட்டிடும் கரணம் ஒன்றும்** என்னும் திருவிருத்தத்தில்-**முன்னம் ஈட்டிய தவத்தினாலே இறை அருளுருவாய் வந்து கூட்டிடும் இவற்றை நீக்கிக் குரைகழல் குறுகுமாறே** - என்பது கூறப்பட்டுள்ளது.

இது முதல் நூலின் எட்டாஞ் சூத்திரப் (தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு அந்நியம் இன்மையின் அரன் கழல் செலுமே) பொருளன்றோ! இதை எவ்வாறு ஆறாஞ் சூத்திரம் என்பது.?

முதல் நூலின் ஆறாஞ் சூத்திரம் சத்துப் பொருளின் இலக்கணத்தையும் அசத்துப் பொருளின் இலக்கணத்தையும் வரையறை செய்து உணர்த்தும் முகத்தால் முதல்வனுக்குச் சிறப்பிலக்கணம் உணர்த்துவதன்றோ!

4. **பன்னிறம் கவரும், மாயை மாமாயை** என்னும் பாடல்கள் இரண்டும் **ஏழாஞ் சூத்திரம்** என்றும் முற் சூத்திரப் புறனடை என்றும் உரைகாரர்கள் எழுதினார்கள்

முதல்நூலில் ஏழாஞ்சூத்திரம் ஆறாஞ்சூத்திரத்துக்குப் புறனடையாகக் கூறப்பட்டது. அங்கு ஆறாஞ் சூத்திரம் சத்துப் பொருளின் இயல்பும் அசத்துப் பொருளினியல்பும் கூறியது. இவ்விரண்டனுள் அடங்காமல் இரண்டன்பாலும் நிற்றற்குரியதாய், இரண்டனையும் அறிவதாய், சதசத்து என்னும் பெயரால் கூறப்படும் ஆன்மாவின் இலக்கணம் கூறும் ஏழாஞ் சூத்திரம் ஆறாஞ் சூத்திரப் புறனடையாய் அமைந்தது.

இங்கு அப்படியில்லையே, **காட்டிடும் கரணம்** என்னும் செய்யுள் கரணங்கள் இல்லையாயின் ஆன்மாவுக்கக் காட்சி நிகழாது; அக்கரணங்களால் அருளையோ முதல்வனையோ அறிதல் இயலாது என்று கூறுகிற்ன்றது. அதுவும் ஞான வாய்மை என்னும் பகுப்பின் கீழ்க் கூறப்பட்டுள்ளது. ஏழாஞ் சூத்திரம் எனக் கூறப்பட்ட புடைநூல் செய்யுள்களில் உண்மை ஞானத்தின் இயல்பும் அது ஆன்மாவில் நிகழுமாறும் கூறுகின்றது. இது முதல் நூல் போல் ஏழாஞ் சூத்திரமாதலும் ஆறாஞ் சூத்தரப் புறனடையாதலும் எவ்வாறு?

இவ்வாறே வருஞ் செய்யுள்களுக்கு உரையாசிரியர்கள் காட்டிய முதல் நூல் சூத்திரப் பொருள் பொருத்த

மில்லாததாகவே காணப்படுகிறது. அவற்றை அங்கங்கே முதல் நூலையும் சார்பு நூலையும் நோக்கி அறிந்து கொள்ளலாம்.

உமாபதிசிவம் தமது நூலை முதல் நூல்போல் இரண்டு அதிகாரமும் பன்னிரு சூத்திரமும் உடையதாகப் பகுத்துச் செய்யக்கருதியிருந்தால் பொது அதிகாரத்தில் ஆறு சூத்திரம் வைத்திருப்பாரே! இரண்டு சூத்திரம் மட்டும் வைத்திருப்பாரா? உண்மையதிகாரத்தில் பத்துச் சூத்திரம் வைத்திருப்பாரா ? சிவஞானபோதம் போல் சூத்திரப்பாகுபாடு உடையதாக நூல் செய்யக் கருதியிருந்தால் உண்மை அதிகாரத்துக்குப் பொருட்பாகுபாடு செய்திருப்பாரா ? பொது அதிகாரத்துக்குப் பொருட்பாகுபாடு செய்யாமல் விட்டிருக்கின்றாரே.

உமாபதிசிவம் பன்னிரு சூத்திரப் பகுப்பு உடையதாக நூல் செய்திருந்தால் *பன்னிரு சூத்திரம் பகரலுற்றாம், பன்னிரு சூத்திரம் பகர்ந்தா மன்றே* என்று சொல்லியிருப்பாரே. அப்படி எங்கும் சொல்லவில்லையே.

3.கச்சியப்ப முனிவர் கருத்து:

இங்குக் திருவாவடுதுறை ஆதீனத்துக் **கவிராக்ஷஸ கச்சியப்ப முனிவர்** திருத்தணிகை ஆற்றுப்படையில் கூறியுள்ள செய்தி ஒன்று குறிப்பிடத்தக்கது. அது வருமாறு:-

> ஆன்மாவினிடத்து ஊன நாடகம் உஞற்றிய திருவருள் (திரோதானம்) ஞான நாடகம் நவிற்றுவதாக மாறின பொழுது(திருவருள் சத்தி பதிந்த பொழுது) மலப்பகை கழலவும் உயிர் ஆனந்தத்தில் அழுந்தவும் அவ்வருள் கட்காண் குரு முதற் கடவுளாகி உண்மை ஞானத்தை உபதேசிக்கின்றது. அங்஗னம் உபதேசிக்கப்படும் பொருள் 1.உயிர், 2.அவத்தை, 3.உணர்த்துந் தன்மை 4. அருளியல் 5.அதன் பயன் 6. பெரும் பெயர்த்திறம் 7. பெற்றவர் முறை என எழுவகைப்படும் .(110 - 118)

இங்ஙனம் கச்சியப்ப முனிவர் கூறியது உமாபதிசிவம் சிவப்பிரகாசம் உண்மையதிகாரத்தின் தொடக்கத்தில் கூறிய இங்கிவை பொது; என்று இயம்புவர் இதன் மேல், ஆன்மாத் தங்கிய அஞ்சவத்தை தன் உண்மை உணர்த்துந் தன்மை பொங்கொளி ஞானவாய்மை அதன் பயன் புனிதன் நாமம் அங்கதில் அணைந்தோர் தன்மை அறைகுவன் அருளினாலே (51) என்னும் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தின் பொருளாகவே அமைந்துள்ளது காணலாம்.

கச்சியப்பமுனிவர் சித்தாந்த சைவத்தத்துவ ஞானத்தைப் பெரும்பாலும் உமாபதிசிவத்தைப் பின்பற்றியே கூறும் இயல்புடையவர் என்பதனை இங்கு நினைத்தல் தக்கது.

கச்சியப்ப முனிவர் கருத்துப்படி சிவப்பிரகாசத்தின்

1. *முற்பகுதி ஊனநாடகம்; பெத்தம்.*
2. *பிற்பகுதி ஞான நாடகம்; உபதேசப்பகுதி*
   என்பது புலனாகும்.
3. *பொதுப் பகுதியில் கூறப்படுவது நூல்களால் அறியப்படும் அறிவு.*
4. *உண்மை ப் பகுதியில் கூறப்படுவது குரு உபதேசத்தால் அறியப்படும் ஞானம்.*
5. *பொதுப்பகுதியில் கூறப்படுவது கேவலம், சகலம்.*
6. *உண்மைப் பகுதியில் கூறப்படுவது சுத்தம் முத்தி*

என அறிதல் வேண்டும்.

4.காவை அம்பலவாண தேசிகர் கூறிய பொருட் பாகுபாடு:

காவை அம்பலவாணத் தம்பிரான் என்பவர் சிவப்பிரகாசம் நூறு செய்யுளுக்கும் கருத்துக் கூறினார். அவரும் சிவப்பிரகாசம் பொதுப்பகுதியைப் பாயிரம் 12, பதி 6, உயிர் 1, திரோதம், மலம் 1, மாயை 1, மாயைப் புணர்ப்பு 6, வினை 4, மலத்தின் தொகை 1, கேவலம் 5, வைகரியின் பகுதி 2, சகலம் 9, சுத்தம் 1 , முத்தி 1 ஆக 50.

உண்மைப் பகுதியை உயிருண்மை 9, அவத்தை 3, உணர்த்துந் தன்மை 5, ஞானவகை 3, ஆன்ம தரிசனம் 5, ஆசு ஒழிக்குந் தன்மை 4, தேசன் உரு 10, பஞ்சாக்கரம் 3, சிவனை அனுபவித்தல் 6, நூற்கருத்து 1, நூலீயும் நலம் 1 - ஆக 50. என்றே பாகுபாடு செய்தார்.

(எண்கள் செய்யுளின் தொகையைக் குறிக்கும்.)

முதல் நூலை நோக்கிச் சூத்திரப்பாகுபாடு செய்யவில்லை. இவர் கூறியுள்ள தலைப்புக்களின் கீழேயே செய்யுள்களுக்கு உரை விளக்கம் எழுதுதல் பொருத்தமாக இருக்கும்.

5.காழிச் சிற்றம்பலவர் கூறிய பொருட்பாகுபாடு:

காழிச்சிற்றம்பலவர் என்பவர் சிவப்பிரகாசத்துக்கு அடிவரவும் அதிகாரமும் கூறியவர். அடிவரவு என்பது செய்யுள் முதல் நினைப்பு. அதனை இங்கு எடுத்து எழுதுதல் தேவையற்றது. அதிகார வரவு அறிதற்குறியது. அது வருமாறு:

இறைவணக்கம் 6. புறச்சமயத்தவர் நூற்கருத்து 1 தீக்கை முறைமை 3, நூல் மரபு 1, அவையடக்கம் 1 , இறைவனிலக்கணம் 6, பசுவிலக்கணம் 1, மலம், திரோதம் 1, குடிலையின் இயல்1,

அசுத்தமாயையின் செய்தி 6, கன்மத்தியல்பு 4, ஐந்து மலம் 1, கேவலத்தியல்பு 5, சகல அவத்தை 10, சுத்த முறைமை 2, பரசமயத்தவர் முத்தி 1 ஆக 50 பொதுவதிகாரம்.

உண்மையியல் - பாயிரம் 1, ஆன்ம இலக்கணம் 8, அவத்தை 3, ஆன்மாவை உணர்தல் 5, ஞானவாய்மை 3, மும்மையின் பாரிப்பு 1, ஆன்ம தரிசனம் 4, ஆன்ம லாபம் 10, ஐந்தெழுத்தருள்நிலை 3, அணைந்தோர் தன்மை 1, நூற் கருத்து1, நூலைக் கொடுக்கும் முறை 1 ஆக உண்மைப்பகுதி - 50.

இவர் உமாபதிசிவம் உண்மைப்பகுதியில் காட்டிய பொருட் பாகுபாட்டினையே பின்பற்றினார். உமாபதி சிவம் பொருட்பாகுபாடு கூறாது விட்ட முன்னைம்பது செய்யுட்களுக்கும் பொருட் பாகுபாடு காட்டினார்.

இவ்விருவரும் சிவப்பிரகாசத் திருவிருத்தங்களுள் இன்னின்ன திருவிருத்தங்கள் இன்னின்ன சூத்திரப் பொருள் என முதல் நூலோடு பொருத்திப் பொருட் பாகுபாடு செய்யவில்லை என்பது கருதத்தக்கது.

6.சுவாமிநாத தேசிகர் கூறிய பொருட்பாகுபாடு:

திருவாவடுதுறை ஆதீனத்துப் பண்டார சாத்திரங்கள் பதினான்கனுள் சுவாமிநாத தேசிகர் தசகாரியம் என்றொரு சாத்திர நூல் உள்ளது. அதில் 24 செய்யுள்கள் உள்ளன. தசகாரியம் பற்றிய செய்தி 17 பாடல்களில் இடம் பெற்றுள்ளது. பழைய உரையும் 17 பாடல்களுக்குத்தான் உள்ளது. ஆதலின் இந்நூல் 17 பாடல்களால் ஆனது என்று கருதலாம்.

18 முதல் 24 வரை உள்ள 7 பாடல்களுள்:

18, 19 என்னும் எண்களைக் கொண்ட இரண்டு பாடல்களும் சிவஞான போதத்திலும் சிவஞான சித்தியாரிலும் சூத்திர வரிசையாக உணர்த்தப்படும் பொருள் இன்னின்னது எனக் கூறுகின்றன.

21 என்னும் எண்ணுள்ள பாடல் இவ்விரு நூல்களிலும் நின்மல ஐந்தவத்தைகளில் வைத்துத் தசகாரியம் எந்தெந்த சூத்திரத்தில் உணர்த்தப்படுகிறது என்பதைக் கூறுகிறது.

ஆக இம் மூன்று பாடல்களும் சிவஞானபோதத்தையும் சிவஞான சித்தியையும் பொருள் வகையிலும் உபதேச வகையிலும் ஒப்பிட்டுக் கூறுகின்றன.

இம் மூன்று பாடல்களும் 18, 19,20 என்னும் எண் உள்ளனவாக ஒரு தொடர்ச்சியாக இடம் பெறுதற்கு உரியன எனத்தெரிகிறது. எப்படியோ ஒருபாடல் இடம்மாறி அமைந்துள்ளது.

22 ஆம் எண்ணுள்ள பாடல் சிவஞானபோதத்தில் உள்ள அதிகரணத்தொகைஎவ்வளவு? எந்தெந்தச் சூத்திரத்தில் எத்துணை எத்துணை அதிகரணங்கள் உள்ளன என்பதனைக் கணக்கிட்டுக் கூறுகின்றது.

சிவஞானசித்திக்கு அதிகரணத் தொகை கூறும் பாடல் இல்லை. சிவஞானசித்தி வழி நூலாயினும் அதிகரணப் பகுப்பில் சிறிது மாறுபடும். சிவஞானபோதத்தில் ஆறாஞ்சூத்திரத்தில் இரண்டு அதிகரணங்களே உள்ளன, சித்தியாரில் ஆறாஞ் சூத்திரத்தில் மூன்று அதிகரணங்கள் உள்ளன.

உணராது இன்மையின் - என்பதைச் சிவஞானபோதம் தனி அதிகரணமாக வகுத்துக் கூறவில்லை. சிவஞானசித்தியில் அது தனி அதிகரணமாக வகுத்துக் கூறுப்பட்டுள்ளது.

இது பற்றி மாதவச்சிவஞானமுனிவர் தமது மாபாடியத்தில் :

> ஒருவாற்றானும் உணரப்படாத பொருள் சூனியம் என்பது எல்லாச் சமயத்தாருக்கும் ஒப்ப முடிந்தமையின் ஆண்டு அதிகரணத்துக் குரிய ஐயப்பாடு முதலியன நிகழாமையான் அதனை வேறோர் அ்திகரணமாக வைத்து உரைத்திலர். அங்ஙனமாயினும் உணராத பொருளைச் சத்து என்றால் படும் இழுக்கு என்னையோ என மாணாக்கர்க்கு ஆசங்கை நிகழாமைப் பொருட்டு வழி நூலாசிரியர் - உணராத பொருள் சத்து என்னில் ஒரு பயன் இல்லை; தானும் புணராது; நாமும் சென்று பொருந்துவதின்றாம்; என்றும் தணவாத கருமம் ஒன்றும் தருவதும் இல்லை; வானத்து இணர்ஆர் பூந்தொடையும் ஆமைக்கு எழும் மயிர்க்கயிறும் போலும் – என விடுத்தார் என்க

என எழுதியிருப்பதனால் சிவஞானசித்தியாரில் ஆறாஞ் சூத்திரத்தில் ஓர் அதிகரணம் அதிகமாக இருக்கும் என அறியலாம்.

எனினும், பன்னிரண்டாஞ் சூத்திரம் மூன்று அதிகரணம் உடையது. சூத்திர உரையில் அதிகரணப்பகுப்புச் செய்யும் போது முனிவர் அவ்வாறே செய்தார்.

ஆனால் இம்மூன்று அதிகரணங்களின் ஒழிபாக நான்காவதாக ஓர் அதிகரணம் அமைத்தார்.

இவ்வகையில் பார்க்கும் போது சிவஞான சித்தியில் அதிகரணத் தொகை வேறுபடும் எனத்தெரிகிறன்றது.

பாண்டிப் பெருமாள் சிவஞானபோதத்தில் சூத்திரமும் வெண்பாவும் மட்டுமே இருந்தன எனக் கருதியே உரை

எழுதினார்; நுதலிய பொருள், அதிகரணப் பகுப்பு, மேற்கோள், ஏது முதலியன இருந்தன எனக் கருதவில்லை என்றே தெரிகின்றது.

பாண்டிப் பெருமாள் விருத்தியைச் திருவாவடுதுறை ஆதீனத்தவர் பதிப்பித்த பொழுது அவர்கள் மரபுப்படி அதிகரண எண் கொடுத்துப் பதிப்பித்துள்ளனர். அவர்களும் அதில் நுதலிய பொருள், மேற்கோள், ஏது முதலியவற்றைச் சேர்க்கவில்லை. (பார்க்க - சிவஞானபோதம் பாண்டிப் பெருமாள் விருத்தி - பதிப்பு எண் 94-1955)

சிவஞானபோதம் பழைய உரையில் சூர்ணி என்னும் பிரிப்பு அமைந்துள்ளது. சூர்ணிப் பகுப்பும் அதிகரணப்பகுப்பும் ஒன்றே.

சூர்ணி என்பது கண்ணழித்து எடுத்துக் கொள்ளப்பட்ட மூலத்தின் பொருளை மட்டும் கூறுகிறது.

அதிகரணம் என்பது அங்ஙனம் கண்ணழித்து எடுத்துக் கொள்ளப்பட்ட மூலத்தின் பொருளை மேற்கோளாக நிறுத்தி அதனை ஏது, எடுத்துக் காட்டுக்களால் வற்புறுத்திக் கூறுகிறது.

சூர்ணி - பொருள் மட்டும்.

அதிகரணம் -மேற்கோள், ஏது, உதாரணம் என்பவற்றை அடக்கி நிற்பது.

சிவஞானசித்தியாருக்கு அதிகரணப்பகுப்பு இல்லாமலே பதிப்பித்தலும் உண்டு எனத் தெரிகிறது.(பார்க்க மெய்கண்ட சாத்திரம் - தருமையாதீன வெளியீடு 1942)

இந்தச் சிந்தனை இந்த அளவில் நிற்பதாக.

சுவாமிநாத தேசிகர் தசகாரியத்தில் 22 எண்ணுள்ள பாடல் 21 என்னும் எண் உள்ளதாக அமைந்திருந்தால் பொருத்தமாக இருக்கும். இப்பாடல் சிவஞான போதத்தின் அதிகரணத் தொகையினைக் கூறுகின்றது. மேலே கூறப்பட்ட தருமை ஆதீனப்பதிப்பில் - சிவஞானபோதம் என்னும் சாத்திரத்தைப்பற்றிய சிறப்புச் செய்திகளாகக் குறிப்பிடப் பட்டவற்றுள் இப்பாடல் சூர்ணித் தொகை என்னும் தலைப்பின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் இன்னார் எனக் குறிப்பிடப்படவில்லை. **முதற் பதி அரனே, மறைப்பினை நீக்கி** என்ற இரண்டு பாடல்களுக்குமட்டும் ஈசான தேசிகர் தசகாரியம் எனப் பெயர் குறித்துள்ளனர். ஈசான தேசிகர் என்பது சுவாமிநாத தேசிகரின் தீட்சா நாமம்.

மற்றைய இரண்டு பாடல்களும் தத்துவங்களின் தொகையும் தாத்துவிகங்களின் தொகையும் கூறுகின்றன. ஆதலின் அவை 23, 24 எண்ணுள்ள பாடல்களாக இருத்தல் பொருந்தும்.

18,19,21 எண்களைக் கொண்ட மூன்று பாடல்களும் சிவஞானபோதம், சித்தி என்பவற்றின் சூத்திரக் கருத்தும், அச்சூத்திரங்கள் எவ்வெச் சூத்திரத்தின் எவ்வெக் காரியங் கூறப்படுகின்றன என்பதும் உணர்த்துதலின் இவை ஒரு தசகாரியம் கூறும் நூலில் இருப்பது பொருந்தும் எனலாம்.

20 என்னும் எண்ணுள்ள பாடல் சிவஞானபோதத்தில் உள்ள பன்னிரண்டு சூத்திரப் பொருள்களுள் எவ்வெச் சூத்திரப் பொருள் எவ்வெப் பாடலில் தொடங்குகின்றன என அவ்வப்பாடல்களின் முதல் நினைப்புக் கூறுகின்றது. ஆனால் அந்தப்பாடல்களில் அந்தந்தச் சூத்திரப் பொருள் இல்லை என்பதும்; போதம் சித்தி என்பவற்றின் சூத்திர அமைப்பு வேறு, சிவப்பிரகாசத்தில் பதி முதலிய பொருள்களைப்பற்றிக் கூறும் பாடல்களின் அமைப்பு வேறு என்பதும் முன்னமே விளக்கப்பட்டது.

எனவே இப்பாடல் சிவப்பிரகாசமும் முதல்நூல் வழி நூல்களைப் போல் பன்னிரு சூத்திரப்பகுப்பு உடையது என்று கருதியவர்களால் எழுதப்பட்டது எனத் தெரிகிறது. இப்பாடல் சுவாமிநாத தேசிகர் அருளிய தசகாரியம் எழுதப்பட்ட ஏட்டில் இறுதியில் இடம் பெற்றிருந்ததனால் இதுவும் சுவாமிநாததேசிகர் அருளியபாடல் என்றே கொள்வது மரபாக உள்ளது.

சுவாமிநாத தேசிகர் சிவப்பிரகாசம் பன்னிரு சூத்திரப்பகுப்பு உடையதாயிருக்கிறது என்ற கருத்து உடையவரா என்பதைத் தெளிவாக அறிவதற்குரிய சான்று எதுவும் எனக்குத் தெரியவில்லை.

இனிப் பாடலின் பொருளைப் பார்ப்போம்.

பலகலையும் எண்ணரிதும் பார்க்கிலரும் செறிந்திடுமே
மலநிலையால் வரும் எண்ணே மருவியவும் காட்டிடுமே
சொல அரிதாம் பன்னிறமும் தன்அறிவும் சொல்புகலும்
பிலம்உள போற் றீங்கண்டம் பேர் முதலாப் பன்னிரண்டே

இப்பாடல் சிவப்பிரகாசத்தில் சிவஞானபோதச் சூத்திரப் பொருள் எந்தெந்தப் பாடலில் தொடங்குகிறது எனக் கூறுகின்றது.

இப்பாடலின் நான்காம் அடி பாடம் பிழைபட்டுள்ளது. அவ்வடி

பலம்உள பொற்றீங் கண்டம் பார் முதல்ாப் பன்னிரண்டே
என்றோ

பிலம் உள போற் றீங்கண்டம் பேர் முதலாப்பன்னிரண்டே.
என்றோ

பலம்உள பொற் றிங்கு அண்டம் பார் தொண்டர் பன்னிரண்டே

என்றோ இருத்தல் வேண்டும்

மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்ட பாடமே சரியானது என்பது என்கருத்து. விவரம் பின்னர் எழுதப்படும்.

இப்பாடலில் :

பார்க்கில் அரும், மலநிலையால், சொல அரிதாம், பலம் உள என்பன அடைமொழிகள்.

பன்னிரண்டே என்பது சிவஞானபோதச் சூத்திரத் தொகையினைக் குறிப்பிடுகிறது.

இனி முறையான உரை வருமாறு:

பலகலையும் - **பலகலை** என்னும் தொடக்கத்தையுடைய பாடலும் (13. இது சிவஞானபோத முதற்சூத்திரம் என்று நூல்களில் குறிப்பிடப்படுகிறது)

எண்ணரிதும் - **எண்ணரிதாய்** என்னும் தொடக்கத்தையுடைய பாடலும் (19 - இரண்டாம் சூத்திரம்.)

பார்க்கில் - ஆராய்ந்து பார்த்தால், அரும் - அரிய.
இவ்வடை மொழி எண்ணரிதும் என்பதன் முன் இடம்பெற்றிருந்தாலும் சிவப்பிரகாசம் முழுவதும் செல்லத்தக்கது.

செறிந்திடுமே - **செறிந்திடும்** என்னும் தொடக்கத்தை உடைய பாடலும் (52- மூன்றாம் சூத்திரம்)
ஏ-காரம் எண்ணுப் பொருளில் வந்தது.

***எண்ணே*- எண்ண ஒன்றிலாத** என்னும் தொடக்கத்தை உடைய பாடலும் (60- நான்காஞ் சூத்திரம்)

மலநிலையால் வரும் என்பது அடைமொழி.

எண்ண ஒன்றிலாத எனத் தொடங்கும் பாடல் அவத்தை பற்றிக் கூறத் தொடங்குகின்றது. இவ்வவத்தை ஆன்மாவுக்கு ஆணவமலம் காரணமாக நிகழ்கின்றது. எனவே மலநிலையால்வரும் என அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது.

***மருவியவும்* - மருவிய** என்னும் தொடக்கத்தை உடைய பாடலும் (63-ஐந்தாஞ் சூத்திரும்)

***காட்டிடுமே* - காட்டிடும் கரணம்** என்னும் தொடக்கத்தை உடைய பாடலும் (68-ஆறாஞ் சூத்திரம்.)

***பன்னிறமும்* - பன்னிறம் கவரும்** - என்னும் தொடக்கத்தை உடைய பாடலும் (69- ஏழாஞ் சத்திரம்)

சொல அரிதாம் என்பது பன்னிறம் கவரும் என்னும் பாடலுக்கு அடை மொழி. சொல்லுதற்கு அரிய சிறப்புடையது என்பது கருத்து.

இவ்வடை மொழி இப்பாடலுக்கே யன்றி நூல் முழுவதற்கும் பொருந்துவது.

***தன்னறிவும்* - தன்னறிவதனால்** என்னும் தொடக்கத்தை உடைய பாடலும் (72- எட்டாஞ் சூத்திரம்)

பதிப்புகளில் தேசுறமருவும் என்னும் 71 -வது பாடலிலேயே எட்டாஞ் சத்திரம் என்னும் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

மதுரைச் சிவப்பிரகாசர் தேசுற மருவும் என்ற விருத்தம் ஒன்றும் இவையிற்றுக்கு அதிகார வகுப்பு எனவும், தன்னறிவதனால் – என்ற விருத்தம் தொடங்கி (72) சுத்தமாஞ் சத்தி – என்ற விருத்தம் முடிவாகச் (75) செய்யுள் நாலும் எட்டாஞ் சூத்தரம் – என்றும் பகுத்துள்ளார். (பார்க்க உரை காப்புச் செய்யுளுக்கு எழுதிய விளக்கம்) இவையிற்றுக்கு என்பது ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என்பவற்றைக் கூறும் செய்யுள்களுக்கு என்றவாறு.

புகலும் - **புகலரும்** என்னும் தொடக்கத்தை உடைய பாடலும் (76-ஒன்பதாஞ் சூத்திரம்)

சொல் - என்பது அடைமொழி. சொல்லப்படுகின்ற என்பது பொருள். புகழ்ந்து (அ) உயர்த்து (அ) சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற் என்பது கருத்து.

பொற் - **பொற்புறு கருவியாவும்** என்னும் தொடக்கத்தை உடையபாடலும் (80-பத்தாஞ் சூத்திரம்)

பலம் உள என்பது இப்பாடலுக்கு அடை மொழி. பயன் உள்ளனவாகிய என்பது பொருள். பலம் - பயன். சித்தாந்த சைவத் தத்துவ ஞானத்தின் முடிந்தபயன் நின்மல சாக்கிராதீதமாகிய ஆன்மலாபம். அதனை இப்பாடல் கூறுகின்றது. ஆதலின் பலம் உள பொல் என்ற அடை மொழி கொடுக்கப்பட்டுள்ளது.

உள்ளன எனப் பன்மையில் கூறப்பட்டிருக்கின்றதே என ஐயம் எழலாம். பொற் என்ற தொடக்கம் அத்தொடக்கத்தையுடைய பாடலும் அதனைத் தொடர்ந்து வரும் ஆன்மலாபம் பற்றிய பாடல்களும் என்னும் பொருளை உடையது ஆதலின் உள எனப் பன்மையாக கூறப்பட்டது என்க.

தீங்கு - **தீங்கு** என்னும் தொடக்கத்தை உடைய பாடலும் (93-பதினோராஞ் சூத்திரம்)

இங்கு பொற் + தீங்கு = பொற்றீங்கு எனவருமா என்று ஐயம் தோன்றலாம்.

1. பொற் + தீங்கு என்பன பொருட்புணர்ச்சியன்று. முதல்நினைப்புச் சொற்களே. ஆதலின் வரையறையில்லை.

2. பொற்புறு என்னும் பாடலில் பொற்பு என்பது முதற் சொல். பொல் என்னும் பகுதியை உடையது. பொல் - பொன் - என்பன பொலிவு என்னும் பொருளில் வரும்.

பொன் என்பது பொலம் எனவரும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. (எழுத்ததிகாரம் -புள்ளிமயங்கியல் 61) ஆதலின் பொல் +தீங்கு = பொற்றீங்கு என வருவதில் ஐயம் தோன்ற இடம் இல்லை.

அண்டம் - **அண்டம்** என்னும் தொடக்கத்தை உடைய பாடலும் (96-பன்னிரண்டாஞ் சூத்திரம்)

பதிப்புகளில் - தொண்டர்களிடத்தும் என்னும் தொடக்கத்தை உடைய பாடலின் தலைப்பில் பன்னிரண்டாஞ் சூத்திரம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்டம் மேவிட - என்னும் தொடக்கத்தையுடைய (96) பாடலுக்கு ஞானயோகம் என்னும் தலைப்பும், மண்முதற்கரணம் என்னும் தொடக்கத்தை உடைய பாடலுக்கு (97) ஞானக்கிரியை என்னும் தலைப்பும் கொடுக்கப்பட்டு இவை பதினோராஞ் சூத்திரத்தைச் சார்ந்தனவாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இப்பாடல் அருளிய ஆசிரியர் அண்டம் மேவிட (99) மண்முதல் கரணம் (97) தொண்டர்களிடத்தும் என்னும் மூன்று பாடலுமே பன்னிரண்டாஞ் சூத்திரம் எனக்கருதியிருக்கின்றார்

எனத் தெரிகின்றது. காரணம். ஞானத்தில் சரியை என்பது வழிபாடு எனப்படுவது போல் ஞானத்தில் கிரியை ஞானத்தில் யோகம் என்பனவும் வழிபாடே. ஆதலின் இவற்றை அணைந்தோர் தன்மை கூறும் பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் அடக்கினார் எனலாம்.

தருமையாதீனப்பதிப்பில் (மெய் கண்ட சாத்திரம் 1942) அண்டம் மேவிட என்னும் பாடலின் கீழ் இச் செய்யுள் முதல் பன்னிரண்டாஞ் சூத்திரமாகக் கொள்வதும் உண்டு என அடிக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

உமாபதிசிவம் உண்மை அதிகாரத்துக்குப் பொருட் பாகுபாடு கூறும் 51 வது திருவிருத்தத்தில் - புனிதன் நாமம் அங்கதில் அணைந்தோர் தன்மை - என்றே வரிசைப்படுத்தினார். புனிதன் நாமம் என்பது பந்தமானவை (90) திருவெழுத்தஞ்சில் (91) ஆசுறு திரோதம் மேவாது (92) என்ற மூன்று பாடல்களுடன் முடிவடைகின்றது. அவற்றின் பின் அணைந்தோர் தன்மை என்ற பாகுபாடு தொடங்குகின்றது. அது தீங்குறு (93) குறிப்பிடம் (94)அகப்புறம் (95) அண்டம் மேவிட (96) மண்முதல் கரணம் (97) தொண்டர்களிடத்தும் (97) என்னும் ஆறு பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இவற்றை 5-பாடல்கள் பதினோராஞ் சூத்திரம் என்றும் ஒரு பாடல் பன்னிரண்டாஞ் சூத்திரம் என்றும் பகுத்தல் **உமாபதி சிவத்தின் கருத்துக்கு மாறாக உள்ளது** என்றே தெரிகின்றது.

உமாபதி சிவம் தமது சிவப்பிரகாசத்தைப் பன்னிரு சூத்திரமாகப் பகுத்துக் கூறும் கருத்து உடையவரல்லர் என்பது இதனால் விளங்கும்.

அன்றியும் சிவஞானபோதம் பதினோராஞ் சூத்திரம் பரமேசுவரனது சீபத்தாதங்களை அணையுமாறு உணர்த்துவது.

இதனைக்கருதி ஆறுபாடல்களுள் ஐந்து பாடல்களைப் பிரித்து அணைந்தோர் தன்மை - பதினோராஞ் சூத்திரம் எனத் தலைப்புக் கொடுத்தால் - தொண்டர்களிடத்தும் என்னும் பாடலுக்கு **பொருட்பாகுபாடு கூறவில்லை என்னும் குற்றம் உமாபதி சிவத்துக்குவரும்.**

பதினோராஞ் சூத்திரம் அணைந்தோர் தன்மை கூறுகிறது என்பவரை மாதவச் சிவஞானமுனிவர்

தமக்கு வேண்டின வாறே உரைப்ப;
அது போலி என்று ஒழிக

எனத் தமது மாபாடியத்தில் மறுத்துரைத்தார்.(சூ 11 நுதலியபொருள் பாடியம்)

அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டுவழிபடுதலை ஒருபாகுபாடாக - வழிபட்டுவாழ்தல் என்பது போல் - பகுக்காதது ஏன்? என்ற கேள்வி எழும்.

உமாபதிசிவம் அணைந்தோர்தன்மை என்னும் பாகுபாட்டுடன் சாத்திரத்தை நிறைவு செய்பவர் என்பதனைத் திருவருட்பயன் அதிகாரப் பாகுபாட்டிலும் அறிந்து கொள்ளலாம். திருவருட் பயன் ஒன்பதாவது அதிகாரம் அஞ்செழுத்தருள்நிலை, பத்தாவது அதிகாரம் அணைந்தோர் தன்மை. சிவப்பிரகாசம், திருவருட்பயன் இரண்டும் இணையான நூல்கள். சிவப்பிரகாசம் உண்மையதிகாரத்தைப் பகுக்கும் போது

**புனிதன் நாமம், அங்கதில் அணைந்தோர்தன்மை
அறைகுவன்**

என்றே பகுத்துள்ளார் என்பதனை நினைத்தல் வேண்டும்.

மதுரைச்சிவப்பிரகாசரும்

–மேல் அணைந்தோர் தன்மையாகிய தீங்குறு மாயை – என்ற விருத்தம் தொடங்கித் தொண்டர்கள் இடம் என்ற விருத்தம் முடிவாகச் செய்யுள் ஆறனுள் .. .. ஐந்தும்

பதினோராஞ் சூத்திரமாகவும் தொண்டர்கள் இடம் – ஒன்றும் பன்னிரண்டாஞ் சூத்திரமாகவும் நின்றது என அறிக–

என்றும் எழுதினார்.

அணைந்தோர் தன்மையாகிய ஆறனுள்- என இவர் எழுதியிருப்பதனால் ஆறும் அணைந்தோர் தன்மை என்பதனை இவர் உடம்படுகின்றார் எனத் தெரிகிறது. இங்ஙனம் உடம்பட்டபின்னர் ஐந்து திருவிருத்தங்களைப் பிரித்துப் பதினோராஞ் சூத்திரம் என எழுதுவது முரண்பாடாகத் தோன்றுகிறதே!

இவர் ஏன் இங்ஙனம் எழுதினார்? பதினோராஞ் சூத்திரம் இன்னபாடலில் தொடங்குகின்றது எனக் காட்டுவதற்கு இடமில்லையே என்று கருதியதனால் இங்ஙனம் பிரித்தார் எனத் தெரிகின்றது. இங்ஙனம் பிரித்தது முதல் நூல் வழி நூல்கள் போல் இப்புடைநூலும் பன்னிரு சூத்திரமாக இருத்தல் வேண்டும் என்று காட்டுதற்கு மேற்கொண்ட முயற்சியே எனத்தெரிகிறது.

மேலும் இங்கு இன்னொரு சிக்கலும் எழுகின்றது. சிவப்பிரகாசம் பன்னிரு சூத்திரப்பாகுபாடு உடையது; முதல் சூத்திரம் முதலிய பன்னிரு சூத்திரங்களும் பலகலை என்பது முதலிய பன்னிருதிரு விருத்தங்களில் தொடங்குகின்றன என்பதனை இப்பாடல்(பலகனையும் எண்ணரிதும்) கூறுவதாயின் பன்னிரு பாடல்களின் முதல் நினைப்பு இப்பாடலில் இருத்தல் வேண்டும்.

பலகலை(13), எண்ணரிதாய் (19), செறிந்திடும் (52), எண்ஒன்றிலாதீதம் (60), மருவிய (63), காட்டிடும் (68), பன்னிறம் (69), தன்னறிவதனால் (72), புகலரும் (76), பொற்(80), தீங்குறு (93) அண்டம் (96), எனப்பன்னிரு பாடல்களுக்கு முதல்நினைப்புத்

தரப்பட்டுள்ளது. தொண்டர்களிடத்தும் என்னும் பாடல் விட்டுப் போகின்றது. இதனைச் சேர்த்தால் பதின்மூன்று தலைப்புகள் வந்துவிடும்.

பலகலையும் எண்ணரிதும் என்னும் பாடலைச் செய்தவர் (சுவாமிநாததேசிகர் அல்லது வேறு ஒரு தம்பிரான் சுவாமிகள்) தொண்டர்களிடத்தும் என்னும் பாடலின் முதல் நினைப்பை விட்டுவிட்டார் என்று சொல்லலாமா!

மதுரைச்சிவப்பிரகாசர், சிதம்பரநாதமுனிவர் உரைகளில் தொண்டர்களிடத்தும் என்னும் பாடலின் தலைப்பில் பன்னிரண்டாஞ் சூத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு நான்மேலே கூறியவாறு **பலம்உள பொற் தீங்கு அண்டம் பார் தொண்டர் பன்னிரண்டே** - என்னும் பாடம் கொள்ளலாம். உமாபதிசிவத்தின் மேலோ பலகலை என்னும் பாடலைப் பாடிய தேசிகர் மேலோ குற்றம் வராது. இப்பாடத்துக்குப் பொருள்

பலம் உள - பலம் உள்ளனவாகிய; பலம் -பயன்.
இது பொற்புறு என்னும் பாடலுக்கும் பின்வரும் பாடல்களுக்கும் அடைமொழி. இது பற்றி முன்னரே எழுதப்பட்டது.

பொற் - **பொற்புறு** என்னும் பாடலும் (80)
தீங்கு - **தீங்குறுமாயை** சேராவகை என்னும் பாடலும் (93)
அண்டம் - **அண்டம் மேவிட** என்னும் பாடல் தொடங்கி (96)
தொண்டர் - **தொண்டர்** என்னும் பாடல் (98) **முடிய**;
பன்னிரண்டு - பன்னிரண்டு சூத்திரங்கள்; ஏ-அசை.
பார் - பார்த்து அறிக-

என உரைத்துக் கொள்ளலாம்.

இப் பொருளின் படி - *அண்டம் மேவிட* - என்னும் பாடலிலேயே(96) பன்னிரண்டாஞ் சூத்திரம் எனத்தலைப்புக் குறிப்பிடுதல் வேண்டும். தருமையாதீனப்பதிப்பின் அடிக்குறிப்பும் இதற்கு ஆதரவாக உள்ளது.

பலகலையும் எண்ணரிதும் என்னும் பாடல் அடிதோறும் நான்கு காய்ச் சீர்களை உடையதாக அமைந்துள்ளது. காய்ச்சீர்கள் பெரும்பாலும் விளங்காய்ச் சீர்களாக அமைந்துள்ளன. சிறுபான்மை மாங்காய்ச் சீரும் விரவி வருகின்றது. வருமெண்ணே, தீங்கண்டம் என்பன காண்க எனவே

பலமுள பொற் றீங்கண்டம் பார்தொண்டர் பன்னிரண்டே

எனப்பாடம் கொள்வதால் சீர் சிதைவதில்லை. மொழிப்பு மோனையும் அமைகிறது.

ஏனைய இடங்களில் தொடக்கம் மட்டும் சொல்லப்பட்டது; முடிவு சொல்லப்படவில்லையே என்று இங்கு ஒரு கேள்வி எழும். இதற்கு விடை அங்கெல்லாம் அடுத்த சூத்திரம் தொடங்குமிடம் சொல்லப்பட்டுள்ளது. எனவே அதற்கு முந்தின திருவிருத்தத்தில் முந்தின சூத்திரத்தின் பொருள் முடிவடைகிறது என்பது பெறப்படும்;

இது இறுதிச் சூத்திரம் ஆதலின் தொடங்கும் இடமும் முடியும் இடமும் சொல்லுதல் வேண்டும் என்பதேயாகும். அன்றியும் இப்பாடத்தினால் - பலகலையும் என்னும் திருவிருத்தம் என்பது முதலாக தொண்டர்களிடம் என்னும் திருவிருத்தம் இறுதியாக உள்ள எண்பத்தாறு திருவிருத்தங்களே பன்னிரு சூத்திரப்பாகுபாட்டுக்கு உரியன என்பதும் பெறப்படும். எஞ்சிய பதினான்கு திருவிருத்தங்களில் பன்னிரண்டு திருவிருத்தங்கள் பாயிரமாகவும் ஒரு திருவிருத்தம் நூற்கருத்தாகவும் ஒரு திருவிருத்தம் நூலை உபதேசிக்கும் முறைமையாகவும் அமைகின்றன.

மரபாக இருந்து வரும் பாடத்தை மாற்றலாமா?
எனக்கேள்வி எழும்.

பொருள் பொருந்தாமல் உரை செய்யலாமா?
உமாபதிசிவத்தின்மேல் குற்றம் சொல்லலாமா ?
பாடலைப்பாடியவர்மேல் குற்றம் சொல்லலாமா ?
என்னும் கேள்விகளே அதற்கு விடையாக அமையும். பாடத்தைத் திருத்துதல் வேண்டும் என்பதை அனுமானத்தால் சொல்கிறேன். அனுமானம் தகுந்த காரணத்துடன் கூடியதே என்பதையும் விளக்கியிருக்கிறேன்.

இந்த அனுமானத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்குப் பழைய பதிப்போ, ஓலைச் சுவடியோ, காகிதக் கையெழுத்துப் பிரதியோ கிடைக்குமா எனத் தேடிப்பார்த்தல் வேண்டும்.

காஞ்சிபுரம் சுவாமிகள் (229 ஆம் பட்டம்) பொற்றீங்கண்டம் என்றே பாடம் கொண்டுள்ளார்.

பொற்றீங்கண்டம் தொண்டர் பன்னிரண்டே- எனப்பாடம் திருத்தாமல் இருந்தபடியே உரை செய்தலும் ஆம். அது மிகவும் வலிந்து எழுதப்பட்ட உரையாகத் தெரிகிறது.

அவ்வுரையினையும் பதிப்பில் உள்ளவாறே இங்கே தருகிறேன்.

பலகலையும் எண்ணரிதும் பார்க்கிலரும் – பாச ஞானங்களாகிற அறுபத்து நான்கு என்றும் அதற்கும் மேற்பட்டு எண்ணற்றனவாயும் உள்ள நூல்களைப் பார்க்காதவர்களும்.

செறிந்திடுமே மலநிலையால் ஏறும் எண்ணே – மலமாயாதிகளை அடைந்திருக்கிற நிலைமையால் பொருந்தும் வரும் எண்ணங்களையும்,

மருவியவும் காட்டிடுமே– அதனால் அவர்கள் சார்ந்திருக்கிற புறச் சார்பு அகச்சார்புகளையும் அறியத்துணை செய்து நிற்கும்.

சொல அரிதாம் பல் நிறமும் தன்னறிவும் – சொல்லுதற்கு அரியனவாகிற பலநிறங்களையும் ஆன்ம போதமாகிற பசு ஞானத்தையும்

பிலமுளபோல் தீங்கண்டம் பேர் முதலாப் பன்னிரண்டு சொல்புகலும் – மிக ஆழமான பிலத்துவாரத்தில் உள்ளனபோல பலவேறு கண்டங்களுடைய நாம ரூபமாதியவற்றைப் பன்னிரண்டாஞ் சூத்திர அனுபவம் பெற்றவர் தம் உரையால் புகல்வர்

-என்றவாறு.

பன்னிரண்டாம் சூத்திரத்தின் அனுபவ நிலையைச் சிவனருளால் உற்றவர்கள் எத்தகைய கல்வியிலராயினும்

1. சகலநிலையில் ஆன்மாக்கள் மலபந்தந்தால் படும் துன்பங்களையும் ,
2. அதனால் சார்ந்துள்ள அகச்சார்பு புறச்சார்புகளையும்
3. அதனால் ஆன்மாக்கள் பொருந்தும் நிலைவேறு பாடுகளையும் ,
4. தன்னறிவும் ,
5. சிவனருளையும் ,
6. எங்கேயோ தூரத்திலிருந்து பிலத்துள்ள கண்டங்களின் பேர் முதலானவற்றைத் தம் உரையால் சொல்லித் தேற்றுவர்

என்பது கருத்து.

இவ்வுரையினை எழுதியவர் ச. தண்டபாணிதேசிகர் அவர்கள். சிவப்பிரகாசத்தில் பன்னிரு சூத்திரப் பாகுபாடு இல்லை என்னும் கருத்தில் உரை செய்தார் போலும்.

இவ்வுரையின் மேல் எழும் ஐயங்கள் :

1. ஆன்மாக்கள் மலபந்தத்தால் படுந்துன்பம், சார்பு, நிலைவேறுபாடு முதலியவற்றைக் கண்டங்களின் பெயர் முதலியவற்றைச் சொல்லித் தெளிவித்தல் இயலுமா ?

2. கண்டங்கள் பிலத்துவாரத்தில் உள்ளனவா ?

3. பன்னிரண்டாஞ் சூத்திர அனுபவம் பெற்றதற்குப் பயன் இதுதானா ?
   யோகக் காட்சி பெற்றவரே இதனைச் செய்யலாமே !

4. பன்னிறம் என்பதற்குப் பதவுரையில் பலநிறம் என்று எழுதப்பட்டது. கருத்துரையில் நிலைவேறுபாடுகள் என்று எழுதப்பட்டுள்ளது.

5. பேர்முதலா என்பது பன்னிரண்டு
   என்பதனைத்தழுவுமே!
6. பேர் முதலா சொல்புகலும் என்று இயையுமா ?

7. புகலும் என்பதற்குச் சொல்லும் என்பது பொருள். அது தேற்றும் என்னும் பொருளில் வருமா ?

8. பன்னிரண்டு எழுவாய் - சொல்புகலும் பயனிலை என்று வாக்கியம் முடிந்தால் - பன்னிரண்டும் புகலும் என்று பொருள் முடியுமே ! பன்னிரண்டாஞ் சூத்திர அனுபவம் பெற்றவர் என்று பொருள் விரியுமா ?

இவ்வாறு **பல ஐயங்கள்** என்மனத்தில் எழுகின்றன.

ஏதோ! பெரியவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்று அமைதிபெறலாம்.

மேலே கூறிய பதிப்பைத் தொடர்ந்து புதிய உரையுடன் ஒரு பதிப்பு வெளியிடப்பட்டது. அதில் :

> பன்னிரண்டாஞ் சூத்திர அனுபவநிலையினைத் திருவருளால் பொருந்தியவர்கள் பலக்லை ஞானங்களாய் எண்ணற்று விளங்கும் கல்வி ஒன்றையும் அறியாதவர்களாய் இருப்பினும் மலபந்தத்தால் உயிர்கள் படும் துன்பத்தையும் அவற்றின் சார்புகளையும் சொலற்கரிய பல பொருள்களின் இயல்புகளையும் தன்னறிவையும் பாதாள உலகினில் விளங்கும் இனிய கண்டங்களின் பெயர் வடிவம் முதலியவற்றையும் தம் உரையால் கூறுவர்.

என்று எழுதப்பட்டுள்ளது.

இவ்வுரையாளர் முந்தைய உரையை அப்படியே சிறிய வேறுபாட்டுடன் எழுதியுள்ளார்.

1. பன்னிறம் என்பதற்குப் பல பொருள்களின் இயல்பும் என்றும்,
2. தன்னறிவும் என்பதற்குத் தன்னறிவையும் என்றும்,
3. பிலம் என்பதற்குப் பாதாள உலகம் எனவும்
4. சொல்புகலும் என்பதற்குத் தம் உரையால் கூறுவர் எனவும்

எழுதப்பட்டுள்ளதுதான் இவ்வுரையில் காணப்படும் மாற்றம். கருத்து - பழைய கருத்தே.

குறிப்பு:

இவ்வாறே சுவாமிநாத தேசிகர் தசகாரியத்தில் உள்ள மூன்று நான்கு ஏழு என்னும் பாடலுக்கு (22) எழுதப்பட்ட உரையும் **வலிந்து எழுதப்பட்ட உரையாகவே தெரிகிறது**- விவரம் **பின்னிணைப்பில் காண்க**.(பக்கம் 140)

---

7. சூத்திரப் பாகுபாடு பற்றிக் காஞ்சிபுரம் சுவாமிகள் கருத்து:

இனி, புடைநூல் பன்னிரு சூத்திரப்பகுப்பு உடையதா என்பது பற்றிக் **காஞ்சிபுரம் சுவாமிகள்** (229 ஆம் பட்டம்) என்ன கூறுகிறார்கள் என்பதை எடுத்து எழுதி இந்நூலை நிறைவு செய்யலாம். இச் சுவாமிகள் சிவப்பிரகாசத்துக்கு உரை எழுதியவர்.

காஞ்சிபுரம் சுவாமிகள் சிதம்பரநாத முனிவர் சிவப்பிரகாசத்துக்கு எழுதிய உரையை மிகவும் பாராட்டுபவர். அவ்வுரையையே தாம் எழுதிய சிவப்பிரகாசத்து உரையில் பெரிதும் பின்பற்றியுள்ளார். சிதம்பரநாதமுனிவர் தமது உரையில் சிவப்பிரகாசத்தில் முதல் நூல் வழிநூல்களைப் போல் சூத்திரப்பாகுபாடு காட்டியே உரை செய்தார். எனினும் காஞ்சிபுரம் சுவாமிகள் சூத்திரப்பாகுபாடு காட்டி உரை எழுதவில்லை.

சிவப்பிரகாசத்தில் பன்னிரு சூத்திரப்பாகுபாடு பற்றிச் சுவாமிகள் தம் உரையில் சில செய்திகள் தெரிவித்துள்ளார்கள். அவை வறுமாறு:-

1. சிவப்பிரகாசம் – காஞ்சிபுரம் இலக்கணம் சிதம்பரநாதமுனிவர் உரையுடன் நல்ல பதிப்பாக வெளியிடப்படுதல் இன்றியமையாதது.

   அச்சில் உள்ள உரைகள் எல்லாவற்றையும் ஒருங்கு வைத்து நோக்குவார்க்கே மேற்படி முனிவரின் உரை சிறந்தது எனல் நன்கு புலப்படும்.

2. மதுரைச் சிவப்பிரகாசர் உரை மேற்கோட் கடலாக விளங்குகிறதேயன்றிப் பெரிதும் செய்யுளை யொட்டிய செம் பொருளதன்று.

3. திருவாவடுதுறை ஆதீனத்து மூன்றாவது குருபீடத்து எழுந்தருளிய மகாசந்நிதானம் சீலத்திரு அம்பலவாண தேசிகசுவாமிகள் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம் ஆகிய மூன்று அருள் நூல்கட்கும் கருத்துரை (சிந்தனை) அருளிய வாய்மையை அறியலாம் (உலகுடைய நாயனார் அருளிச் செய்த திருவிருத்தம் -10) எடுத்துக்காட்டப் பட்டுள்ளது

எம்மிடம் உள்ள ஏட்டுப் பிரதியில் சிவஞான போதத்துக்கும் சிவப்பிரகாசத்துக்கும் சிந்தனை உரை இருக்கின்றது.

*சிந்தனை உரை திருவாவடுதுறையிலும் வேறு சில இடத்திலும் இருத்தல் கூடும். அவற்றைப் பெற்று உலகுக்கு உதவியாக அச்சிடச் செய்து வெளியிடுதல் சைவ மடாதிபதிகட்கும் செல்வராய் உள்ள சைவர்க்கும் தலையாய கடனாகும்.

(சிவப்பிரகாசம் – சித்தாந்தம் மலர் 22 இதழ் 3, 6, 7)

4. பலகலையும் பொற்றீங்கண்டம் பேர் முதலாப் பன்னிரண்டே என்னும் திருவிருத்தம் (ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் அருளிச் செய்த தச காரியத்தின் இருபதாவது செய்யுள்.)

இதனுள் 13, 19, 52, 60, 63, 68, 69, 76, 80, 93, 96 என்னும் எண்ணைக் கொண்ட சிவப்பிரகாசத் திருவிருத்தங்களின் முதல் நினைப்பு உணர்த்தப்பட்டமை அறிக. அப்பன்னிரு தலைப்பையும் தொடக்கமாகக் கொண்டுள்ள இந்நூலினுள் அமைந்த சிவ ஞான போதச் சூத்திரக்கருத்துக்கள் என்பது இதன் உட்கிடை.

---

* *1. சிவஞானபோதம் சிந்தனை உரை திருவாவடுதுறை ஆதீனத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (எண் 256 ஆண்டு 1970)*

2. சிவப்பிரகாசச் சிந்தனை உரை, சமாசப் பதிப்பாக வெளிவந்தள்ளது எனத் தெரிகின்றது.

3. சித்தியார் சிந்தனை இல்லையோ! கிடைக்கவில்லையே!

இதை ஒட்டியே சிவப்பிரகாசத்துக்கு உரையிட்டார் பலரும். ஸ்ரீ காவை அம்பலவாணத்தம்பிரான் சுவாமிகள் அருளிய வெண்பாவாகிய – பாயிரம் ஈராறு .....மதித்து – என்றதிலேனும் ஸ்ரீ சண்பைச் சிற்றம்பல நாதத்தம்பிரான் சுவாமிகள் அருளிய அகவலாகிய – ஓங்கு பரந்த .... பண்பமர் சிற்றம் பலவன் தானே

இதை ஒட்டியே சிவப்பிரகாசத்துக்கு உரையிட்டார் பலரும்.

ஸ்ரீ காவை அம்பலவாணத்தம்பிரான் சுவாமிகள் அருளிய வெண்பாவாகிய – பாயிரம் ஈராறு .....மதித்து – என்றதிலேனும் ஸ்ரீ சண்பைச் சிற்றம்பல நாதத்தம்பிரான் சுவாமிகள் அருளிய அகவலாகிய – ஓங்கு பரந்த .. .. பண்பமர் சிற்றம் பலவன் தானே
என்றதிலேனும் முதல் நூற் பகுப்பைப் போலும் பன்னிரு சூத்திரப் பகுப்பு உண்மை உணர்த்தப்பட்டிலது.

முதல், வழி, புடை என்னும் மூன்றும் பன்னிரு சூத்திரக் கருத்துடைய எனினும் இப்புடை நூலின் அமைப்பு அப் பன்னிரு சூத்திரப் பகுப்புடையதன்று.

* ஆசிரியர் இதில் பொது, உண்மை என்னும் இருபகுப்பே தமது அமைப்பு என்று முதல் இடை கடை மூவிடத்தும் உணர்த்தி உண்மையின் பகுப்பை மட்டும் ஐம்பத் தொன்றாவது திருவிருத்தத்தில் குறித்தருளினார்.

பொதுவியல்பு இரண்டு சூத்திரமாக அமைந்ததென்று அவர் குறித்தாரல்லர். உரையாசிரியர்களே கொண்டுரைத்தார்கள்.

** முதல் - பொது உண்மை எனக் கருதி (11) இடை - இங்கிவை பொது (51) கடை - பெத்தம் முத்திகள் மதித்தாமன்றே (99) ஏழாகப் பகுத்தது : 1.ஆன்மா 2.அஞ்சவத்தை 3. உணர்த்தும் தன்மை 4. ஞானவாய்மை 5. அதன் பயன் 6. புனிதன் நாமம் 7. அணைந்தோர் தன்மை.*

இங்கு சுவாமிகள் கச்சியப்ப முனிவர்க்கும் இதுவே கருத்து என்பதைத் திருத்தணிகை ஆற்றுப்படைப் பகுதியை எடுத்துக் காட்டி எழுதியுள்ளார்.

ஏழாகப் பகுத்தருளிய ஆசிரியர்க்குப் பத்தாகப் பகுத்தல் உடன்பாடாகாது.
சுவாமிநாத தேசிகர் தசகாரியம் சூத்திரப் பாகுபாட்டைக் கூறுகின்றது. அதனால் அதுவும் பழங் கொள்கையே.

முதல் வழி நூல்களோடும் இப்புடை நூலை ஒருங்குவைத்து ஆராய்வார்க்குக் கருத் தொருமை யன்றிப் பகுப்பொருமை எய்தப் பெறாமை இனிது புலப்படும். படவே யாமும் இங்குச் சூத்திரப் பகுப்பின்றி உரைக்கலானோம் என்பது தெளிவாகும்.

சுவாமிநாத தேசிகர் தசகாரியம் சூத்திரப் பாகுபாட்டைக் கூறுகின்றது. அதனால் அதுவும் பழங் கொள்கையே.

மதுரைச் சிவப்பிரகாசர் உரையில் முதல் நூற்கு வேறாகச் சூத்திரத்து உட்கோள் கூறப்பட்டமை காண்க.
(சிவப்பிரகாசம் – சுவாமிகள் உரை – அவையடக்கம்)

இந்நூற் பகுப்பு முன்னூற் பகுப்போடு வேறுபடுதல் விளங்கும். விளங்கினும் திருவாவடுதுறைத் திருமடத்துச் சம்பிரதாயத்தில் பன்னிரு சூத்திரப் பகுப்பாக்கி உரைத்தல்
(51 ஆம் திருவிருத்த உரை)

51–வது திருப்பாடல் உண்மை அதிகாரத்தின் பொருட் பாகுபாட்டின்படி நூலைக் கற்பதே உண்மை உணர்ச்சிக்குத் தக்கதாகும்.

திருத்தணிகை ஆற்றுப்படையுள் காட்டிய பாகுபாட்டின்படி உண்மைப் பகுதியை உணர்த்துவதே ஞான சாதன விளக்கம் பயக்கும்.

சிவப்பிரகாசத்தில் பன்னிரு சூத்திரப் பாகுபாடு கொண்டு பலர் கூறினர். அது பொருந்துமா ? பொருந்தாதா ? இவ்வாராய்ச்சி நமக்கு வேண்டாதது.

பலகலையும் எண்ணரிதும் என்று தொடங்கும் இலக்கணக் கொத்துரையாசிரியர் (என்றது சுவாமிநாத தேசிகரை) அருளிய பாடலும் சமாசத்தின் முற்பதிப்பாகிய மெய்கண்ட சாத்திரத்தில் உள்ள சிவப்பிரகாசம் சிந்தனை உரையும் பன்னிரு சூத்திரப் பாகுபாட்டை இசைந்தவை.

சங்கற்ப நிராகரணத்தின் முடிவில் கூறியருளியவாறு திருவருட்பயனோடு வைத்து இதனை (சிவப்பிரகாசத்தை) உணர்வார்க்குத் திருந்திய வகையில் திருவருள்ஆராய்ச்சி உண்டாகும்.

இங்ஙனம் காஞ்சிபுரம் சுவாமிகள் எழுதியிருப்பதனால் சிவப்பிரகாசத்தில்

1. முதல் நூல் வழிநூல்களைப்போல் பன்னிரு சூத்திரப்பாகுபாடு இல்லை;
2. பன்னிரு சூத்திரக்கருத்து (சிவஞான போதமுழுக் கருத்து) மட்டுமே உண்டு

என்பது புலனாகும்.

8. என் கருத்து:

1. சிவப்பிரகாசத்தில் சூத்திரப்பாகுபாடு இல்லை.
2. அதிகாரப் பாகு பாடே உள்ளது.
3. உண்மையதிகாரத்துக்குப் பொருட் பாகுபாடு மட்டும் உள்ளது.
4. அது உமாபதிசிவத்தினாலேயே செய்து வைக்கப்பட்டு விட்டது.
5. பொதுவதிகாரத்துக்குப் பொருட்பாகுபாடு இல்லை.
6. பலகலையும் எனத் தொடங்கும் பாடல் பலவகையிலும் ஐயத்திற்கு இடமான பாடலாகவே உள்ளது.

உ
சிவமயம்

7. சிவப்பிரகாசத் திருவிருத்தங்களின் கருத்துத் தொகுப்பு

(என் - திருவிருத்த என்னைக் குறிக்கும்)

00. **காப்புச் செய்யுள்:** ஞானமே திருமேனியாக, களிப்பு நிறைய எழுந்தருளும் யானைமுகப் பெருமானின் திருவடிகளை நாடோறும் மறவாமல், மலர்களைத் தூவி வழிபடும் அடியவர்களின் உள்ளம் அருள் வெளியாகும். அவ்வுள்ளங்கள் வினையைப் பொருந்த நினையா.

01. **கூத்தப்பெருமான் வணக்கம்:** மேலான ஓங்கிய ஒளியாகியும், ஞான வடிவாயும், எல்லா உலகங்களையும் காத்தருளும் சிவகாமியம்மையார் காண உயிர்கள் பிறவித் தொடர்பு நீங்க அம்பலத்துள் நின்று வழிபடும் அன்பர் துதி செய்ய திருநடனம் செய்தருளும் பெருமானின் திருவடிகளை புறத்தே தலையிலும் அகத்தே அறிவிலும் பதியவைத்து வணங்கிப் போற்றுதலைச் செய்வாம்.

02. **சிவகாமியம்மை வணக்கம்:** இறைவனது சத்தி. பராசத்தி, திரோதானசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என ஐந்துவகைப்பட நின்று, விந்து மோகினி மான் என்னும் மூன்று மாயையையும் பொருந்திப், படைப்பு முதலிய ஐந்தொழிற்கும் வித்தாகி, உலகுஉயிர்கள் பிறவித் துயர்கெட திருக்கூத் தினைக் கண்டருளும். அத்தகைய சிவகாமித் தாயின் திருவடிமலர்களை தலைக்கு அணியாகச் சூடி மகிழ்வோம்.

03. **மூத்தபிள்ளையார் வணக்கம்:** அங்கயற்கண்ணி யம்மை யோடும் சிவபெருமான் கூடிப் பெற்று அருளிய யானை

முகத்தையுடைய விநாயகப் திருவடிகளை நூலில் குற்றம் நணுகாமலும், இடையூறு நிகழாமலும், தமிழ்ப் பாக்களுக்குரிய செவ்விய நலங்களனைத்தும் பொருந்தவும் வேண்டி போற்றுதல் செய்வாம்.

04. **முருகப்பெருமான் வணக்கம்:** தேவர்கள் தலைவரும், ஞானப்பிள்ளையும், அகத்தியற்கு ஞானஉபதேசம் செய்த தேசிகரும், சூரபதுமனது மார்பையும், கிரௌஞ்சக மலையினையும் என் பிறவித் துன்பத்தினையும் இரு கூறுபடும் வண்ணம் வேற்படையை ஏவியவரும், வள்ளியம்மையினைத் தழுவி விளங்குபவருமாகிய கந்தப்பெருமானின் திருவடியினைச் சிந்தை செய்வோம்.

05. **சந்தான குரவர் வணக்கம்:** நந்தியம் பெருமான், சனற்குமார முனிவர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர் என்னும் அகச்சந்தானக் குரவர்களையும், திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டார், அருள்நந்தி சிவம் , அருட் செல்வராகிய மறைஞானசம்பந்தர் ஆகிய புறச்சந்தான குரவர்களையும் வாழ்த்துவோம்.

06. **குருவணக்கம்:** சாமவேதம் பொலிவுபெறவும், பராசர கோத்திரம் நிலைபெறவும், எம்போல்வார்க்கு ஞானமாகிய பற்றுக்கோடு அருளவும், குருவடிவம் தாங்கிவந்து எம்மை அடிமை கொண்ட மருதூர்த் தலைவனாகிய மறைஞானசம்பந்தப் பெருமான் அடிகளை எம் தலைமீது புனைவோம்.

07. **நூல் நுதலிய பொருள்:** அகப்புறம், புறம், புறப்புறம் எனப்படும் மூவகைச் சமயத்தவர்க் கிருளாயும், அகச்சமயத்தார்க் கொளியாயும், தார்க்கிகர் முதலியோர் புகலுகின்ற அளவைக் களவாயும், பொன்னும் பணியும் போல அபேதமும் இருளும் வெளியும் போலப் பேதமும் சொல்லும் பொருளும் போலப் பேதாபேதமும் இல்லாமல், சைவசித்தாந்தத்திற் கூறப்பட்ட சிவதரும வகையால் விளைவதாயும், உடலும் உயிரும் கண்ணும் அருக்கனும், அறிவும் ஒளியும் போலப் பிறிவரிய

அத்துவிதமாகும் சிறப்புடையதாயும், வேதாந்தத்தைத் தெளிவுறுத்திக் கூறும் சைவசித்தாந்தத்தின் பொது, உண்மை என்னும் இருவகையையும், இந்நூலில் தெரியச் செய்தலை விரும்பினோம்.

08-10. **தீக்கை வகைகள்:**

சைவசித்தாந்தத் திறனைத் தெரிந்து கொள்ளும் உரிமை உடைய உயிர்களையும், அவற்றின் வகைகளையும், அவற்றுள் சகலர்க்குப் பாச நீக்கம் தரும் தீக்கை வகைகளையும், அதன் பயனையும் இப்பாடல்களில் குறிப்பிடுகிறார்.

11. **நூல் வழி :** குரு முதல்வராகிய மெய்கண்ட தேவநாயனார் சிவஞானபோதம் அருளிச் செய்தார். அவருடைய மாணாக்கர் அருள்நந்தி சிவனார் சிவஞானசித்தியார் என்ற நூலில் சிவஞானபோதத்தின் பொருளை விரித்துரைத்தார். ஞானாசிரியர்களாகிய இவர்கள் இருவரின் திருவடிகளையும் வணங்கி அவர்கள் அருளிய நூல்களை விரும்பிக் கற்று என்கருத்தில் உறைகின்ற திருவருளையும், இறைவனால் அருளிச் செய்யப்பட்ட சிவாகமங்களையும் கலந்து பொது உண்மை என இரு அதிகாரங்களாக வகுத்துக் கொண்டு நூறு திருவிருத்தங்களைக் கொண்ட சிவப்பிரகாசம் என்ற இந்நூலினை எழுதலுற்றேன்.

12. **அவையடக்கம்:** பழமையவாகும் எனச்சிறப்பித்துச் சொல்லப்பெறும் நூல்கள்யாவும் நல்லன ஆகா; இந்நாளில் தோன்றிய நூல் எனச் சிறப்பியாது குறிக்கப்படும் நூல்கள்யாவும் தீயன ஆகா. உத்தமர் ஒளி முதலிய நலங்களைக் கொண்ட மாணிக்கத்தைப் பொதிந்த குற்றத்தைக் கருதாது , அதன் உண்மை நலத்தை விரும்பி அணிவர்.மத்திமர் அவ்வணியின் தொழில் நுட்பத்தை ஆய்ந்து பூண்பர். ஏனையோர் தமக்கென ஒரு கொள்கையின்றிப் பிறர் புகழ்ந்தால் புகழ்வது, பிறர் பழித்தால் பழிப்பது என்னும் தன்மையினர். இத்தன்மையோர் சொல்வதை நாம் மதியோம்.

13-18: **பதி இலக்கணம்.**

13. வேதங்கள், ஆகமங்கள் ஏனைப் பல கலைகள் எல்லாவற்றினும் குறிக்கோள் பதி பசு பாசம் என்னும் முப்பொருள் இயல்புகளை எடுத்துரைத்தலே ஆகும். இம்மூன்றனுள் பதியாவது பரம் பொருள். அதுதான் அருவம் உருவம் அருவுருவம் இல்லாதது. குணமும் குறியும் இல்லாதது. இயல்பாகவே மலமில்லாதது. தனிப் பொருள். அழியாதது. எல்லாவுயிர்கட்கும் உணர்வாயிருப்பது. அசைவற்றது. பகுப்பும் பகுதியும் அற்றது. இன்பமே வடிவாக விளங்குவது. சென்றடைய அரியது. எனினும் அருளே வழியாக்கக் கொண்டு ஒழுகுவோர்க்கு செல்கதியாய் நிற்பது. அணுவுக்கு அணுவாகியும் பெரியதற்கெல்லாம் பெரியதாயும் விளங்குவது. ஞானத்தால் தெளிந்த அறிவுடையோர் அதனைச் சிவம் என்று குறிப்பர்.

14. நிலைபெற்ற பராசத்தி தன்கண் நிகழும் இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தியைத் தோற்றியளிக்க அச்சத்திகளை நிமலனாகிய சிவபெருமான் மேவி எண்ணுதற்கரிய கருணையையே திருவுருவமாகக் கொண்டு சுத்த மாயையைக் கூடி, மறைகள் ஆகமங்கள் ஆகியவற்றை அருள்கின்றான். அசுத்தமாயை பிரகிருதிமாயை ஆகியவற்றோடு பொருந்தி உயிர்களுக்கு அவைத்தளின் வினைக்கு ஈடாக உடல், கருவிகள், உலகு , நுகர்ச்சிப் பொருள்கள் ஆகியவற்றைத் தந்தும் நிலைநிறுத்தியும் பின்னனர் ஒடுக்கியும் அருள் பாலிக்கவல்ல அருவம் உருவம் அருவுருவம் என்ற மூன்று திருமேனிகளையும் மேற்கொள்கிறான்.

15. நினைத்த உருவை மேற்கொண்டு நின்மலனாக விளங்கும் சிவபெருமான்:

1. இங்கு என்று சுட்டுவதையும் இவன் என்று சுட்டுவதையும் கடந்த இயல்பினன்,
2. தொடக்கமும் நடுவும் இறுதியும் ஆகிய ஒன்றும் இல்லாதவன்;

3. ஒப்பற்ற ஞானமாய் நிற்பவன்,
4. அவனது உண்மைத் தன்மை அவனருளால் அன்றிப் பிறவற்றால் அறிய முடியாதது,
5. வெறுப்பு விருப்பு இல்லாத தனிப் பரம் பொருள்,
6. உயிர்க்கு உயிராய் நீங்காது நிற்பவன்.

16. இவ்வுலகம் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்படுவது. கால எல்லையில் தோன்றி நின்று ஒடுங்குவது. ஒடுங்கிய உலகம் ஆணவமலம் பக்குவப்படுவதற்காக மீண்டும் தோற்றுவிக் கப்படும். மாறி மாறித் தோன்றுவதும் நிற்பதும் ஒடுங்குவதும் ஆகிய இந்த மூன்று தொழில்களையும் செய்வதற்கு எல்லையற்ற ஆற்றலுடைய ஒருவன் வேண்டும். அவனே சிவபரம் பொருள். மாயை அசைவற்றதும் அறிவற்றதும் ஆகையால் அதுவாகவே தோன்றுதலும் நிற்றலும் ஒடுங்குதலும் செய்யவல்லது அன்று. உயிர்கள் அறிவுடையன எனினும் தாமாக உருவெடுத்துக் கொள்ளும் ஆற்றல் இல்லாதது. வினை, மனம் மொழி மெய்களைப் பற்றியே நிற்கும். ஆதலின் அதனாலும் உருவத்தைத் தோற்றுவிக்க இயலாது. எனவே முற்றறிவும் முழு முதன்மையும் உடைய இறைவனே உயிர்கள் செய்த இருவினைக்கு ஏற்ப அவற்றிற்கு உடல் முதலியவற்றைத் தோற்றுவித்து அருளுவன்.

17. பிரமன் உலகத்தைப் படைப்பன். திருமால் காப்பன். சிவபெருமானே எல்லாவற்றையும் இறுதியில் ஒடுக்குவன். ஆதலால் பிரமனும் திருமாலும் சிவபெருமானின் ஏவல் வழி ஒழுகுபவர்களே. படைத்தும் காத்தும் ஒடுக்கியும் வருதலால் சிவபெருமான் விகாரியாகான். கதிரவன் முன்னிலையில் தாமரை மொட்டு ஒன்று அரும்பாகும், அரும்பு போது ஆகும், போது மலராகும், நேற்று மலர்ந்த மலர் வாடும். இவ்வாறு பல்வேறு மாற்றங்கள் கதிரவன் சன்னதியில் நிகழ்ந்தாலும் கதிரவன் விகாரப்படுவதில்லை. அவ்வாறே சிவபெருமானும் எல்லா உலகங்களையும் படைத்து அளித்துத் துடைத்தாலும் தான் மாறுதல் இன்றியே விளங்குவான்.

இவ்வைந்தொழில்கள் சிவபெருமானுக்கு திருவிளையாட்டு என்ன்று பெரியோர்களால் கூறப்படும். உயிர்களைத் துன்பக்கடலிருந்து எடுத்து இன்பக்கரை சேர்த்தலே இத்திருவிளை யாட்டின் நோக்கமாகும்.

18

1. ஒடுக்கம் உயிர்கள் இளைப்பாற்றுவதற் காகவும்,
2. தோற்றுவித்தல் ஆணவமலம் பக்குவப் படுவதற்காகவும்,
3. காத்தல் கன்மமலம் கழியுமாறு அதன் பயனை நுகர்விப்பதற்காகவும்,
4. மறைத்தல் உயிர்களுக்கு இருவினையொப்பு உண்டாவதற் காகவும்,
5. அருளல் உயிர்களைக் கட்டினின்றும் விடுவித்து வீடுபேறு அடையச் செய்வதற்காகவும் இறைவனால் இயற்றப்படுவனவாகும். இவ்வைந் தொழில்களும் இறைவனின் அருளே ஆகும்.

19. : **பசு இலக்கணம்.**

உயிர்கள் எண்ணிறந்தன. தோற்றமும் அழிவும் இல்லாதவை. உயிர் அறிவு அநாதியே ஆணவமலத்தால் மறைக்கப்பட்டிருக்கின்றது. ஆணவமலம் பரிபாகம் ஆதற் பொருட்டு இருவினைகளின் தன்மைக்கு ஏற்பச் சிவபெருமான் அருளாலே மாயையினின்றும் உடல் கருவி உலகு உண்பொருள் முதலியன படைத்தளிக்கப் படுகின்றன. தத்தம் வினைக்கீடாக இன்ப துன்பங்களை அனுபவிக்குமாறு செய்யப்படுகின்றன. இவற்றால் இருவினைகளை இயற்றியும் அனுபவித்தும் இறந்தும் பிறந்தும் உழலும். ஆணவமலம் பக்குவம் எய்திய ஞான்று திருவருள் பதிதலால் இருள்மலம் நீங்கி இறைவன் திருவடியை அடைந்து பேரின்பத்தைத் துய்க்கும் தகுதியைப் பெறுகின்றன என்று அருளாளர்கள் உரைப்பர்.

20. : **ஆணவமலம்** பொருளால் ஒன்று. மீளும் எண்ணுதற்கரிய ஆற்றலையுடையது. மயக்கத்தைச் செய்வதாகும். செம்பில் உற்ற களிம்பு போன்று உயிர்களின் முழு அறிவையும் மறைக்கும்.

திரோதான சத்தி: இறைவனுடைய திருவருட்சத்தி ஆணவமலம் பக்குவமாங்காறும் மலத்துடன் நின்று செயற்படும். திரோதான சத்தியை மலம் என்று உபசரித்துக் கூறுவர். இதுவே உயிர்களைப் பக்குவப்படுத்தி இறைவன் திருவடியை அடைவிக்கும். மீண்டும் அருட்சத்தியாகவே மாறும்.

21. : திருவருள் சத்தியின் அருளாலே சுத்தமாயையிலிருந்து நாதம் என்னும் தத்துவம் தோன்றும். நாதத்திலிருந்து விந்து தோன்றும். அவ்விந்து தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றும். சதாசிவத்தினின்றும் ஈசுவரம் தோன்றும். அதனின்று சுத்தவித்தை தோன்றும். முறையே இவ்வைந்து தத்துவங்களுக்கும் அதி தெய்வங்களாக சிவம், சத்தி, சதாசிவம், மகேசுவரர், உருத்திரர் என்னும் ஐவரும் நிலைபெறுவர். விந்து தத்துவத்தினின்றும் நால்வகை வாக்குகளும் உதிக்கும்.

22. **அசுத்தமாயையின் இலக்கணம்:** அசுத்தமாயையானது தனு கரண புவன போகமாய், அவை ஒன்றைப் போல் மற்றொன்று ஒத்திராத் தன்மையாகி, அழியாததாகி, அருவமாகி, உயிர்களுக்கு கன்ம அந்தம் வருமளவும் விடயங்களிலே மயக்குவதாய், சடமாய், அசைவிலாததாய், தன் காரியங்களில் வியாபிப்பதாய், ஒடுங்குகிற காலத்தில் உயிர்களின் வினைக்குப் பற்றுக்கோடாய், மலமாய்ச் சிவனருளால் நிலைபெறும்.

23-25: **மாயா மலத்தின் இன்றியமையாமை.**

23. மாயையை எதற்காக உண்டு எனக் கொள்ளவேண்டும் எனில் உலகிற்கு முதற்காரணமாக அமைவது மாயையே. சிலர் இறைவனே உலகுக்கு முதற்காரணம் என்பர். இறைவன் சித்துப்

பொருள். உலகம் சடப் பொருள். சித்துப் பொருளாகிய இறைவனில் இருந்து சடப் பொருளாகிய உலகம் தோன்றாது. மாயை முதற்காரணமாக இருக்கும் போது இறைவன் எதற்காக வேண்டும் எனில் மாயை சடம் அது தானே தனுகரணங்களாக மாறாது. தனுகரணங்களைத் தோற்றுவிப்பதற்காகச் சித்தாகிய இறைவன் வேண்டும். மாயையின்றி இறைவன் உலகைப் படையான் எனில் இறைவனின் முதன்மைக்கு இழுக்கு இல்லையோ எனில் மாயை இறைவனின் வியாபகத்தில் என்றும் உள்ள பொருள். எனவே இறைவன் புதிதாக ஒரு பொருளை முதற்காரணமாகத் தேட வேண்டுவதில்லை. இறைவனே அசித்தாகிய மாயைக் கொண்டு எல்லாவற்றையும் ஆக்குவான். ஆக்கும் ஆற்றலை அவனுக்கு மாயை தந்தன்று.

24. **கன்மமலத்தின் இன்றி யமையாமை:**

மாயையிலிருந்து உயிர்களுக்குத் தனுவாதிகளைப் படைத்தவன் பல வேறுவகையாகப் படைத்தது ஏன்? உயிர்கள் செய்த முன்வினைக்குத் தகப் படைக்கப் பட்டன. எனின் வினையே அமையுமே எனின், வினை சடம். உயிர்களே வினைக்கேற்பப் படைத்துக் கொள்ளலாமே எனின் அவை அகர்த்தா. எனவே சடமும் அகர்த்தாவும் சேரமாட்டா. இவற்றை இணைக்க அறிவுடைய கர்தத்தா ஒருவன் வேண்டும்.

25. **மலங்கள் அநாதி:** கன்மம் முந்தியா ? மாயை முந்தியா? உயிர்களின் கன்ம அனுபவத்துக்காகத் தனுவாதிகளைப் படைத்துக் கொடுக்கப்பட்டன எனின், எது முந்தியது ? கன்மா ? மாயையா ? முன்னமே ஆணவமலம் இல்லாதிருந்தாலல்லவா இக்கேள்வி எழும். முன்னமே ஆணவ மலம் உண்டு. அதனை நீக்கக் கன்மமும் மாயையும் கூட்டப்பட்டன. இது அரிசி தோன்றும் போதே உமியும் முளையும் தவிடும் உடன் இருப்பது போலும். ஆணவம், கன்மம், மாயை மூன்றும் அநாதி நித்தியப் பொருட்கள். ஆணவமலம் உயிரோடு தொன்மையே பொருந்தியுள்ளது, அதனை நீக்கப் பின்னர் கூட்டப்பட்டவையே மாயை கன்மங்கள்.

26. **அசுத்த தத்துவங்கள் தோற்ற முறை:** அசுத்தமாயையிலிருந்து கலை, காலம், நியதியும் தோன்றும். கலையிலிருந்து வித்தையும், வித்தையிலிருந்து அராகமும் தோன்றும். கலையினின்றும் மூலப்பகுதி தோன்றும். அதிலிருந்து குணதத்துவம் தோன்றும். புத்தியில் அகங்காரம் தோன்றும். அவ்வகங்காரம் தைசதம் வைகாரிகம் பூதாதி என மூவகையாம். அவற்றுள், தைசத அகங்காரத்திலிருந்து சாத்துவிக குண சம்பந்தமான மனமும் செவி முதலிய ஞானேந்திரியம் ஐந்தும் தோன்றும்.

27. வைகாரியகங்காரத்திலிருந்து கன்மேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும். பூதாதி யகங்காரத்திலிருந்து பூத தன்மாத்திரைகள் ஐந்தும், தன்மாத்திரைகளினின்றும் ஐம் பூதங்களும் தோன்றும்.

28. **கன்மமலத்தினியல்பு:**

கன்மமலம் ஆன்மாக்களெடுக்கும் உடம்புகளுக்குக் காரணமாய் பலபோதங்களைத் தருவதாய் இருக்கும். பிரவாக அநாதியுடையது. ஆன்மாவை விட்டு நீங்காதது. மனம் வாக்குக் காயங்களால் செய்யப்படுவது. புத்திதத்துவம் பற்றுக் கோடாகக் கிடப்பது. புண்ணியபாவ வடிவாய் இருப்பது. சங்காரகாலத்தில் மாயையைப் பற்றுக் கோடாகக் கிடப்பது.

29. கன்மத்தின் பயன் சாதி ஆயுள் போகம் என மூன்றுவிதமாய் வரும். பிராரத்தகன்மத்தில் உள்ளதே அனுபவத்துக்கு வரும். இல்லாதது வாராது. கன்மத்தின் பயன் முன்செய்த முறைமை இன்றிப் பக்குவமான முறைமையிலேயே பயனுக்கு வரும். பயனுக்கு வரும் வாயில்கள் ஆதிபௌதிகம், ஆதிஆன்மிகம், ஆதி தெய்விகம்.

30 இருவினைப்பயன்களை நுகருங்காலத்து அதில் வைத்த விருப்பு வெறுப்புக்களால் ஆகாமியம் உண்டாகும். ஆகாமியம் புத்தி பூர்வம் அபுத்தி பூர்வம் என இருதிறப்படும்.

31. **பிராயச்சித்த கன்மம்:** நல்வினை தீவினைகள் மனம் வாக்குக் காயங்களால் வருவனவாம். நல்வினையால் தீவினையும் தீவினையால் நல்வினையும் அழிதல் இல்லை. இரண்டும் அனுபவித்தே கழியும். ஆயினும் வேதாகமங்களின் கன்மகாண்ட முறைப்படி பிராயச்சித்தஞ் செய்தாற் பாவகன்மம் நீங்கும். பிராயச்சித்தத்தில் நீங்காத கன்மங்களை அனுபவித்தே தீர்க்க வேண்டும்.

32. **பஞ்ச மலங்கள்:** ஆணவம், திரோதாயி, மாயை, கன்மம், மாயேயம் என மலம் ஐந்து. இந்த ஐந்து மலமும் நீங்கினாலன்றித் திருவருளைப் பெறுதல் முடியாது.

அவத்தை இலக்கணம் (33 -50)

33. ஆன்மாக்கள் கேவலம் சகலம் சுத்தம் என மூன்று காரண அவத்தைகளை உறும். கேவலமாவது

1. கலாதி தத்துவங்களில் சேராதது.
2. பெயர், உருவம் இல்லாதது.
3. மலமன்றி வேறு இல்லை என இருப்பது.
4. அறிதல் நிகழாது.
5. இருளில் விழித்துக்கிடக்கும் கண்போல இருக்கும்.

34. **ஆணவமலம் உண்டு எனல்:** ஐக்கியவாத சைவர் ஆணவமலத்தை உடன்பட மாட்டார்கள். உயிர்கள் முன்னமே அறிவுடையன. செய்த வினைக்குத் தக்கவாறு இறைவன் தனுகரண புவன போகங்களை படைத்துக் கொடுத்து உதவுவன். இருவினைகளும் துலை ஒத்தபின் இறைவன் குருவடிவம் தாங்கிவந்து திருவருள் புரிவன் அதன்பின் மாயை கன்மங்கள் வந்து பொருந்தா. ஆன்மா முன்பிருந்த தன்னறிவையே பெற்று விளங்கும்.

35. ஆணவமலத்தை உடன்படவில்லை என்றால், மாயை கன்மங்கள் ஏன் வந்தன எனவும், எது முதலில் வந்தது எனவும் வினா எழும். இயல்பு என்றால் நீங்காது, முத்தியும் இல்லையாய் முடியும். கலை முதலிய தத்துவங்கள் ஆன்மாவைப் பொருந்தி

ஆன்ம சொரூபம் விளங்காதபடி மறைத்து உலகையே காட்டிநிற்கும் தத்துவங்களை நீங்குகின்ற காலத்து ஆன்ம அறிவு விளங்காதிருப்பதற்கு காரணம் அறியாமை என நீ (ஐக்கியவாதசைவர்) கூறினால், அவ்வறியாமையே **ஆணவமலம்** என அதன் உண்மை துணிந்தோர் கூறுவர்.

36. சகலத்தில் ஆன்மாவோடு சகசமாய்க் கலந்து நின்று திருவருளை அறியாதபடி செய்வது ஆணவமலமாம். மாயை கன்மங்கள் சகலத்திற் சேர்வதும் கேவலத்தில் நீங்குவதுமா யிருக்கும். ஆணவமலம் சகல கேவலங்களிலும் நீங்காதிருக்கும். திருவருள் பெற்ற சுத்தநிலையிலன்றி ஆணவமலம் உண்டென்பதை அறிய இயலாது.

37. மலமறைப்பை நீக்குதற் பொருட்டு வாக்குமுதலியன ஆன்மாவைப் பொருந்தும். திருவருளை ஆன்மாக்கள் அறிந்து பொருந்தாதபடி ஆணவமலம் மறைக்கும். மூலாதாரத்திலே விளங்கும் விந்துவிலிருந்து **சூக்குமை** வாக்குத் தோன்றும். அது ஞானமாத்திரைக் கேதுவாகியும் பிரகாசமாயுமிருக்கும்.

38. அச்சூக்குமை வாக்கு அக்கரங்கள் வேறு வேறாகப் பிரிந்து தோன்றுமுறைமை பொருந்த சிந்தையிலே நிருவிகற்ப உணர்வுக்கு ஏதுவாய் நிற்கும் பொழுது **பைசந்தி** எனப்படும். உதானவாயுவின் தொழிற்பாட்டால் அக்கரங்கள் பிரிந்து தோன்ற மெல்லோசையாய்க் கண்டத்தில் தொனிக்கும் பொழுது **மத்திமை** வாக்கு எனப்படும். மனத்து நினைந்த தொருபொருளைச் சொல்லும் சொல்லய் தன்செவிக்கும், பிறர் செவிக்குங், கேட்கத் தக்கதாய் இருவருக்கும் சவிகற்ப உணர்வை உண்டு பண்ணும் நிலையில் **வைகரி**வாக்கு எனப்படும்.

39. நான்கு வாக்குகளினாலும் சுத்தவித்தை முதலிய தத்துவ கர்த்தாக்கள் ஐவராலும் ஆன்மா அறியும் அறிவுக்குத் தக்கபடி புலனறிவு நிகழும். **கலாதி** தத்துவம் ஆணவமலத்தைச் சிறிதே நீக்கி ஆன்ம அறிவின் கிரியா சத்தியை விளக்கும். **வித்தை** ஆன்மாவின் ஞானசத்தியை விளக்கும்.

40. **அராகம்** வினைக்கேற்ப வரும் போகங்களில் இச்சையை மிகுவிக்கும். **நியதி**தத்துவம் அவரவர் செய்த கன்மங்களை அவரவரே அனுபவிக்கும்படி நிச்சயஞ் செய்து நிறுத்தும். அதன்பின் **கால**மானது உயிர்கள் போகங்களை நுகரும் பொழுது முத்திறப்பட்டு நின்று இறந்தகாலத்து எல்லையையும் நிககழ்காலத்துப் பலத்தையும் எதிர்காலத்துப் புதுமையையும் வரையறை செய்து நிற்கும்.

41. கலை முதலிய ஐந்து தத்துவங்களினாற் பந்திக்கப்பட்டுப் போகங்களில் உன்முகமாய் ஆன்மா நிற்கும் பொழுது, அவ் வான்மா **புருடத்துவம்** எனப் பெயர் பெறும். கலா சுத்தி செய்யுமிடத்து இப் புருடதத்துவம் சுத்தி செய்யப்படும்.

42. முக்குணங்களுள் சாத்துவிகமானது பிரகாசம் இலகுதை என்னும் இரண்டு குணங்களையும், இராசதமானது வியாவிருதி அடர்ச்சி என்னும் இரண்டு குணங்களையும், தாமதமானது கௌரவம் அநியயம் என்னும் இரண்டு குணங்களையும் உடையனவாம். **தமோ குணம்** விடயபோகங்களில் இச்சையை உண்டாக்கும். **இராசதகுணம்** விடயபோகங்களைப் பற்றச் செய்யும். **சாத்துவிக குணம்** அப்போகங்களை அறியச் செய்யும். புத்தி தத்துவமானது முக்குண சொரூபமாயிருந்து இந்திரியங்கள் வாயிலாக வரும் விடயங்களைப் பகுத்துணர்ந்து நிச்சயிக்கும். இது எண்ணில்லாத புலன்களிடத்தில் பலவாறாய்த் தொடர்பு கொண்டு ஐம்பது வகையான பாவகங்களைச் செய்யும்.

43. **அகங்காரம்** எனக்குச் சமமானவர் ஒருவருமில்லை என அகந்தை கொள்ளக் காரணமாயிருக்கும். **மனமா**னது இச்சையே தனக்கு வடிவாய் ஒன்றைச் சங்கற்பம் விகற்பம் பண்ணும். **சித்தமா**னது மனம் நினைந்த பொருளில் துணிவு பிறவாமல் இஃது யாதோ எனச் சிந்திக்கும். இச்சித்தம் மனத்தின் விருத்தியே அன்றித் தனித் தத்துவமன்று.

44. **ஞானேந்திரியம் கன்மேந்திரியங்கள்:** செவி, தோல், கண், நாக்கு, மூக்கு ஆகிய ஐந்தும் ஞானேந்திரியங்களும் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் ஆகிய விடயங்கள் ஐந்தையும் அறியும். கன்மேந்திரியங்களாகிய வாய், கால், கை, எருவாய், கருவாய் என்ற ஐந்தினுக்கும் முறையே பேசுதல் நடத்தல் கொடுத்தல் கழித்தல் இன்புறுதல் ஆகிய ஐந்து தொழில்களும் பொருந்துவனவாம்.

45. **பஞ்ச பூதங்கள்:** ஆகாயம் முதலிய அகப் பூதங்கள் செவி கண் நா நாசி தோல் என்னும் இந்த இடங்களில் ஞேனேந்திரியங்களுக்குப் பற்றுக்கோடாக நின்று சத்தம் முதலிய விடயங்கள் ஐந்தையும் ஆன்மா அறியும் படி செய்யும். புறப் பூதங்களுள் ஆகாயமானது மற்றைப் பூதங்கள் நான்குக்கும் இடங் கொடுத்து நிற்கும். வாயு சலித்துத் திரட்டும். தேயு சுட்டு ஒன்றுவிக்கும். அப்பு குளிர்ந்து பதஞ் செய்யும். பிருதிவி உரத்துத் தரிக்கும். இவை முறையே புறப்பூதங்களின் குணமும் தொழிலுமாம்.

46. சுத்த தத்துவம் ஐந்து. வித்தியா தத்துவம் (தத்துவம்) ஏழு. அசுத்த தத்துவம் இருபத்திநான்கு ஆகத் தத்துவங்கள் முப்பத்தாறு. தூல சரீரம் அழியும் காலத்துக் கலை முதலிய தத்துவங்களாகிய சூக்கும சரீரத்தோடு சென்று சுவர்க்கம் நரகம் முதலிய இடங்களிற் பூதசார சரீரம் முதலிய உடம்புகளை எடுத்து நல்வினை தீவினைப் பயன்களை அனுபவித்து, மறுபடியும் இப்பூமியில் வந்து பூதபரிணாமமாகிய தூலவுடம்பை எடுக்கும்.

47. அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றங்களையுடைய எழுவகைப் பிறப்புக்களிலே தாவரங்கள் பத்தொன்பது நூறாயிரம் பேதமாம்; ஊர்வன பதினைந்து நூறாயிரம்; தேவர்கள் பதினொருநூறாயிரம்; நீர்வாழ்வன பறவை மிருகம் என்பன ஒவ்வொன்றும் பத்துப் பத்துநூறாயிரம்; மானுடர் ஒன்பது நூறாயிரம். இங்ஙனம் யோனிபேதம் எண்பத்து நான்கு நூறாயிரமாம்.

48. பல பிறவிகளிலே பிறந்திறந்து நல்வினை தீவினைகளைச் செய்து இன்பத்துன்பங்களை அனுபவித்து வரும் நிலை **சகலாவத்தை**யாகும். இருவினைப் பயன்களும் அனுபவத்திற்கு வரும் பொழுது இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதும் நிலையாகிய இருவினை ஒப்பு வருங்காலம் திரோதான சத்தி திருவருட்சத்தியாக மாறிப் பதியும்.

49. சத்திநிபாதம் பொருந்தும் முறை பக்குவத்திற்கேற்ப மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என நான்குவிதம். அவற்றுள் தீவிரதரப் பக்குவர்க்குப் பரமசிவன் குருமூர்த்தியாய் எழுந்தருளிவந்து கேவல சகலங்கள் நிகழாதபடி நிறுத்தி மலத்தை நீக்கியருளுவர். இது **சுத்தாவத்தை** எனப்படும். சரியை கிரியா யோகங்களைச் செய்த புண்ணியப் பேறடைந்தோரே இந்நான்கு சத்திநிபாதத்துக்கும் உரியவராவர்.

50. **முத்தி நிலை:**

இம்மையிலே அரிவையரோடு அனுபவிக்குஞ் சிற்றின்ப போகமே முத்தி, பஞ்ச கந்தங்களும் அறக் கெடுதலே முத்தி, முக்குணங்களும் அடங்குதலே முத்தி , சரீரம் நித்தியமா யிருப்பதே முத்தி, பிரகிருதியையும் புருடனையும் விவேகித்தறிதலே முத்தி, அட்டசித்திகளே முத்தி, ஆன்மா கல்லுப்போல் கிடப்பதே முத்தி என்று பலவாறாக உலகாயதர் முதலியோர் சொல்லும் முத்திகளெல்லாம் குற்றம் பொருந்திய முத்திகளாம். மும்மலங்களும் நீங்க ஆன்மா சிவத்தினைக் கூடும் முத்தியே நிலைபெற்று விளங்கும் முத்தியாகும்.

51. பொதுவதிகாரத்திற் கூறிய ஐம்பது செய்யுளும் பசு பதி பாசங்களின் பொதுவியல்பைக் கூறினவாம்.

இனி, 1.ஆன்ம விலக்கணம், 2. ஐந்தவத்தைகளின் தன்மை, 3. உணர்த்துந் தன்மை, 4.ஞானவாய்மை, 5. ஞானத்தின்பயன், 6. ஐந்தெழுத்துண்மை,7. அணைந்தோர் தன்மை என்னும் இவற்றை அருள்வழிநின்று கூறுவாம்.

1. ஆன்மவிலக்கணம்.

52. ஆன்மாவானது இத்தூலதேகத்தில் இலாடத் தானத்தைப் பொருந்தி நின்று கன்மத்துக்கீடாக வரும் விடயபோகங்களை அனுபவிக்கும். அங்ஙனம் அனுபவிக்குந் தன்மையும் அனுபவிக்குமாறு செலுத்தி நிற்குந் திருவருளையும் உணரமாட்டாது. அவ்வாறு அறியும் தன்மை நீங்கிச் சாக்கிரம் சொப்பனம் முதலிய ஐந்தவத்தையை ஆணவமலத்தின் செயலாற் பொருந்தி, மூலாதாரத்திற் கருவிகள் ஒன்றுமின்றித் தான்மாத்திரமாயிருக்கும். இவ்வாறு சகலகேவலப்படுதல் ஆன்மாவுக்கு இயல்பாம்.

53. உடம்பு சடமாகையாலும், இந்திரியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விடயங்களை மட்டுமே அறிதலாலும் அந்தக் கரணங்கள் எல்லாம் கூடி ஒருவிடயத்தை அறிதலாலும், பிராணவாயு சடமாதலாலும், விடயங்களை அறிவது ஆன்மாவாம். அவ்வான்மா சிவன் அறிவிக்க அறியும்.

54. ஆன்மா தானே அறியும் எனில் கருவிகள் தேவை இல்லை. ஆன்மா அறியும் தன்மை இல்லாததெனில் அறிவிக்க வேண்டுவது இல்லை. கருவிகள் ஆன்மாவுக்கு அறிவைக் கொடுக்குமெனில் அவை அறிவில்லாதன. இறைவனே ஆன்மாவுக்கு அறியுந்தன்மையைக் கொடுப்பன் எனில் ஆன்மா அறிவில்லாத சடப்பொருளாக வேண்டும். இறைவன் இயல்புக்கு மாறாக அசேதனப் பொருளின் தன்மையைக் கெடுக்கமாட்டார். ஆதலால் ஆன்மா இயற்கையிலேயே அறிவுடைப் பொருளாம்.

55. சுட்டறிவினால் அறியப்பட்ட பொருள்களெல்லாம் அசத்தாய் அழிந்து போவனவாம். ஆன்ம அறிவு கருவிகளோடு கூடி அதனதன் வண்ணமாய் நின்று சுட்டி அறியும் விடயங்களே அசத்தாம். சிவம் ஆன்ம அறிவினால் அறியப்படாது.

56. அசத்தை அசத்து என்று அறிந்தது எது? எனில் அறிவித்தாலன்றி அறியமாட்டாத உயிர் தானாக அதனை

அறியமாட்டாது. முற்றறிவுடைய சிவன் அதனைச் சுட்டி அறிய வேண்டுவதில்லை. கருவிகள் சடமாதலால் அவைகளும் அறியமாட்டா.உயிரும் பாசங்களும் கூடி அறியமாட்டா. பாசமும் சிவமும் கூடி அறியமாட்டா.

57. அசத்தாகிய பாசம் சடமாகையாற் சத்தாகிய சிவத்தை அறியமாட்டாது. சத்தாகிய சிவம் வியாபக அறிவாதலான் அசத்தாகிய பாசத்தைப் பகுத்தறியாது. சத்தும் அசத்துமாகிய இரண்டினையும் அறியும் இயல்புடையது இவற்றின் வேறாய ஆன்மாவாம். இவ்வான்மா திருவருளோடு கூடி முத்திநிலையிலே சத்துடன் நின்று அசத்தை நீங்குந் தன்மையாற் **சதசத்து** எனப்படும்.

58. விளக்கொளி கண்ணிற்கு ஒளியைக் கொடுத்துப் பொருள்களைக் காட்டும் எனக் கொண்டால் கண்ணுக்கு ஒளி இல்லை என்றாகும். பொருள்களின் மீது படிந்த விளக்கொளியைக் கண்ணொளி அவற்றின்றும் அகன்று நின்று காணும். ஆயினும் விளக்கு இல்லாதவிடத்துக் கண்ணொளி தானே தனித்து நின்று காணும் ஆற்றல் உடையதன்று. கண்ணின் ஒளியும் விளக்கின் ஒளியும் கூடின போதும் அவை இரண்டும் ஒரேபொருள் அன்று. கண்ணொளி காணும்; விளக்கொளி காட்டும்; இரண்டும் தனித்தனிப் பொருள்கள்.

59. ஆன்மா தேகத்தில் ஓரிடத்திருந்து அறியும், தேகம் முழுவதும் நிறைந்து நின்று அறியும், எவ்விடத்தும் வியாபியாய் நின்றறியும், அறிவிக்க அறிதலின்றித் தானே அறியும் , மனம் முதலிய கருவிகள் அறிவைக் கொடுக்க அறியும் என்று பலவாறு ஆன்ம அறிவின் இயல்பு உணராதவர் கூறுவர். தன்னை அடுத்த பொருளின் நிறங்களையே தன்னிறமாகக் கொண்டு காட்டும் படிகம் போலச் சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியும் இயல்புடையது ஆன்மா.

2. ஐந்தவத்தை இலக்கணம்.

60. கீழாலவத்தையிலே நிகழும் துரியாதீதத்திற் கருவிக ளொன்றுமின்றிப் புருடன் மாத்திரமிருக்கும். துரியத்திற் பிராணவாயு புருடனைப் பொருந்தித் தொழிற்படும். சுழுத்தியில் அதனோடு சித்தமும் பொருந்தித் தொழிற்படும். சொப்பனத்தில் அவற்றோடு சத்தாதி ஐந்தும், வசனாதி ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் மூன்றும், வாயுக்கள் ஒன்பதும் பொருந்தித் தொழிற்படும். சாக்கிரத்தில் அவற்றோடு ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் பொருந்தித் தொழிற்படும்.

61. மேலே கூறிய ஐந்தவத்தைகளிலும் தொழிற்படுங் கருவிகளெல்லாம் இலாலாடத்தானத்திலே ஐந்தவத்தையையும் பொருந்தி விடயங்களைக் கிரகிக்கும் முறைமையை அறிந்து, அவ்விடயத் தோற்றரவுகள் ஒழியும்படி ஞானாசிரியர் உபதேசித்த முறைப்படி சாதனை செய்துவரின், அவ்விலாடத்தானத்திலே நின்மலசாக்கிரம் முதலிய ஐந்தவத்தைகளும் நிகழும்.

62. காரிய கேவலத்திலே துரியாதீதமானது காரண கேவலத்தின் தன்மையை ஒக்கும். காரண சகலத்திற் சாக்கிரமானது காரண சகலத்தின் தன்மையாயிருக்கும். காரிய சுத்தத்திற் சாக்கிராதீதமானது பரமுத்தியான சுத்தாவத்தையின் தன்மையதாயிருக்கும்.

3. உணர்த்தும் தன்மை.

63. ஆன்மா ஒரு புலனை நுகரும் பொழுது ஐம்பொறிகளிலொன்றும், பஞ்சபூதங்களிலொன்றும், அந்தக் கரணங்கள் நான்கும், கலாதிகள் ஐந்தும் ஆகிய பதினொரு தத்துவங்களையும் பொருந்திநின்று, அவற்றின் உதவியால் நுகரும். இந்த முறைமையிலன்றி ஆன்மா ஒன்றையும் அறியமாட்டாது. ஆன்மா இல்லாமல் அத்தத்துகங்களுந் தொழிற்படமாட்டா.

64. உணர்த்தினாலன்றி உணரமாட்டா உயிர் தானே அறிந்து கருவிகளைப் பொருந்தமாட்டாது. தத்துவங்கள் சடம் அவை தானே உயிரைப் பொருந்தமாட்டா. உயிர் சார்ந்ததன் வண்ணமாந் தன்மை உடையது. இயற்கை உணர்வினனாகிய முதல்வன் அக்கருவிகளைக் கூட்ட, அவன் செயலால் அக்கருவிகளோடு கூடி நின்று ஆன்மா போகங்களை நுகரும்.

65. ஐம்பொறிகள் வாயிலாக வரும் புலன்களை ஆன்மா மனத்தைத் துணைக் கொண்டு அவற்றை அறியுமாறு போல, ஆன்மாவும் சிவஞானத்தைத் துணையாகக் கொண்டு புலன்களை அறியும் எனின், ஆன்மாவே கருத்தாவாகும். சிவனுடைய ஞானம் ஆன்மாவிற் பொருந்தி நின்று ஆன்மாவுக்காக அறியும் என்னில், பசியினாலுண்ணவேண்டிய ஒருவனுக்காக மற்றொருவன் உண்டதுபோல முடியும். ஆகையால் சிவன் அறிவிக்க ஆன்மா விடயங்களை அறியும்.

66. இராக்காலத்திலே மறைத்து நின்ற இருளைச் சூரியன் உதித்து நீக்கிய பொழுது மக்கள் உலகப் பொருள்களைக் கண்டு அறிவர். அவ்வாறு கண்டு அறிதல் சூரியனது உபகாரத்தால் என நினையார். அது போல கேவல மறைப்பிலிருந்த உயிர் கலையாதி கருவிகளால் அவ்விருள் நீங்கப் பெற்றும் திருவருளின் உபகாரத்தை மறந்து தன் செயலால் அறிவதாகக் கருதும்.

67. அந்தக்கரணங்களும் ஐம்பொறிகளும் ஆன்மாவினது உதவியால் விடயங்களை எப்பொழுதும் அறியும். அப்படி ஆன்மாவினால் அறிகின்றோம் என்பதை அவற்றில் ஒருகருவியும் அறியமாட்டாது. அதுபோல ஆன்மாக்களும் சிவன் அறிவிக்க யாவற்றையும் அறியும். சிவனால் அறிகின்றோம் என்பதை அறியமாட்டா. கன்ம அனுபவத்தை ஊட்டுபவன் சிவனே ஆகும்.

4. ஞானவாய்மை:

68. கருவிகள் இல்லையாயின் ஆன்மா ஒன்றையும் அறியவியலாது. இக்கருவிகளாலே உண்மை ஞானம் உதிக்கவுமாட்டாது. பிறவிகள் தோறும் ஈட்டிய தவத்தினாலே சிவபெருமான் குருவடிவம் தாங்கி வந்து உண்மை ஞானத்தை உணர்த்தி இக்கருவிகளை நீக்கித் திருவடி நீழலை அடையும்படிந் செய்வன்.

69. படிகமானது தன்னை அடுத்த பலபொருள்களின் நிறங்களையும் தன்னிறமாகக் கொள்ளும்படி செய்வதும், அந்நிறங்களை விட்டுத் தனது சொந்த நிறத்தையே கொள்ளும்படி செய்வதும் ஆதித்தனுடைய ஒளியேயாகும். அப்படிச் செய்யும் ஆதித்தனுடைய ஒளி அவற்றின் தன்மைகளைப் பொருந்தமாட்டாது. அதுபோல சடமும் சித்துமாகிய பொருள்களைக் காரியப்படுத்தும் சிவம் அத்தன்மைகளைத் தான் எய்தாது.

70. மாயை கன்மங்களோடு கூடிய ஆன்மாவின் மருள் நிலையிற் சிவஞானம் வெளிப்படாது மறைந்து நிற்கும். அவற்றின் இயல்புகளை அறிந்து நீங்கிய அருள்நிலையில் அது வெளிப்பட்டுப் பிரகாசமாய் நிற்கும்.

5. ஞானவாய்மையின் பயன்:

71. ஆன்மா ஞானத்தை அடைதலினால் வரும் பயன் ஆன்மதரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்மலாபம் என மூன்றாம். அவை ஞானதரிசனம், தான் பணியை நீத்தல், ஞேயத்தழுந்தல் என்னும் இவற்றில் அடங்கும்.

72. ஆன்மா, கருவிகள் வாயிலாகப் போகங்களை நுகரும் பொழுது, தன்னறிவுகொண்டு அறிந்ததாகவே கருதி ஒவ்வொன்றையும் அனுபவிப்பன். சிவனருளாலே அவ்வருளை

அறிந்தால், தனது அறிவானது கருவிகளோடு கூடி நின்று விடயங்களை அறியும் முறைமையையும், ஆன்மாவாகிய தனது இயல்பையும், அவ்வருளோடு கூடி வேறறநின்று அவ்வான்மாவே தரிசிக்கும்.

73. தத்துவங்களைச் சடம் என்று அறிவது சிவஞானத்தின் உபகாரத்தலாம். அப்படி அறிகின்ற பொழுது ஆன்மா தற்போதம் விட்டு நீங்க அந்த ஞானமேயாய்ச் சுத்தியடையும். சுத்தியடைந்த பொழுது ஞானத்துக்கு முதலாகிய ஞேயம் தோன்றும்.

74. ஒளியானது அதன் முதலாகிய ஆதித்தனையன்றி நில்லாதவாறுபோல, சிவத்தையன்றி அருளும் நில்லாது. ஆகையால் நின்மலராகிய சிவம் முதலாம். அவரிடத்து விளங்கும் அருள் அவரது சத்தியாம்.

75. அந்தச் சத்தியானது ஞானப்பிரகாசமா யிருக்கும். சிவமின்றி அந்தச் சத்தி தனித்து ஒரு முதலாய் நிற்க மாட்டாது. அச்சத்தி ஆன்மாவைப் பந்தித்த மும்மலங்களையும் வாட்டிச் சிவத்தை ஆன்மாவுக்குத் தரிசிப்பிக்கும்.

76. பேய் பிடித்தவனிடத்திலே பேயின் குணமுந் தொழிலுந் தோன்றினாற்போலச், சிவனருளைப் பெற்ற ஆன்மாவிடத்திலே சிவனுடைய முற்றறிவு முதலிய குணங்களும், பஞ்சகிருத்தியமும் உண்டாகும் என்பது (சிவசமவாதிகள் கூற்று) பொருந்தாது.

77. குருடனாயும் ஊமையாயும் முடவனாயுமிருக்கும் ஒருவனைக் கண்ணும் வாயும் காலும் குறைவற்றிருக்கும் ஒருபேய் பிடித்தவிடத்து, அவன் ஒன்றைக் காணவும் பேசவும் நடக்கவுஞ் செய்யாது, அவனிடத்து உள்ளதையே விளங்கச் செய்யும். அதுபோல, ஆன்மாவினிடத்துப் பொருந்திய அருளானது அவ்வான்மாவின் அறிவிச்சை செயல்களையே விளக்கி நிற்கும்.

78. கலாதி தத்துவங்களால் வரும் ஏகதேச அறிவின் இயல்பை உணர்ந்து, அவ்வேகதேச அறிவுக்குக் காரணமான மலங்கள் நீங்கப் பெற்ற அருள் நிலையில், அம் மலங்களின் வாசனை தாக்காதபடி அவ்வருள் வியாபகத்துள்ளாக ஆன்மா அடங்கிச் சிவத்தோடு ஏகனாகி நிற்பின், அதன் வியாபக அறிவு விளங்கித் தோன்றும்.

79. பெத்தநிலையில் ஆன்மாக்கள் மலமறைப்பினால் வியாபகமாகிய தமது சொரூபத்தை அறியாதிருந்தன. சுத்தநிலையிலும் திருவருளின் உபகாரத்தால் தமது வியாபக அறிவு விளங்கும் படி காணாராயின், பரமசிவனது திருவடியைப் பெறுதற்கு ஏதுவாகிய சிவஞானத்தை அறிதலுமில்லை, அத்திருவடியைக் கூடுதலுமில்லையாம்.

80. சகல கேவலப் படாமலும், தற்போதச் சேட்டையின்றியும், சிவத்தோடு ஏகனாகி நிற்றல் சாக்கிராதீதமாம்.

81. கருவிகள் தாமாகவே அடங்கா. தற்போதத்தால் அடக்கலாமெனில், போதம் அடங்காது நிற்கும். கருவிகள் அடங்கவே போதமும் அடங்கு மெனின், உள்ள சிற்றறிவுங் கெட்டுக் கேவலம்வந்துமூடும். ஆகையால், கருவிகளைத் திருவருளில் ஒடுக்கினாலன்றி அவை ஒடுங்காவாம்; சிவனையும் அறிந்து அனுபவிக்க இயலாதாம்.

82. புலன் அறியும் காலத்து ஆன்மா, விடயங்களில் ஒன்றைப் பொருந்தி சுட்டி அறிதல் ஆன்மபோதத்தின் இயல்பு. பகற்காலத்தில் எரியும் விளக்குப்போல அப்போதஞ் சீவியாது ஒழியப்பெறின், ஆன்மா சிவத்தை அடையும். அதனாற் பிறப்பினையும் அறுக்கலாம்.

83. கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என ஞானம் நான்குவகை. இந்த முறையிலேநின்று கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடினவர்களே முத்தியைப் பெற்றவராவர்.

84. பாசஞானத்தினாலும் பசு ஞானத்தினாலும் சிவனை அறிதல் இயலாது. சிவஞானத்தைப் பொருந்தி, அதன் உபகாரத்தாலே தற்போதம் நீங்கி, அந்த ஞானத்துக்கு மேலான சிவத்திலே அத்துவிதமாய்க் கலந்து, அன்புசெய்து, சிவானந்தம் அனுபவித்து நிற்பது ஞானநிட்டையாம்.

85. முன்சொன்ன முறையிலே நிட்டை கூடுதல் அரிதாயின், முதல்வனது அத்துவித நிலையை மறவாது பத்தி செய்தலால், அவன் திருவடியைக் கூடுதலாகிய நிட்டை கைகூடும்.

86. பாவனைகளாற் சிவனையடைதல் அரிது. சிவத்தினது அருளைப்பெற்ற அடியாருக்கு ஒருபாவனையும் வேண்டியதில்லை. அவ்வருளே சிவத்தை அடைவிக்கும்.

87. முத்திநிலையில் ஆன்மாவும் சிவமும் ஒன்றாய் விடுமெனின், ஆன்மா சிவத்தின் இயல்புடையதாகவேண்டும். அப்படி இல்லாமையால் அது பொருந்தாது. சிவமும் ஆன்மாவும் முத்திநிலையில் ஒன்றாகும் எனில் ஆன்மா அழிவெய்தும் எனப்படும். அஃதும் பொருந்தாது. சிவமும் ஆன்மாவும் ஒன்றாதலில்லை எனில் முத்தி என்பது கூடாது. தீயிற் பொருந்திய இரும்பைப் போலச் சிவத்திற் பொருந்திய ஆன்மா சிவத்தின் குணங்களைப் பொருந்தப் பெறுமெனின், ஒரு பொருளின் குணம் மற்றொரு பொருளுக்கு வருதலில்லையாம். வருமெனின், சிவனுக்குரிய ஐந்தொழில் ஆன்மாவிடத்துங் காணப்படவேண்டும். ஆகையால் இவையெல்லாம் பொருந்துவன அல்ல.

ஆன்மா சித்தோடு பொருந்தி நின்று சிவானுபவத்தைப் பெறும் முத்திநிலைக்கு உவமை கூறின், ஆன்மா பெத்தநிலையில் ஆணவமலத்தைதோடு பொருந்திநின்றது எப்படியோ அப்படியேயாம்.

88. ஆணவமலம் முத்திநிலையில் அழியும் எனின் அது நித்தம் என்பது பொருந்தாது. முத்தியில் அழியாது எனில் ஞானம்பொருந்தமாட்டாது. உண்மை எப்படிஎனில், மலம் நித்தமாயிருக்க அதன் சத்தியே வலி அழியும் என்பதாம்.

89. சஞ்சிதவினை வறுத்தவித்துப் போல ஞானாசிரியனது திருநோக்கால் நீங்கும். பிராரத்தவினை அனுபவத்தினால் ஒழியும். பிராரத்தப் பயனை நுகரும் பொழுது வரும் ஆகாமியவினை ஒளிமுன் இருள் போல ஞானத்தால் அழியும்.

6. புனிதன் நாமம்:

90. மலம் நீங்கிய முத்தரிடத்தும் இவ்வுடல் உள்ள அளவும் பிராரத்தவினை மெலிதாய் வந்து தாக்கும். ஞானாசாரியர் உபதேசப்படி ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உச்சரிப்பவரை அவ்வாதனைகள் தாக்கவும் மாட்டா; ஆகாமியமும் ஏறாது.

91. சூக்கும பஞ்சாக்கரத்திலே திரோதமும் மலமும் ஒருபுறமாகவும், அருளும் சிவமும் மற்றொரு புறமாகவுஞ் சூழ்ந்துநிற்க, இவற்றின் நடுவே நிற்பது ஆன்மாவாம். விடயபோகங்களில் வெறுப்புண்டாகி முத்தியில் விருப்பமுடையோருக்கு முத்திப்பஞ்சாக்கரத்தை உபதேசிக்கலாம்.

92. ஆணவமலமும் திரோதானமும் நீங்கும் பொருட்டுச் சூக்கும பஞ்சாக்கரத்தைச் செபிக்கவேண்டும். அங்ஙனம் செபித்தலினால் திரோதானசத்தி மலத்தை நீக்கி அருட்சத்தியாய் மாறி நின்று பிரகாசிக்கும். பின்பு, ஆன்மா அவ்வருள் தாரகமாக அதனில் அடங்கி அதுவே யாய்ச் சிவத்தோடு ஏகமாகும். **பஞ்சாக்கர மகிமை** இதுவாம்.

7. அணைந்தோர் தன்மை:

93. சீவன்முத்தர் மும்மலங்களும் நீங்கப் பெற்றுத் தான் பணிநீத்துச் , சிவத்தோடு ஏகமாகி நின்று, பேரானந்தத்தை அனுபவிப்பர் .

94. சீவன்முத்தர் முன்புள்ள நியமங்களைச் செய்வதுமில்லை, தாமாக விடுவதுமில்லை; அவர் சிவமாகிய மெய்ப்பொருளொன்றையே கண்டுகொண்டிருப்பர்; ஏனைய நியமங்களெல்லாம் தாமாக ஒழிந்துபோம்.

95. சீவன் முத்தர் திருவருளை எங்கும் ஒருதன்மைத்தாகக் கண்டு, அவ்வருளே தமக்கு வடிவாய்ப் பிராரத்த வினைக் கீடாக நிகழ்வனவெல்லாம் நிகழ, அவற்றால் தாக்கப்படாது, சிவத்திலே ஏகமாகிப் பேரானந்தமுற்றிருப்பர்.

96. சராசரங்களனைத்திலும் திருவருள் கலந்து வியாபகமாய் நிற்றலால், தனக்கு எதிர்ப்படும் பொருள்களை அத்திருவருள் வடிவாகக் காணில் ஆன்மாவும் அவ்வருள் வடிவாகி அந்த ஞானநிலையை அடையும்.

97. பிரபஞ்சப் பற்றை விட்டு, அருள்வழிநின்று, நிகழ்வன வெல்லாவற்றையும் அவ்வருட் செயலாகக் கண்டு, பஞ்சாக்கரமோதி, முதல்வனது அத்துவித நிலையை நினைந்து துதித்தல் ஞானபூசையாம்.

98. சீவன் முத்தர் சிவனடியார்களையும் சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளையும் சிவமென்று கண்டுவணங்கிக் கண்களில் ஆனந்த அருவி சொரிய நாத் தழுதழுப்ப உரை தடுமாற ஆனந்த வெள்ளத்துள் அமிழ்ந்து அச்சிவமொன்றையே தரிசித்திருப்பர்.

99. **நூலில் கூறப்பட்ட பொருள்:** உலோகாயதம் முதற் சிவாத்துவிதசைவ மீறாகிய சமயத்தவராற் கொண்டாடப்படாத கோட்பாடுகளை யுடையதாய், வேதாந்தமாகிய உபநிடதங்களின் உண்மைப் பொருளாய், பேரின்பத்தை விளைவிப்பதாய், சற்காரியவியல்பு கூறுவதாய், மலைவற்றிருக்குஞ் சைவ சித்தாந்த உணர்வாற், பெத்த முத்தி நிலைகளை இந்நூலிற் சொன்னோம்.

100. **நூலை உபதேசிக்கும் முறை** : கூறப்படும் பொருள்களை ஆசாரியன் ஏதுக்களாலும், உவமைகளாலும் நிச்சயித்து, மலைவறக் கொள்ளும் பரிபக்குவமுடைய மாணவனுக்கு, இந்நூலைத் திருவருள் கொடுத்துக் கூறலாம்.

குறிப்பு:-

இங்ஙனம் வரும் சிவப்பிரகாசத் திருவிருத்தங்கள்ளை நோக்கினால் சிவப்பிரகாசத்தில்

1. **சிவஞானபோதத்தைப் போல் சூத்திரப் பாகுபாடோ நூலமைப்போ இல்லை என்பது புலனாகும். ஆனால்**

2. **சிவஞானபோதக் கருத்து முழுவதும் இத்திருவிருத்தங்களில் குறைவின்றி விளக்கப்பட்டிருக்கிறது**

என்பது புலனாகும்.-

-ஆசிரியர்.

சிவப்பிரகாசத்தில் உள்ள நூறு திருவிருத்தங்களின் பொருளையும் எழுதியவர் அன்பர் 'சித்தாந்தச் செல்வர்' **சு. மாணிக்கவாசகம்** அவர்கள்.

-ஆசிரியர்.

பிற்சேர்க்கை 1 (பக்கம் 110 அடிக்குறிப்பு)

சுவாமிநாத தேசிகர் தசகாரியம் 22 ஆம் பாடல்:

மூன்று நான்கு ஏழு மூன்றினன்றாய் முடிந்தபின் இரண்டிரண்டே
மூன்று நான் மூன்றினன்றாய் முடிந்த பின் இரண்டிரண்டே
ஏன்ற நான்கு ஈறுதாமே இவை ஈராறிலக்கத்துள்ளே
ஏன்ற முப்பான் ஒன்பானை எனக்கரன் இரங்கினானே.

என்பது.

இப்பாடல் சிவஞானபோதத்தில் அமைந்துள்ள சூர்ணிக் கொத்தின் தொகையினைக் கூறுகின்றது. சூர்ணிக் கொத்து அருளியவரும் சுவாமிநாத தேசிகரே என்று கருதப்படுகிறது. சூர்ணித் தொகை என்பதும் அதிகரணத் தொகை என்பதும் ஒன்றே. அதிகரணத்தில் மேற்கோள் வாக்கியத்தில் உள்ள கருத்தைச் சுருக்கமாக ஒரு வரியில் சூர்ணி கூறுகிறது.

இப்பாடலின் பொருள்:

மூன்று - முதற்சூத்திரத்தில் சூர்ணிகள் -3
நான்கு - இரண்டாஞ் சூத்திரத்தில் சூர்ணிகள் -4.
ஏழு - மூன்றாஞ் சூத்திரத்தில் சூர்ணிகள் 7
மூன்றே - நான்காஞ் சூத்திரத்தில் சூர்ணிகள்-3.
முடிந்தபின் - இங்ஙனம் நான்கு சூத்திரங்களும் கூறி முடிந்தபின்

இரண்டிரண்டே - ஐந்தாஞ் சூத்திரத்திலும் ஆறாஞ் சூத்திரத்திலும் சூர்ணிகள் ஒவ்வொன்றிலும் -2
(இரண்டிரண்டே = இரண்டு, இரண்டு)
மூன்று - ஏழாஞ்சூத்தரத்தில் சூர்ணிகள் - 3.
நால் - எட்டாஞ் சூத்திரத்தில் சூர்ணிகள் 4.

மூன்றின் - ஒன்பதாஞ் சூத்திரத்தில் சூர்ணிகள் 3.

நன்றாய் முடிந்தபின் - இங்ஙனம் ஒன்பதாஞ் சூத்திரம்வரையில் நன்றாய்ச் சொல்லி முடிந்த பிறகு;

இரண்டிரண்டே - பத்தாஞ் சூத்திரத்திலும் பதினொராஞ் சூத்திரத்திலும் இரண்டிரண்டு சூர்ணிகள்.

ஏன்ற - ஏன்று கொள்ளப்பட்ட

என்று கொள்ளுதலாவது உடம்பட்டுக் கொள்ளுதல்.

நான்கு ஈறதாமே - இறுதியாக உள்ள பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் சூர்ணிகள் 4.

ஈறு- இறுதி- இறுதி சூத்திரம். தாம், ஏ, அசை.

இவை - இத்தொகை பெற்ற சூர்ணிகளாகிய இவை

ஈராறு இலக்கத்துள்ளே- பன்னிரண்டு என்னும் தொகை பெற்ற சூத்திரங்களை உடைய சிவஞான போதம் என்னும் நூலினுள்;

முப்பான் ஒன்பானை - முப்பத் தொன்பது என்னும் தொகையினை யுடைய சூர்ணிகளை

முப்பான் - முப்பது.

மூன்று + பத்து = முப்பான் எனவரும்.

ஒன்பான் - ஒன்பான் - ஒன்பது -

அதாவது முப்பதும் ஒன்பதும் ஆக முப்பத் தொன்பது.

எனக்கு - வீடு பெறவேண்டும் என்னும் வேட்கை மிக உடைய எனக்கு;

அரன் - சிவபெருமான்;

இரங்கினான் - கருணையுடன் உணர்த்தியருள் செய்தான்.

வீடு பெற வேண்டும் என்னும் வேட்கை மிக உடையவர்க்குப் பன்னிரண்டு சூத்திரங்களும் அச் சூத்திரங்களுக்குள் முப்பத்தொன்பது சூர்ணிகளும் கொண்ட சிவஞானபோதம் என்னும் நூலினை இறைவன் ஆக்கியருளினான் என்பது கருத்து.

இனி இப்பாடலுக்கு ச. தண்டபாணிதேசிகர் எழுதிய உரை வருமாறு:

மூன்று நான்கு ஏழு மூன்றே முடிந்தபின் – பசு உண்மையும் பசு இலக்கணமும் சாதிக்கும் பொருள் இயல்புமாகிய மூன்றும் கைவந்த பிறகு;

இரண்டிரண்டே – இதுவரை அத்துவிதமாயிருந்த பசுவும் பாசமுமாயிருந்த இருபொருளும் பிரிந்து வேறாயே உணரப்படுவதாம்;

மூன்று நான்மூன்றின் அன்றாய் முடிந்தபின் – மூன்றாம் சூத்திரத்தான் உணர்த்தப்படும் பசு நான்கு மூன்று ஆகிய சூத்திரங் களான் உணர்த்தப்படும் இலக் கணத்தது அன்றாய்ப் பசுவைச் சார்ந்து முற்றுப் பெற்ற பின்பு

இரண்டிரண்டே – பதியை அறிந்து அறிவானும் அறியப்படும் பொருளுமாகிய இரண்டாய் விளங்கும்;

ஏன்ற நான்கு ஈறுதாமே – பொருந்திய நான்காம் இயலின் ஈறாகிய சீவன் முத்தி நிலையை;

ஈராறு இலக்கத்துள்ளே – பன்னிரண்டு சூத்திரங்களுக்குள்;

முப்பான் ஒன்பானை – முப்பத்தாறு தத்துவங்களையும் அவற்றின் முதலாகிய பதி, பசு, பாசம் என்ற மூன்றையும்;

எனக்கு அரன் இரங்கினானே – எனக்குச் சீபரமேசுவரன் மனமிரங்கி அருளிச் செய்தான் என்றவாறு.

பசு தன்னை உணர்ந்த பிறகு பாசத்தின் வேறாய்த் தன்னையும் பாசத்தையும், பதியைச் சார்ந்த பிறகு பதியையும் தானுமாய் இரண்டாயும் இருந்து, மறுபடியும் வாதனை தாக்கி மலத்துள் அழுந்தாதவாறு நான்காம் இயலின் இறுதிக் கண்ணதாகிய சிவவழிபாடும் சிவனடியார் வழிபாடும் செய்து விளங்குக என்று பன்னிரண்டு சூத்திரத்துள் முப்பத்தொன்பது பொருளை எல்லாம் வல்ல இறைவன் எனக்கு அருளிச் செய்தான் என்பதாம்.

இவ்வுரையாளர் இப்பாடலில் மூன்று, நான்கு, ஏழு என்பவற்றுக்கு மூன்றாஞ் சூத்திரப் பொருள், நான்காஞ் சூத்திரப் பொருள், ஏழாஞ் சூத்திரப் பொருள் என்று பொருள் கொண்டார்.

மூன்றாஞ் சூத்திரம் - பசு என்பதொரு பொருள் உண்டு எனக் கூறுகிறது.
நான்காஞ் சூத்திரம் - அப்பசுப் பொருளின் பொது விலக்கணம் உணர்த்துகின்றது.
ஏழாஞ் சூத்திரம் - அப்பசுப் பொருளின் சிறப்பிலக்கணம் கூறுகின்றது.

இவ்வுரைமேல் எழும் ஐயங்களும் வினாக்களும்:

1. முடிந்தபின் என்பதற்கு - இம்மூன்றும் கைவந்த பிறகு என்று உரை கூறப்பட்டுள்ளது.

இதற்கு இது உரையாகுமா ?
உரை என்றே வைத்துக் கொள்வோம்.

2. இரண்டிரண்டே என்பதற்கு இருபொருளும் பிரிந்து வேறாய் உணரப்படுவது என்று உரை கூறப்பட்டுள்ளது.

இதற்கு இரண்டிரண்டு என்று கூறுதல் வேண்டுமா ?
இரண்டே என்று கூறியிருந்தாலே போதுமே.!

3. ஏழாஞ் சூத்திரப் பொருள் கைவந்தால் என்ன அனுபவம் நிகழும்?

நான் இரண்டையும் (சித்தையும் அசித்தையும்) அறிபவன் அனுபவிப்பவன் என்பது மட்டுமே உணரப்படும். பிரிந்து நிற்க வேண்டும் என்னும் உணர்வு அனுபவம் எப்பொழுது வரும்? எட்டாஞ் சூத்திரத்தில் ஐம்புல வேடரின் வளர்ந்தனை என்ற உபதேசம் கேட்ட பின்னரன்றோ வரும்!

இது போகட்டும்.

4 மூன்று நான் மூன்றின் அன்றாய் முடிந்தபின் - என்பதற்கு எழுதிய உரையில் மூன்று என்பதற்கு மூன்றாஞ் சூத்திரத்தில் உணர்த்தப்படும் பசு என்று உரை கூறப்பட்டுள்ளது.

5. நான் மூன்றில் அன்றாய் - என்பதற்கு நான்கு மூன்று ஆகிய சூத்திரங்களில் உணர்த்தப்படும் இலக்கணத்தது அன்றாய் முற்றுப் பெற்ற பின்பு- என உரை கூறப்பட்டுள்ளது.

மூன்றாஞ் சூத்திரத்தில் பசுவின் இலக்கணம் கூறப்பட்டுள்ளதா ?

6. மூன்றினன்றாய் என்பதனை மூன்றின் + அன்றாய் என இவ்வுரையாளர் பிரித்துள்ளார். மூன்றின் + நன்றாய் எனவும் பிரிக்கலாமே.

மூன்று நான்மூன்று நன்றாய் முடிந்தபின் என்றொரு பாடமும் உள்ளது (காண்க தருமையாதீனப்பதிப்பு - மெய்கண்ட சாத்திரம் 1942)

7. இதனை அடுத்து உள்ள இரண்டிரண்டே என்பதற்கு அறிவானும் அறியப்படு பொருளுமாகிய இரண்டாய் விளங்கும் என்று எழுதப்பட்டுள்ளது..

இங்கும் இரண்டே எனக் கூறாமல் இரண்டிரண்டே என அடுக்கிக் கூறியிருப்பதாலே இங்கு வேறு பொருள் இருத்தல் வேண்டும் என்பது விளங்குமே.

இது போகட்டும்.

8. நான்காஞ்சூத்திரம் கூறும் இலக்கணம் உடையவனல்லன்; அதற்கு வேறான என்னும் நிலை ஆன்மாவுக்கு எப்பொழுது உண்டாகும்?

ஆறாஞ் சூத்திரப்பொருளும் உணர்ந்து, ஏழாஞ் சூத்திரப் பொருளும் உணர்ந்து அதன்மேல் உண்மை ஞானத்தை உபதேசமுறையில் பெறும் பக்குவம் வந்து - உபதேசம் பெற்றபின்னரன்றோ வரும்!

9. ஏன்ற நான்கு ஈறுமே தாமே என்பதில் நான்கு என்பதற்கு நான்காம் இயல் என்றும் ஈறு என்பதற்குச் சீவன் முத்திநிலையினை என்றும் உரை கூறப்பட்டுள்ளது.

10. பன்னிரண்டு சூத்திரங்களுக்குள் சீவன் முத்தி நிலையை - முப்பத்தாறு தத்துவங்களை - பதி பசு பாசம் என்ற மூன்றை (ஆக முப்பத் தொன்பதை) எனக்குச் சீபரமேசுவரன் மனமிரங்கி அருளிச் செய்தான் என்று உரை முடிவு பெறுகிறது.

11. அறிவானும் அறியப்படு பொருளுமாய் விளங்கும் சீவன் முத்தி நிலையை - என்று உரையில் கூறப்பட்டுள்ளது.

அருளினாலே பதியைத் தன்னறிவின் விளங்கக் காண்க, ஏகனாகி நிற்க, இறைபணி நிற்க என்று கூறியன என்ன ஆயினவோ! தெரியவில்லை.

ஆக இவ்வுரை தாம் புதிய உரை கூறுதல்வேண்டும் எனக் கருதி இடர்ப்பட்டு எழுதப்பட்ட உரையாகத் தெரிகிறதே யன்றி உண்மை உரையாகத் தெரியவில்லை. பலகலை என்னும் பாடலுக்கு வலிந்து எழுதப்பட்ட உரையில் ஒருகாரணம் தெரிகிறது. இதில் எக்காரணமும் தெரியவில்லை.

ஏதோ! பெரியவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்று அமைதி அடையலாம்

இதன்பின்னர் வெளியிடப்பட்ட புதிய உரையிலும் இவ்வுரையே கூறப்பட்டுள்ளது. அது வருமாறு.

மூன்றாஞ் சூத்திரத்தால் பசு உண்மையும், நான்கால் பசு இலக்கணமும், ஏழால் சாதிக்கும் பொருளின் இயல்பும் எனும் மூன்றும் கைவந்தபின் இதுவரை ஒன்றாகவே இருந்த பாசமும் உயிரும் இரண்டாக உணரப்படுவதாம். இது *மூன்று நான்கு ஏழு மூன்றே முடிந்தபின் இரண்டிரண்டே* என்பதன் விளக்கம்.

இனி, *மூன்று நான் மூன்றின் அன்றாய் முடிந்தபின் இரண் டிரண்டே* என்பதன் விளக்கம் வருமாறு: மூன்றாஞ் சூத்திரத்தால் உணர்த்தப்படும் பசு, மூன்று நான்கு ஆகிய சூத்திரங்களில் உணர்த்தப்படும் இலக்கணத்து அன்றாய்ப் பதி அருளைச் சார்ந்தபின் பதியும் ஆன்மாவும் காண்பானும் காணப்படு பொருளுமாக இரண்டாய் விளங்கும்.

பின்னர் ஆன்மா ஏகனாகிச் சிவபோகம் உறும். பொருந்திய பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் என்னும் நான்கு முடிவுகள் பன்னிரு சூத்திரங்களுக்குள்ளே அமைந்திருக்குமாறு முப்பத் தொன்பது பொருளையும் (பசு பசு, பாசம் இவை 3 + 36 தத்துவங்கள்) எனக்குச் சிவபிரான் இரங்கி அருள்செய்தான்.

இவ்வுரையில் பின்னர் ஆன்மா ஏகனாகிச் சிவயோகம் உறும்- என்பது மட்டும் வருவித்துச் சேர்க்கப்பட்டுள்ளது. பிற வேறுபாடு ஏதும் இல்லை.

ஏன் இவ்வாறு இடர்ப்பட்டு உரை எழுதினார்கள் என்பது விளங்கவில்லை.

உ
சிவமயம்

8. இதுவரை இந்நூலில் சிந்திக்கப்பட்ட செய்திகளின் :

1. நூல் அறிவுவிளங்கத் துணை செய்வது.

2. ஒலிவடிவாய் உள்ள எழுத்தை வரிவடிவில் காட்டுவது.

3. தமிழில் நூலுக்கு இலக்கணம் மிகப் பழங் காலத்திலேயே தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் கூறப்பட்டுள்ளது.

4. நூல் என்பது பெரும்பாலும் இலக்கண நூல்களையே குறிக்கும். சிறுபான்மை உலகியல் நூல்களையும் ஞானநூல்களையும் குறிக்கும்.

5. தொல்காப்பியத்தில் நூல் என்பது முதல் நூல், வழி நூல் என இரண்டாக வகுக்கப்பட்டது.

6. வழிநூல் நான்குவகைப்படும். அவை: தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்தல் என்பன.

7. பிறமொழியிலுள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் வழக்கம் மிகப் பழங்காலத்திலேயே இருந்தது. அத்தகைய நூல்கள் அப் பிற மொழி நூல்களுக்கு வழி நூலாகவே கருதப்பட்டன.

8. பிறமொழிகளிலிருந்து நூல்களை மொழி பெயர்க்கும் போது பிற மொழியில் உள்ளவாறே மொழி பெயர்த்தல் வேண்டும். தொகுத்தோ விரித்தோ மொழி பெயர்த்த லாகாது என்னும் கொள்கை பழங்காலத்தில் இருந்தது.

9. தொல்காப்பியருக்குப் பின்னர் வந்த இலக்கண உரையாசிரியர்கள் புடை நூல் - சார்பு நூல் என்றொரு வகை கூறினர்.

10. அதனை நன்னூலார் தமது நன்னூலின் பொதுப் பாயிரத்தில் சேர்த்து வைத்தார்.

11. இதன் பின்னர் நூல் முதல், வழி, புடை என மூவகைப்படும் என்னும் கொள்கை நிலைபெற்றது.

12. இவையன்றி எதிர் நூல் என ஒருவகை யினையும் உரையாசிரியர்கள் தம் உரையில் கூறி வைத்தனர்.அது கண்டன நூல் எனப்படும்.

13. முனைவன் (இறைவன்) செய்த நூல் முதல் நூல்; ஏனைய நூல்கள் அதன் வழி நூல் என்ற அளவே தொல்காப்பியரால் கூறப்பட்டது.

14. இறைவன் செய்த நூல் இப்பொழுது தமிழில் இல்லை.இறையனார் அகப் பொருள் என்பது தமிழில் இறைவன் செய்த நூல் என்று கருதப்படுகிறது.

15. உரையாசிரியர்கள் முனைவன் தமிழில் நூல் செய்யவில்லை. எனவே இறைவன் அருள்

வழிப்பட்டவர்கள் செய்தளித்த நூல் தமிழில் முதல்நூல் என்று ஏற்றுக் கொள்ளப்படும் என்றொரு கொள்கையைத் தம் உரையில் கூறிவைத்தனர்.

16. இறைவன் அருள்வழிப்பட்ட குரவர்கள் செய்து வைத்தவையும் முதல் நூல். அத்தகைய முதல் நூல்கள் தமிழில் (திருக்குறள், பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட நூல்கள், பண்டார சாத்திரங்கள்) மிகப்பல உள்ளன.

17. நன்னூலார் வழி நூல் என்பது முன்னோர் நூல்களின் முடிவை முழுவதும் ஒத்துப் பிற்காலத்தில் ஏற்பட்ட விகற்பங்களும் (விகற்பம் - வேறுபாடு) இடம் கொடுத்துச் செய்யப்படுவதுவழிநூல்.

18. முதல் நூல் வழி நூல்களின் முடிபுகளை ஓரளவு ஒத்துப் பலவேறு திரிபுகளுக்கும் இடங் கொடுத்துச் செய்யப்படுவது சார்பு நூல் என இலக்கணம் கூறினார்.

19. நன்னூலார் கூறிய முடிபு ஒருங்கு ஒத்தது வழிநூல் - ஒரு சிறை தொடங்கியது சார்பு நூல் என்றும் பின்னோன் வேண்டும் விகற்பத்துக்கு இடங் கொடுத்துச் செய்யப்படுவது ,வழி நூல் வேறு திரிபு உடையது சார்பு நூல் என்றும் கூறிய இலக்கணம் தெளிவில்லாததாக உள்ளது.

20. சார்பு நூலுக்குக் கூறிய இலக்கணம் வழிநூலுக்கும் செல்வதாக இருக்கிறது.வழி நூலுக்குக் கூறிய இலக்கணம் சார்புநூலுக்கும் செல்வதாக இருக்கிறது.

21. சிலர் இறைவன் நூல் தான் முதல் நூல். அது ஒன்றே ; பல அல்ல. இறைவன் நூலின் வழியாகத் தோன்றியது வழிநூல்; அதுவும் ஒன்றே; பல அல்ல. வழி நூலிலிருந்து பல நூல்கள் தோன்றலாம். அவையெல்லாம் சார்பு நூல்களே என்று கருதினர்.

22. சிலர் இறைவன் நூலே முதல் நூல். அது வழி நூலாவதில்லை. இறைவன் நூலின் வழித் தோன்றிய நூல் வழி நூல். அந்த வழி நூலின் வழி மூன்றாவது ஒரு நூல் தோன்றுமானால் முந்தைய வழி நூல் முதல் நூல் எனப்படும். இவ்வாறு பின்னர் பின்னர் தோன்றும் நூல்களை நோக்கி முன்னர் முன்னர் தோன்றிய நூல்கள் வழி நூல் என்றும் முதல் நூல் என்றும் மாறி மாறிப் பெயர் பெறும்.

23. உரையாசிரியர்கள் முதல் நூலுக்கும் வழி நூலுக்கும் உள்ள உறவு தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவு போன்றது; சார்பு நூலுக்கு உள்ள உறவு மருமகன் உறவு (மருமகன் - மகளின் கணவன் அல்லது சோதரியின் மகன்) போன்றது என இம் மூன்று நூல்களுக்குமிடையே உள்ள தொடர்பினை உவமை கூறிவிளக்கினர்.

24. முதல் நூலுக்கும் வழி நூல், சார்பு நூல் களுக்குமிடையே விகற்பங்களும் திரிபு களும் காணப்படும் என்பது முதல் நூல் தோன்றிய பின்னர் மிகப் பல நூறாண்டுகள் கழித்துத் தோன்றும் வழிநூல் சார்புநூல்களுக்கே பொருந்தும்.

25. தமிழ் இலக்கண நூல்களுள் அகத்தியம் முதல் நூல்; தொல்காப்பியம் வழி நூல்; நன்னூல் சார்பு நூல். சார்பு நூலாகிய நன்னூலில் பலவேறு திரிபுகள் காணப்படுகின்றன. எனினும் அத்திரிபு கள் அடிப்படையில் ஒற்றுமை உடையனவாய் - மரபுக்கு மாறுபடாதனவாய் - உள்ளன.

26. இறையனாரகப் பொருள் உரை - வழி நூல் என்பது முன்னோர் நூலின் பொருளையும் அமைப்பையும் முழுவதுமாக ஒத்திருக்கும். சார்பு நூல் என்பது முன்னோர் நூலின் பொருளை ஒத்திருக்கும்; ஆனால் அமைப்பு முறையில் வேறு பட்டிருக்கும் என்று விளக்கம் கூறுகிறது. இது வழி நூல், சார்பு நூல்களை நன்கு வேறுபடுத்திக் காட்டுவதாக உள்ளது.

27. முதல் நூலின் பொருள் முடிபு, நூல் அமைப்பு முறை என இரண்டு வகையாலும் முதல் நூலை ஒத்திருப்பது வழிநூல். எனினும் இவ்வழி நூலில் முதல்நூலில் தெளிவாகச் சொல்லாது விட்ட சில செய்திகள் விரிவாக எடுத்துச் சொல்லப் பட்டிருக்கும். முதல் நூலில் விரிவாகச் சொல்லப்பட்ட செய்திகள் அங்கே சொல்லப் பட்டு விட்டது எனச் சுருக்கமாகச் சொல்லப் பட்டிருக்கும்.

28. தமிழில் சித்தாந்த சைவத் தத்துவ ஞானத்துக்கு மூலமாகப் பதினான்கு நூல்களைக் கொண்ட தொகுப்பு ஒன்று உள்ளது. அது மெய்கண்ட சாத்திரம் என வழங்கப்படுகின்றது.

29. மெய்கண்ட சாத்திரத் தொகுப்பில் உள்ள சிவஞான போதம் முதல் நூல் எனவும் சிவஞான சித்தியார் வழி நூல் எனவும் சிவப்பிரகாசம் சார்புநூல் எனவும் வழங்கப்படுகின்றன.

30. சிவஞான போதம் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது என்று ஒரு கருத்தும் உண்டு. அது உண்மையாயின் சிவஞான போதம் வழியின் வகைகளுள் ஒன்று எனல் வேண்டும். இக் கொள்கையை உருவாக்கியவர் மதுரைச் சிவப்பிரகாசர் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

31. மதுரைச்சிவப்பிரகாசர் சிவப்பிரகாசத்துக்குப் பதவுரை, பொழிப்பு, நுட்பம் என்னும் வகையில் பல நூல்களின் மேற்கோள்களும் காட்டி மிக விரிந்த உரை செய்தவர்.

32. மதுரைச்சிவப்பிரகாசர் தம் உரையின் முன்னு ரையில் சிவ ஞானபோதம் வடமொழியில் உள்ளது முதல் நூல், தமிழில் உள்ளது அதன் மொழிபெயர்ப்பாகிய வழி நூல், சிவஞான சித்தியார் தமிழ்ச் சிவஞான போதத்தின் வழி நூல், சிவப்பிரகாசம் சார்பு நூல் என எழுதினார்.

33. முதல் நூல், வழி நூல், சார்பு நூல்களுக்கு இலக்கணமாக நன்னூலில் பொதுப் பாயிரத்தில் உள்ள சூத்திரங்களைக் காட்டினார்.

நன்னூல் கூறும் இலக்கணம் போதம், சித்தி, பிரகாசம் என்னும் நூல்களுக்குப் பொருந்தாது.

34. சிவஞானபோதம் சந்தானகுரவர்களுள் முதல்வர் செய்த முதல் நூல் இது சூத்திரயாப்பில் சுருக்கமாகவும் - வார்த்திகம் என்னும்சுருக்கமான பொழிப்புரையுடைய தாகவும் செய்யப்பட்டது.

35. சிவஞானசித்தி முதல் நூலின் பொருளுக்கும் நூல் அமைப்புக்கும் மாறுபடமால் செய்யுள் வடிவில் அமைந்த விருத்தியுரைபோல் செய்யப்பட்ட வழிநூல்.

36. மதுரைச் சிவப்பிரகாசர் சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைக்கு மாறுபட்ட கருத்தையும் சில இடங்களில் எழுதுபவர்.

37. தொல்காப்பியத்திலிருந்து நன்னூல் திரிபுவேறு உடையதாகச் செய்யப்பட்டது போல் சிவப்பிர்காசம் சிவஞான போதத்திலிருந்து திரிபு வேறு உடையதாகச் செய்யப்பட வில்லை. பகுப்பு வேறுபாடு மட்டுமே உடையதாகச் செய்யப்பட்டது.

38. தொல்காப்பியத்துக்கும் நன்னூலுக்கு மிடையே பல நூற்றாண்டுகள் கால இடைவெளி உள்ளது போல் சிவஞான போதத்துக்கும் சிவப்பிரகாசத் துக்கும் இடையே கால இடைவெளி இல்லை.

39. சிவஞானபோதம், சித்தி, பிரகாசம் மூன்றும் சித்தாந்த சைவத்தத்துவஞான நூல்க்களா தலின் விகற்பமோ, திரிபோ ஏற்பட வழியில்லை.

40. உரைகாரர்கள் முதல் நூல் கருத்தைப் பிறழ உணர்ந்து கொண்டு வழி நூல் சார்பு நூல்களுக்கு அவ்வடிப்படையில் உரை செய்திருக்கலாம். அவை பொருத்தமற்றன எனக் களையப்படும்.

41. சிவப்பிரகாசம் முதல் நூல் வழி நூல்களின் பொருளில் மாறுபடாமல் நூல் அமைப்பில் மட்டும் வேறுபாடு உடையதாய் மிகச் சுருக்கமும் இல்லாமல் மிக விரிவும் இல்லாமல் செய்யுள் நடையில் செய்யப்பட்ட சார்பு நூல்.

42. புடை நூலாகிய சிவப்பிரகாசம் பொது, உண்மை என்னும் இருபகுப்பு உடையதாகச் செய்யப் பட்டது; உண்மை என்னும் பகுதி ஏழு தலைப் புக்கள் உடையதாகப் பகுத்துச் செய்யப்பட்டது.

43. சிவப்பிரகாசம் முதல் நூலில் உள்ளது போல் சூத்திரப் பகுப்போ, இயல் பகுப்போ, சூத்திரங்களில் அதிகரணப்பகுப்போ உடைய தாகச் செய்யப்படவில்லை.

44. சிவப்பிரகாசம் முதல் நூல் வழி நூல்களைப் போல் சூத்திரப் பகுப்பு உடையதாகச் செய்யப்பட வில்லை என்றாலும் பன்னிரு சூத்திரக் கருத்தும் உடையதாகவே - பெத்தம் முத்தி என்பவற்றைச் சொல்வதாகவே செய்யப்பட்டது.

45. திருவாவடுதுறை ஆதீனத்தில் சிவப்பிரகா சத்துக்குப் பன்னிரு சூத்திரப் பகுப்புக் காட்டி உரை செய்வது மரபாக இருந்து வருகிறது.

46. சுவாமிநாத தேசிகர் பலகலையும் எண்ணரிதும் என்னும் செய்யுளில் சிவப்பிரகாசத்தில் பன்னிரு சூத்திரக் கருத்துகள் கூறத் தொடங்கும் செய்யுள்களின் முதல் நினைப்புக் கூறியுள்ளார்.

47. திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச் சிவஞானமுனிவரின் மாணாக்கர் எனப்படும் இலக்கணம் சிதம்பரநாத முனிவர் சிவப்பிரகா சத்துக்குப் பன்னிரு சூத்திரப்பகுப்புக் காட்டியே உரை செய்தார்.

48. சுவாமிநாத தேசிகர் அருளிச்செய்த பலகலையும் எண்ணரிதும் என்னும் பாடலுக்கு - பன்னிரு சூத்திரக் கருத்துத் தொடங்கும் விருத்தங்களின் முதல் நினைப்பு கூறுகிறது என உரை செய்யாமல் - வேறு உரை செய்யப்பட்டுள்ளது. அதன் பொருத்தம் ஆராய்வதற்குரியது.

49. மாதவச்சிவஞான முனிவர் சிவப்பிர காசத்துக்கு உரை செய்யவில்லை.

மாபாடியத்தில் சில விருத்தங்களுக்குமட்டும் உண்மை உரை காட்டியுள்ளார். உமாபதி சிவத்தைப் புடை நூலாசிரியர் என்றும் சிவப்பிரகாசத்தைப் புடை நூல் என்றும் சிறப்பித்துக் கூறும் வழக்கம் உடையவர்.

50. இலக்கணம் சிதம்பர நாத முனிவர் உரையைப் பெரிதும் பாராட்டும் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் 229 ஆம் பட்டம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சிவப்பிரகாசத்துக்கு சிதம்பரநாத முனிவரைப் போல் பன்னிரு சூத்திரப் பாகுபாடு காட்டி உரை செய்யவில்லை.

51. புடைநூலாகிய சிவப்பிரகாசத் திருவிருத் தங்களின் கருத்துக்களைச் சிந்தித்தோம்.

முடிவுரை:

1. சிவப்பிரகாசம் பொருள் வகையால் சிவஞானபோதத்தை முழுவதும் ஒத்திருக்கிறது.

2. சூத்திரப்பாகுபாடு வகையில் ஒத்திருக்க வில்லை.

3. சுவாமிநாத தேசிகர் அருளியதாகக் கூறப்படும் பலகலை என்னும் பாடல் சூத்திரப் பாகுபாட்டினைக் கூறவில்லை. பொருள் பாகுபாடு கூறி - அப் பொருள்கள் தொடங்கும் பாடலுக்கு முதல் நினைப்பு மட்டுமே கூறுகிறது.

என்னும் செய்திகள் முடிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஈரோடு சைவ சித்தாந்த சபை வெளியீடுகள்:

1. காலவ முனிவர் பெற்ற ஞானமும் முத்தியும்.
   முனைவர் ர. வையாபுரி.எம்.எ.,பிச்டி.,
2. திருக்கோயில் வழிபாடு (தொகுப்பு)
3. ஞானத்தவம் அந்தமிலா ஆனந்தம்.
   சித்தாந்தச் செல்வர் சு.மாணிக்கவாசகம்.
4. மௌன உபதேசம்.
   முனைவர் கோ.ந.முத்துக்குமாரசுவாமி.எம்.எ., பிஎல்., பிச்டி.,
5. தமிழ் வழக்கும் அயல் வழக்கும்.
   பொறியாளர் பா.ந.ரத்தினவேல். பி.இ . எம்ஐஇ., எம்ஐவி.
6. உலகுடைய நாயனுர் கழிநெடில்.
   முனைவர் ர. வையாபுரி.எம்.எ.,பிச்டி.,
7. புடை நூலும் பன்னிரு சூத்திரங்களும்.
   முனைவர் ர. வையாபுரி.எம்.எ.,பிச்டி.,

ஏகனாகி இறைபணி நிற்க

சிவாய நம

சைவ சித்தாந்த சபை, ஈரோடு

அன்புடன்: சிவா கிராபிக்ஸ், திருமுருகன்பூண்டி, அலைபேசி: 98940 50402.